விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 24 சனிக்கிழமை (07.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 050

# இலங்கை மீதான தீர்மானத்தை ஒத்திவைக்க அமெரிக்கா கோரும்

## இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவிப்பு

(சென்னை)

**இலங்கை மீதான தீர்மானத்தை ஒத்திவைக்குமாறு அமெரிக்கா, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கக்கூடும் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டே அமெரிக்கா இவ்வாறு

23ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் ஹக்கீமுக்கு எதிராக சாய்ந்தமருதுவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி தொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த தீர்மானத்தைக் கண்டித்து அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்தில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலில் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையின் பின்னர் இந்த ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்

24ஆம் பக்கம் பார்க்க....

## மேர்வின் சில்வாவுக்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாணசபை உறுப்பினர் சிசிர ஜெயக்கொடி, நேற்று முன்னாள் பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

பல்வேறு ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் பிபிதென கௌனிய என்ற

23ஆம் பக்கம் பார்க்க....

## கிழக்கு முதலமைச்சர் நேற்று பதவியேற்பு




(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் இராணுவக் குறைப்பு ஒருபோதும் மேற்கொள்ளப்படாது



### இராஜாங்க அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கிலுள்ள இராணுவத்தினை எக்காரணம் கொண்டும் குறைக்க மாட்டோம் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களினை அகற்ற மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.பலாலிக்கு நேற்று பி.ப 3

23ஆம் பக்கம் பார்க்க....

## துறைமுக நகரத்திட்டத்தை தொடர அரசு தீர்மானம்!

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளதாக அமைச்சரவையின் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவின் அனுசரணையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இந்த செயற்பாடுத்திட்டம் தொடர்பில மேற்கொள்ளப்பட்ட செயலாக்க ஆய்வு மற்றும் சூழலியல் நிலைகள் தொட

24ஆம் பக்கம் பார்க்க....

## உலக வங்கியின் பணம் எங்கே?

(கொழும்பு)

உலக வங்கி இலங்கைக்கு வழங்கிய கடன்தொகை மற்றும் நிவாரணம் எவ்வாறு செலவாகியது என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் உலக வங்கியிடம் கோரிக்கை விடுக்க தீர்மானித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....


## சீனாவுக்கிடையில் விமான சேவை

(கொழும்பு)

சீனாவின் விமான சேவை நிறுவனம் எதிர்வரும் 10ஆம் திகதி இலங்கைக்கான தனது உத்தியோக பூர்வ சேவையை ஆரம்பிக்க உள்ளது.

எயார் சைனா விமான சேவையின் சீ.ஏ.425 இலக்க விமானம்

24ஆம் பக்கம் பார்க்க....



இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சீன உதவி வெளிவிவகார அமைச்சர் லியூ ஜியன் சோ நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேசினார். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு சீன உதவி வெளிவிவகார அமைச்சர் தனது வாழ்த்தைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் ஜெயந்த தனபால, வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் சித்திராங்கனி வாகிஸ்வர ஆகியோர் உடனிருந்தனர்.

## இராஜதந்திரிகள் 36 பேரை மீள அழைக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் அரசியல் செல்வாக்கில் இராஜதந்திரிகளாக நயமிக்கப்பட்ட 36 பேரை நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் அரசியல் செல்வாக்கில் இரண்டாவது மற்றும் மூன்றாவது தரத்தில் செயலாளர்க

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடப் போவதில்லை!

### சீனா உறுதியளிப்பு



(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் தாம் தலையிடப்போவதில்லை என்று அறிவித்துள்ள சீனா, இலங்கையைப் பயன்படுத்தி, வேறு எந்த நாடுகளுக்கும் எதிராக தாம் செயற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது. இரண்டு நாள் பயண

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வீடு வாடகைக்கு

புலோலி புற்றளை சிலையடி மில் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 0775819221

(சி-035)

## வேலையாட்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு நீர்கொழும்பில் தங்கியிருந்து வேலைசெய்வதற்கு வேலையாட்கள் தேவை

- மாதவேதனமாக ரூபாய் 24,000/= வழங்கப்படும்.
- இலவச தங்குமிட வசதி உண்டு.
- ஆண்கள் மட்டும். வயது 18 - 25 வரை

தொடர்பு: கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்

11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P 021 222 3857

(9447)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


# மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 03 . 1953

மறைவு 06 . 02 . 2015

## சிவம் - ஜெயராணி

(வீரமாணிக்கம் தேவன்துறை- மயிலிட்டி)

வீரமாணிக்கம் தேவன்துறை மயிலிட்டியை நிரந்தர முகவரியாகவும், இல. 126, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் வசித்தவரும் 4-ம் குறுக்குத்தெரு பருத்தித் துறையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சிவம் - ஜெயராணி நேற்று (06.02.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரை - ஈச்சம்மா தம்பதியரின் அன்பு மகளும், தாமோ தரம்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் மருமகளும், சிவத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற ஜெயராம் மற்றும் சிவராம், சிவாளினி, குலராம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஸ்ணனின் (லண்டன்) அன்பு மாமியா ரும், பிரணவியின் பேர்த்தியும், கணேசலிங்கம், அற்புதராணி, அமிர்தலிங்கம் (லண்டன்), சின்ராசா எனப்படும் நடேசலிங்கம் (லண்டன்), சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.02.2015 (சனி) பி.ப 3 மணிக்கு அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ம் குறுக்குத் தெரு,<br>பருத்தித்துறை.

தகவல்:<br>குடும்பத்தினர்

(சி-032)

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

அமரர் இரத்தினம் பிறேமரட்ணம்

(மல்லி அண்ணா)

தோற்றம் : 08.11.1954 - மறைவு: 23.01.2011



திதி :- 07.02.2015 சங்கடஹரசதுர்த்தி

கனமான குரலோடு கருணைமிகு<br>
கண்களோடும்<br>
சினமேனும் அறியாது சிரித்திடும்<br>
வதனத்தோடும்<br>
பாகுபாடற்ற பரந்த மனப்பான்மை<br>
கொண்ட பண்பும்<br>
அந்தரித்து வருவோர்க்கு அள்ளி<br>
வழங்கும் குணமும்<br>
தனித்திருக்கும் எமக்கு எமது<br>
இதயத்தில் உறைந்து<br>
நாம் காணும் சாதனையில்<br>
நிலைக்கும் அப்பாவே!<br>
பிரிவே அறியாத எம்மை பிரிந்து<br>
ஆண்டு நான்கு சென்றதுவோ!<br>
ஆறாது நம் துயர் உங்கள் நினைவில்! அப்பா!

வி.மு.வீதி,<br>பருத்தித்துறை.

தகவல் :<br>மனைவி, மருமகன்,<br>பிள்ளைகள், பேர்த்தி.

(சி-034)

# 15-ம் பிறந்த தின நினைவலைகள்...

## சண்முகநாதன் அருள்நங்கை தம்பதிகளின் தெய்வத் திருமகன் தெய்வமணம்கமழ் சந்துதன் அவர்கள்



தெய்வத்திருமகன் சந்துதனே<br>
உன் திருமுகம் கண்முன்<br>
என்றும் நினைவலைகள் தொடராய்<br>
இன்றும் மறக்கமுடியவில்லையே<br>
சிட்டாய் பறந்த சின் பறவையே<br>
எப்பவும் தெய்வ சந்துதமாய்<br>
திகழ்திருவாயே!

*என்றும் மறவா மாமா:* சோமையா<br>
சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்<br>
(B.A,Dip. Edu, MA பிரதி அதிபர்)<br>
யா/ கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை<br>
தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன்<br>
ஸ்ரீ இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளியம்மன்<br>
வட பத்திரகாளியம்மன் தேவஸ்[illegible]த்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருட்களின் விலை குறைக்கப்படவில்லையா? உடன் முறையிடவும்

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் கீழ் விலை குறைக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லையாயின் அது தொடர்பில் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் உணவகஉரிமையாளர்கள்சங்கம்ஆகியவற்றிடம் முறையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


இதற்கமைய, 071 602 7912 - 078 871 4726 -077 720 5137 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு இது தொடர்பில் முறையிடுமாறு அவ்விரு சங்கங்களும் கோரியுள்ளன.

தங்களுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் கண்டறிந்து அவற்றை உறுதி செய்துகொண்டு நுகர்வோர் அதிகார சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அச்சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதற்கமைய, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், கோதுமை மா, பாண் மற்றும் பேருந்து கட்டணங்கள் உள்ளிட்ட, இடைக்கால வரவு -செலவுத் திட்டத்தின் கீழ் விலைகள் குறைக்கப்பட்ட பொருட்கள் தொடர்பில் முறையிடலாம் என்றும் அச்சங்கங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-5)

# வேட்பாளர் யார் என்பதை சு.க.தீர்மானிக்க வேண்டும்

### முன்னாள் அமைச்சர் திஸ்ஸ தெரிவிப்பு



**(கொழும்பு)**

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடும் என அதன் செயலாளரான முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சிறந்த தொடர்புகளுடன் தமது கட்சி செயற்பட்டு வருவதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே பிரதமர் வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கம்யூனிஸ்ட் கட்சி தனித்து போட்டியிட போவதில்லை. சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டணிக் கட்சியாக போட்டியிடும்.

தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தனிக்கட்சியை ஆரம்பிக்க போவதாக முன்னெடுக்கப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை எனவும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி உட்பட 4 இடதுசாரிகள் கட்சிகளின் கூட்டணியின் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறுத்தப்பட வேண்டும் என அந்த முன்ன ணியின் சில கூட்டணிக்கட்சிகள் முன்வை த்துள்ள யோசனை குறித்து கருத்து வெளி யிட்ட திஸ்ஸ விதாரண,

பிரதமர் வேட்பாளர் யார் என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே தீர்மானிக்க வேண்டும் எனவும் கூட்டணிக் கட்சிகள் பிரதமர் வேட்பாளரை தீர்மானிக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மைதான கழிவு வாய்க்காலை வவு.நகர சபை கவனிக்குமா?



வவுனியா, நகரசபை மைதானத்தில் காணப்படும் கழிவு வாய்கால்களில் உள்ள வெற்றுப்போத்தல்கள், பொலித்தீன் பைகளினால் டெங்கு பரவும் அபாயம் உள்ளதாக மைதானத்தை பயன்படுத்தும் வீரர்களும் பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, நகரசபை மைதானத்தின் கரையோரமாக நகர சபைக்குள் இருக்கின்ற கழிவு வாய்க்கால்களில் ஏராளமான வெற்றுப் போத்தல்கள், பொலித்தீன் பைகள், குப்பை கூழங்கள் காணப்படுகின்றன. வவுனியாவில் கடந்த சில நாள்களாகப் பெய்த மழை காரணமாக அவற்றில் நீர் தேங்கி நுளம்புகள் பெருகக் கூடிய நிலை உருவாகியுள்ளதுடன் கழிவு வாய்கால்களின் சில பகுதிகளில் துர்நாற்றமும் வீசுகின்றன.

இதனால் மைதானத்தில் உடற் பயிற்சிக்காக வருபவர்களும் விளையாட்டு வீரர்களும் நோய்த் தொற்றுக்கு உள்ளாகக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை கவனம் செலுத்தி நகரசபை சுத்திகரிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை, வவுனியா நகரசபைக்குட்பட்ட சில பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவை சுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மொஹான் பீரிஸ் பதவி விலகலுக்கு மங்கள சமரவீரவே முழுக் காரணம்

### தினேஸ் குணவர்தன குற்றச்சாட்டு

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிசை சட்டவிரோதமாக பதவியை விட்டு விலக்கிய நாடகத்தின் இடைத்தரகராக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர செயற்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிசை பதவியிலிருந்து நீக்கிய செயலானது பாராளுமன்ற இறைமைக்கும், அரசியலமைப்புக்கும் விரோதமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவே இந்த பதவி விலக்கல் நாடகத்தின் இடைத்தரகர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பரிசுத்த பாப்பரசர் இலங்கைக்கு வருகை தந்த போது மொஹான் பீரிசே பிரதம நீதியரசர் என அறிமுகப்படுத்தினர்.

இந்நிலையில் அவரின் பதவிப்பிரமாணம் எவ்வாறு சட்டவிரோதமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் முன்னாள் பிரதம நீதியரசரின் பதவியை இராஜினாமா செய்யுமாறு கோரியது அவரின் பதவியேற்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டதினால் தானே, இது மிக பெரிய நாடகமில்லையா? என பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

# இராசி பலன்

07.02.2015
(தை 24, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
திருதியை முற்பகல் 11.27 மணிவரை
உத்தரம் முழுவதும்
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை
சுபநேரம் 3.35-5.05 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்,
சண்டேசுரர் குருபூசை

வளவன்

**மேடம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரும் நாள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக கணபதியை வழிபட வேண்டிய நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம்.

**கடகம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உடன்பிறப்புக்கள் உதவி செய்ய முற்படுவீர்கள்.

**சிம்மம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த்தொடர்புகள் அதிகரிக்கும்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், செலவுகள் அதிகரித்தாலும் அதற்காக கவலைப்பட மாட்டீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** புதிய பொருட்சேர்க்கையுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**தனுசு:** குடும்ப ஒற்றுமை கூடும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், உதிரி வருமானங்கள் வந்து சேரும் நாள்.

**மகரம்:** வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், உஷ்ண சம் பந்தமான ரோகங்கள் ஏற்படலாம் ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்

**கும்பம்:** எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், நிதானத் துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.

**மீனம்:** சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய் பொருட் சேர்க்கையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய உலகம்

**இந்த சிறுமியைப் பார்த்து பொறாமைபடாத பெண் யாராவது இருப்பாங்களா?....**





பிரேசிலில் வாழ்ந்துவரும் 14 வயது சிறுமி ஒருவர் பிறந்தது முதல் தலைமுடியை வெட்டாமல் சுமார் 1.6 மீட்டர் நீளத்திற்கு தலைமுடியை வளர்த்துள்ளார்.

பிரேசிலின் Rio De Janeiro-வில் வாழ்ந்து வரும் Natasha Moraes de Andrade என்ற அந்த சிறுமி, பிறந்தது முதலே தலைமுடியை வெட்டாமல் வளர்த்துள்ளார்.

இவர் இவ்வாறு தன் உயரத்திற்கு தலைமுடியை வளர்த்துள்ளதால், மற்ற சிறுமிகளை போல இயல்பாக இருக்கமுடியாததோடு வீட்டிற்குள்ளேயே சிறைபட்டு கிடந்துள்ளார்.

தனது நீண்ட தலைமுடியை பராமரிக்க தினமும் ஒன்றரை மணி நேரங்களை செலவிட வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவர் தனது தலைமுடியை பராமரிக்க பயன்படுத்தும் ஷாம்பூவை வாங்க ஆண்டு ஒன்றுக்கு சுமார் 400 பவுண்டுகள் செலவாகுவதாகவும், இது தங்கள் குடும்பத்திற்கு பெரிய செலவாக உள்ளதாகவும் சிறுமியின் தாயார் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிறந்தது முதல் வெட்டாமல் வைத்திருந்த தலைமுடியை சுமார் 4,500 டொலர்களுக்கு விற்கபோவதாகவும், அந்த பணத்தின் மூலம் தனது படுக்கையறையை புதுப்பிக்கபோவதாகவும் கூறியுள்ளார். எனினும் தலைமுடி வெட்டுவதன் மூலம், தான் புதிய வாழ்க்கை வாழ்வதை உணர்வார் என்று கூறியுள்ளார்.

# சமைப்போம் சுவைப்போம்

## ரவா கேசரி

**தே.பொருட்கள்:-**

ரவை - 1 கப்
தண்ணீர் - 2 1/2 கப்
சர்க்கரை - 1 3/4 கப்
நெய் -3/4 கப்
கேசரி கலர்- சிறிதளவு
ஏலப்பொடி- சிறிதளவு
முந்திரிப் பருப்பு- ஒரு கைப்பிடி
கிஸ்மிஸ்-1 தேக்கரண்டி



**செய்முறை:**

1. அடுப்பில் வாணலியில் 2 தேக்கரண்டி நெய் விட்டு கிஸ்மிஸ், முந்திரியை நன்கு வறுத்து தனியாக எடுத்துக் கொள்ளவும்.
2. மீண்டும் 2 தேக்கரண்டிநெய் விட்டு ரவை வாசனை போகும் வரை சிவக்க வறுக்கவும்.
3. இரண்டரை கப் தண்ணீரைச் சேர்த்து அடுப்பை நிதானமாக வைத்து நன்கு வேகவைக்கவும்.
4. ரவை நன்கு வெந்ததும் சர்க்கரை, கேசரி கலரைச் சேர்த்துக் கிளறவும். சர்க்கரையால் கலவை மீண்டும் தளரும்.
5. ஒட்டாமல் சேர்ந்து வரும்வரை இடையில் சிறிது சிறிதாக நெய் விட்டுக் கொண்டே கிளறவும்.
6. கேசரியை இறக்கும் முன் மிச்சமுள்ள நெய், ஏலப்பொடி தூவி இறக்கவும்.
7. வறுத்து வைத்திருக்கும் கிஸ்மிஸ், முந்திரியைக் கலந்து கொள்ளவும்.
8. கேசரியை ஒரு நெய் தடவிய தட்டில் கொட்டி, மேலே மீதி கிஸ்மிஸ் முந்திரி தூவி, வில்லைகள் போடலாம்

# மரண அறிவித்தல்



## ஐயம்பிள்ளை வீரகத்தி

நயினாதீவு 4-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும், தற்காலிகமாக 48, புறுடி லேன், அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை வீரகத்தி 06.02.2015 வெள்ளிக்கிழமையன்று நாகபூசணி அம்பிகையின் திருவடி நிழலை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை நாகமுத்து தம்பதியினரின் ஏகபுதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கண்மணி ஆகியோரின் அன்புக் கணவரும், சிவலிங்கம், மகேஸ்வரி, அமரர் சண்முகலிங்கம், தருமலிங்கம், இராசலிங்கம், பஞ்சலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஈஸ்வரி, முத்துக்குமாரு, தனலட்சுமி யோகேஸ்வரி, சிவமலர், நவமணிதேவி, சந்திரபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌசலா - பகீரதன், தேவிகா, குகதாசன், நிசாந்தா - பிரசன்னா, மனோகரன், சுகந்தி - ஸ்ரீதரன், சுமித்தா - மதிகரன், ஜெகந்தி - தர்மசீலன், கோமதி - சிவானந்த், கோகிலா - ஜெயக்குமார், மனோஜா - தர்மசீலன், மோகனா, சத்தியசீலன், சோபா - உதயகுமார், துசித்தா, கீர்த்திகன், விசாலினி, குகவரன், குருபரன், குகதர்சன், விதுசாயினி, பவதாரணி, நிலக்சி, விசாகரன் ஆகியோரின் அன்புப் பேரனும், சஹானா, சுபீரன், பிரதிஷ்ணன், கிஷானன், மதுஜி, கபிஸ்ணன், சாருஸ்ணன், சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

**077 9054 873 / 077 2144 984**
**077 3187 310 / 077 4215 079**

**தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணக்க அரசியல் பாதையில் த.தே.கூ.தொடர்ந்து பயணிக்குமா?


## முன்னாள் எம்.பி.குகேந்திரன் கேள்வி

தேசிய அரசியலுக்குள் தாமும் இணைய வேண்டும் என துடிக்கின்றனர் கூட்டமைப்புக்குள் இருக்கும் ஒருசாரார். இல்லை கடந்த கால கொள்கைகளை கைவிட்டால் புலம்பெயர் தேச சிலரது கோபத்துக்குள்ளாகி கிடைக்கின்ற அரசியல் பதவிகளும் பணங்களும் பறிபோகிவிடும் என பதறுகின்றனர் பலர்.

என்ன செய்ய தமிழினத்தின் தலைவிதியை கடவுள் கூட நிர்ணயிக்க முடியாதளவுக்கு அவர்களது தலையெழுத்து அமைந்துவிட்டது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

சமகால அரசியற் செயற்பாடுகள் தொடர்பாக யாழ்.கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களது தலை விதியை ஒருபிரிவினர் மட்டும் தான் நிர்ணயிக்க வேண்டும் என்ற மமதையிலிருப்பவர்களுக்கு இலங்கையின் 67 சுதந்திர தினம் மத்திய அரசுடன் இணக்கப்பாட்டை கொண்டிருந்தால்தான் எத்தகைய தீர்வுகளானாலும் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்ற யதார்த்தமான ஒரு பாடத்தை சொல்லியிருக்கிறது.



அன்று தமிழ் மக்களது போராட்டத்தை வழி நடத்திய போராளிகளும் இன்றைய அரசியலில் அரசியற் போராளிகளாக மக்களுக்கு சேவைசெய்து வருகின்றனர். இவர்களுள் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் உள்ளடங்கும். ஏனைய பல அமைப்புகளை சேர்ந்த போராளிகளும் இதில் உள்ளடங்குவர். ஒதுக்கப்பட்ட பல புத்திஜீவிகளும் உள்ளனர். இத்தகைய உதாசீன செயற்பாடுகளின் பரிணாமம் தான் ஊடகவியலாளர் வித்தியாதரனால் உருவாக்கபபடவுள்ளதாக கூறப்படும் புதிய அரசியற் பிரவேசம். இத்தகையவர்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு தன்னிச்சையாக செயற்பட நினைத்தால் என்றும் எதையும் பெற முடியாது.

நீண்டகாலமாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இலங்கை அரசுகளுடன் இணைந்து தமிழ் மக்களுக்கான உரிமைகளையும் தேவைகளையும் பெற்றுக்கொள்ள முயன்ற போதெல்லாம் எதிர்ப்பரசியலை செய்து கிடைக்கவிருந்த அதிகளவான உரிமைகளை எல்லாம் தூக்கியெறிந்தவர்கள் இன்று படிப்படியாக இணக்க அரசியலுக்குள் பிரவேசித்து இலங்கை அரசுடன் ஒட்டி உறவாடுவதென்பது கடந்தகாலத்தில் துன்பங்களையும் வேதனைகளையும் சுமந்து நிற்கும் எந்தவொரு குடிமகனாலும் ஏற்றுக்கொள்ள முடியாதென்பதுதான் யதார்தமான உண்மை.

தமிழ் மக்களது உரிமைக்காக போராடியவர்களை அரசியல் ரீதியில் வழிநடத்தி சென்றவர்களுள் சம்பந்தன் ஐயாவுக்கும் அதிக பங்கு உண்டு. இலங்கையின் சுதந்திர தினத்தை கரி நாளாக கொண்டாட முடிவெடித்தவர்களுள் இந்த கூட்டமைப்பும் அவர்கள் சார்ந்த பலருக்க்கும் பங்குண்டு என்பதை மறந்துவிடக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## புதிய அரசியல் முன்னணியினை கைவிட்ட அரசியல் அநாதைகள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்தி பொதுத் தேர்தலில் போட்டியிட இன்று கட்சியை ஆரம்பிக்க முயற்சித்த அரசியல் அநாதைகளின் முன்னணி அதனை கைவிட்டுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னாள்அமைச்சர்களான விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோரையே அந்த இணையத்தளம் அரசியல் அநாதைகள் எனக் குறிப்பிட்டுள்ளது.

இவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் முன்னாள் ஜனாதிபதி அதற்கு இணங்கவில்லை.

இந்த நிலையில், புதிய அரசியல் முன்னணி ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகளை கைவிட்டதாக முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று முன்தினம் தெரிவித்தார். அதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நிறுத்த முயற்சிகள் மேற் கொள் எப்படும் என உதய கம்மன்பில கூறியிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்தும் இவர்க ளின் முயற்சிகள் எப்படி இருந்தாலும் தற்போதும் அரசாங்கத்திற்கு எதிரான முனைப்புகளில் ஈடுபட்டுள்ள இவர்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியது என கூறப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை கலைத்து விட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து பொதுத் தேர்தலில் போட்டியிடும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன என அந்த ஊடகம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

## ஷிராந்தியின் வித்தியாசமான அடையாள அட்டை இலக்கம்

### வங்கி கணக்கில் போலி விபரங்கள்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ நடத்தி வரும் சிறிலிய சவிய என்ற அரச சார்பற்ற நிறுவனம் இலங்கை வங்கியின் சுதுவெல்ல கிளையில் வைத்திருக்கும் 1431001462 35069 என்ற இலக்கங்களை கொண்ட வங்கி கணக்கை திறக்க போலி ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த வங்கி கணக்கில் இருந்து பணத்தை எடுக்கும் அதிகாரம், எஸ். ராஜபக்ஷ, ஏ.எம்.ஜே.ஏ. குமாரி, கே.கே. திஸாநாயக்க ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் எஸ். ராஜபக்ஷ என்பவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ ஆவார். அவரது தேசிய அடையாள அட்டை எண் 222222222V என குறிப்பிடப்பட்டுள்ளது.

குமாரி என்ற பெண்ணின் தேசிய அடையாள அட்டை எண் 111111111V என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கே.கே. திஸாநாயக்க என்பவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் 587060958V எனக் குறிப்பிட்டுள்ளது.

கே.கே. திஸாநாயக்க என்பவரின் பெயரில் அதே வங்கியில் வேறு ஒரு வங்கி கணக்கு இருப்பதுடன் அதற்கு வேறு ஒரு தேசிய அடையாள அட்டை இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

சிறிலிய சவிய என்ற அரசசார்பற்ற நிறுவனத்திற்குரிய வங்கி கணக்கில் 43.2 மில்லியன் ரூபா இருப்பில் உள்ளது. அந்த அமைப்பின் முகவரி கால்டன் பங்களா தங்காலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் ஹெல்பின் அம்பாந்தோட்டை என்ற அரசசார்பற்ற நிறுவனத்திற்கு வெளிநாட்டில் இருந்து பல கோடி ரூபா சுனாமி நிதியுதவி கிடைத்திருந்தது. அந்த பணத்தை மோசடி செய்ததாக மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், சிறிலிய சவிய என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் வங்கி கணக்கு போலியான தகவல்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருவது பாரதூரமான விடயம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசிரீடம்<br>கி.பா: 17<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/195 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 22 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/362 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 30 செவ் 2 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: B/198 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 36 செவ் 12 இல்<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்: HNDA/ கணக்காளர்<br>தொ.இ: G/364 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 80 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/199 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 16 செவ் 4 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: BBA/ கணக்காளர்<br>தொ.இ: G/368 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 8 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: ஆசிரியர் (லண்டன்)<br>தொ.இ: B/203 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 23 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர் (லண்டன் PR)<br>தொ.இ: G/370 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மண்ணகழ்வில் ஈடுபட்ட இருவர் குருநகரில் வைத்து பொலிஸாரினால் கைது

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் மண் கடத்தலில் ஈடுபட்ட இருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களோடு மண் கடத்தலில் ஈடுபடுத்தப் பட்ட இரு உழவு இயந்திரங்களும் யாழ். பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.


நேற்று முன்தினம் மாலை அரியாலையில் அனுமதியின்றி திருட்டு மணல் ஏற்றிய அரியாலையைச் சேர்ந்த குறித்த இருவரும் குரு நகர்ப் பகுதிக்கு அம்மணலினை கொண்டு வந்துள்ளனர்.

குருநகரில் வைத்து குறித்த இரு உழவு இயந்திரங்களையும் வழிமறித்த யாழ். பொலிஸார் அவற்றினை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது மணல் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் குறித்த இருவரிடமும் இல்லாததை அடுத்து அவர்களை கைது செய்த பொலிஸார் மணல் ஏற்றப்பட்ட உழவு இயந்திரங்களையும் கைப்பற்றி யாழ்.பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

மேலும் அரியாலைப் பகுதியில் மிக நீண்ட காலமாக இவ்வாறு மணல் கடத்தல் நடைபெற்று கொண்டுள்ளது எனவும் இதனால் அங்கு பெரும் குழிகள் ஏற்பட்டு சூழல் அழிவு ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண அரசு கவனம் செலுத்த வேண்டுமென அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4)




## மாசடையும் குடாநாட்டுக் குடிநீர்

# உடனடியாகத் தீர்வு வழங்க முன்வராவிட்டால் மத்திய, மாகாண அரசுகளுக்கு எதிராக போர்

### இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைவு தொடர்பில் உடனடியாக தீர்வு தரப்படாவிட்டால் அனைத்து தொழிற்சங்கங்களையும் இணைத்து மாபெரும் போராட்டமொன்றை மத்திய, மாகாண அரசுகளுக்கு எதிராக முன்னெடுப்போம் என இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**



சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் முன்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றும் போதே இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்உரையாற்றுகையில்,

யாழ். குடாநாட்டில் 39 பாடசாலைகளுக்கு தண்ணீர் சம்பந்தமான பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அத்தோடு மக்களுக்கான தண்ணீரிலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

சுன்னாகத்தில் அமைந்துள்ள நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிறுவனத்தினால் தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மல்லாகம் நீதிமன்றத்தில் 11 பேர் வழக்கு தொடர்ந்து சுன்னாகம் நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிறுவனம் மூடப்பட்டுள்ளது.

எனினும் இப்பிரச்சினைக்கு முடிவான சரியான நிரந்தரத் தீர்வு கொடுக்கப்படவில்லை. கிணறுகளில் கழிவெண்ணெய் கலப்பு சம்பந்தமாக பரிசோதனை செய்யுமாறு கூறியுள்ளனர். ஒரு பரிசோதனைக்கு 3 ஆயிரத்து 500 ரூபா செலவாகின்றது.

இப்பரிசோதனைக்கு செலவாகின்ற பணத்தினை யார் கொடுப்பது? இது சம்பந்தமாக மத்திய அரசும் வடமாகாண அரசும் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கழிவெண்ணெய் கலந்த பாடசாலைக் கிணறுகளுக்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. பாடசாலைகளுக்கு மட்டும் குடிநீர் வழங்கினால் போதுமா?

தற்போது தேசிய வடிகாலமைப்புச் சபையினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் 3 பாடசாலைகளில் கழிவெண்ணெய் கலக்கவில்லை எனத்தான் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த காலம் யுத்தத்தின் போதும் நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு அனுமதி கொடுத்தது இவ்வரசுதான். ஆகவே அரசு மௌனமாக இருக்க முடியாது. கழிவெண்ணெய்ப் பிரச்சினை சிலவேளை 10 வருடங்களுக்கு மேலாக தொடரலாம். அதனால் இதற்கொரு தீர்வு அவசியமானதாகும்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினை பொறுத்தவரையில் இதற்கு தற்காலிக தீர்வொன்று உடனடியாக வேண்டும். பின்னர் நிரந்தரத் தீர்வு வேண்டும்.

இது இரண்டுமில்லாமல்தான் தற்போது இருக்கின்றோம். இப்பிரச்சினை சம்பந்தமாக பேசிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

அழுத்தங்கள் வரக் காரணம் என்ன? இந்த செயற்பாட்டினை நியாயப்படுத்துவதற்கா அழுத்தங்கள் கொடுக்கின்றனர். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

அடுத்து இப்பிரதேசத்தை அனர்த்த வலயமாக பிரகடனப்படுத்த வேண்டும். அதனை விடுத்து ஏன் மறைக்க முயற்சிக்கின்றார்கள்.

மாகாண அதிகாரிகளும் அரச அதிகாரிகளும் இப்பிரச்சினையை மூடி மறைக்க முயற்சி செய்கின்றார்கள். இவ்வாறு மறைப்பதற்கு காரணம் இந்த மின் உற்பத்தி நிறுவனத்தினால் இலாபம் கிடைக்கின்றதா? மக்களின் உயிர் பெரிதா? இந்த மின் உற்பத்தி நிறுவனம் பெரிதா? என இவ் அரசிடம் நாம் கேட்கின்றோம்.

இந்த மின்சார நிலைய உரிமையாளர் ஒருவர் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உறுப்பினராகவுள்ளார். இந்த மின் உற்பத்தி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கழிவெண்ணெய் மட்டும் 4 இலட்சம் லீற்றருக்கும் அதிகமாகவுள்ளது.

160 கோடி ரூபாய்க்கும் மேல் இந்த மின் உற்பத்தி நிலையம் ஊடாக இலாபமடைந்துள்ளனர். இவ்வளவு இலாபமெடுத்து மக்களை அழித்து வருகின்றனர்.

இப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வைக்காவிட்டால் இலங்கை ஆசிரியர் சங்கம் மட்டுமல்ல அனைத்து தொழிற்சங்கங்கள், சமூக அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)




### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைக்கு அருகிலுள்ள தற்காலிக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி பி.தயாநிதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

### சாளக்குடி டிவைன் தியான வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தவக்காலத்தில் யாழ். மறை மாவட்டத்தில் சாளக்குடி டிவைன் தியானக் குழுவினரால் தவக்கால தியானங்களும் குணமாக்கல் வழிபாடுகளும் நடத்தப்படவிருக்கின்றன.

விபூதிப் புதனுக்கு மறுநாளான பெப்ரவரி 19 ஆம் திகதியிலிருந்து மார்ச் மாதம் 8 ஆம் திகதி வரை யாழ். மறைமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இத்தியான வழிபாடுகள் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-3)

### இந்துக் கல்லூரியில் நாளை இரத்ததானம்

யாழ். போதனா வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு நிலவுவதாக வெளியான செய்திகளையடுத்து தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தினால் யாழ். இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது. இரத்ததானம் செய்ய விரும்பியவர்கள் யாழ். இந்துக் கல்லூரிக்கு வருகை தந்து இரத்ததானம் வழங்க முடியும். அத்துடன் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தினால் இளைஞர்கள் மத்தியில் இரத்ததான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரம் ஒன்றையும் கழகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

### கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை சங்கானையில்

கொமர்ஷல் வங்கியின் 241 ஆவது கிளை நாளை மறுதினம் திங்கட்கிழமை சங்கானையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இலக்கம் 146A பொன்னாலை வீதி, சங்கானையில் திங்களன்று காலை 9.45 மணியளவில் இத் திறப்பு விழா நிகழ்வு நடைபெறவுள்ளது.

இத்திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்கேற்பதற்கு கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அலுவலர் றெங்கநாதன் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

### எண்ணெய்க்காப்பு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ மாவை சித்திவிநாயக ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் ஆலய திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரையும் கும்பாபிஷேக நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரையும் இடம் பெறவுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு

### 80 இற்கும் மேற்பட்டவர்கள் கையொப்பம்

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு எதிராக கொண்டு வரப்பட உள்ள நம்பிக்கையில்லா பிரேரணையில் 80 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

நாட்டின் சட்டம் ஒழுங்கை உரிய முறையில் பேணவில்லை என ஜோன் அமரதுங்கவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

குறிப்பாக வத்தளை பிரதேச சபையின் தலைவர் மீதான தாக்குதல் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசியல் வாதிகள், ஆதரவாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.


இந்த சம்பவங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.

இதன்படி குறித்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கான கையொப்பம் திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் 80 உறுப்பினர்கள் இதில் கையொப்பமிட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 137 உறுப்பினர்கள் இந்த பிரேரணையில் கையொப்பமிட உடன்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று அல்லது நாளை சபாநாயகரிடம் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை ஒப்படைக்கப்பட உள்ளதாக எதிர்க்கட்சித் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-5)

# பேசும் படம் - 19




மண்ணில் வாழும் ஒவ்வொரு உயிர்களும் தாய்மையில்தான் தங்கியிருக்கிறது...

குறிப்பு: அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல்: valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம், வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

அனுப்பியவர்:
கோபிநாத் சண்முகேஸ்வரன்

# மைத்திரியின் வெற்றிக்காக அங்கப்பிரதட்சனை வேண்டுதலை நிறைவேற்றினார் இளைஞர்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமைக்கு ஆணைமடு, நாகவில பகுதியில் சனத் குமார எனும் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் 3 கிலோ மீற்றர் அங்க பிரதட்சனை செய்துள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றால் தான் 3 கிலோ மீற்றர் வரை அங்க பிரதட்சனை செய்வதாக வேண்டிக்கொண்டுள்ளார்.

இந்த வேண்டுதலையே குறித்த இளைஞர் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் நிறைவேற்றியுள்ளார். (இ-5)

# தமிழர் தொடர்பில் ஆக்கபூர்வமாக மைத்திரி அரசும் செயற்படவில்லை

### சர்வதேசத்திடம் முறையிட நேரிடும் என்கிறார் மாவை

(யாழ்ப்பாணம்)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு ஆட்சிக்கு வந்து ஒரு மாதம் முடிவடையும் நிலையில் தமிழர்கள் தொடர்பில் இதுவரை ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையெனவும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் புதிய அரசு செயற்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் சர்வதேசத்திடம் மீண்டும் செல்வோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

நல்லூர் பிரதேச சபையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை நடைபெற்ற போது நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில,

தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு ஆட்சிக்கு வந்து ஒரு மாதம் முடிவடையும் நிலையில் தமிழர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

புதிய அரசின் நல்ல திட்டங்களை வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் இதுவரை அனுபவிக்கவில்லை. ஆனால் சிங்கள மக்களே அவற்றை அனுபவிக்கின்றனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிக்க முன்னதாகவே ஏதோ ஓர் நம்பிக்கையின் அடிப்படையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து வாக்களித்திருந்தனர்.

வடக்கு, கிழக்கில் காணாமற் போனோர், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர், இராணுவத்தினரின் நில அபகரிப்பு, சிங்களக் குடியேற்றங்கள், இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் மீள்குடியேற்றங்கள் என பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே தற்போதும் வாழ்ந்து வருகின்றனர்.

மேற்படி எமது பிரச்சினைகளை தீர்க்குமாறு வலிறுத்தியே ஜனாதிபதி மைத்திபாலவிற்கு தேர்தலின் போது ஆதரவு வழங்கியிருநதோம். மாறாக அமைச்சுப்பதவிகளுக்காக நாம் ஆதரவளிக்கவில்லை.

இங்கு காலங்காலமாக இருக்கின்ற தமிழ்த் தலைமைகள் பதவிகள், வாய்ப்புக்கள், வசதிகளுக்கு சோரம் போவதில்லை. ஆனால் சிலர் தமது அரசியல் இலாபங்களுக்காக பதவிகளை மட்டுமே நோக்காகக் கொண்டு செயற்படுகின்றனர். இதனையே இந்த புதிய அரசிடமும் தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரான புதிய ஆட்சி அமைத்த காலத்திலும் கோரிக்கையாக முன்வைத்திருக்கின்றோம்.

ஆனால் இவற்றில் பலவற்றைச் செய்வதாகவும் புதிய அரசு உறுதியளித்திருக்கின்றது. ஆனால் காலங்கள் கடந்து செல்கின்ற போதும் அரசின் செயற்பாடுகளும் நன்மைகளும் எம்மை வந்து சேராத நிலையே இருக்கின்றது.

குறிப்பாக நாட்டில் நீண்ட காலமாக நிலவி வரும் இனப்பிரச்சினை தொடர்பில் புதிய அரசும் மென்போக்கான நிலைப்பட்டையே கொண்டிருக்கின்றது.

ஆகவே இதனைத் தீர்த்து வைக்க வேண்டியதன் அவசியம் கருதி செயற்பட வேண்டிய பொறுப்பு புதிய அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

எனவே இந்த அரசின் நூறு நாடகள் வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு அதன் நன்மைகள் தமிழ் மக்களையும் சென்றடைவதனை உறுதிப்படுத்த வேண்டும். எனவே தமிழ் மக்களின் மேற்படி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை விரை வாகவே மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# சீனாவுடன் புதிய அரசும் உறவினைப் பேணுமாம்

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுடன் வலுவான உறவுகளை தொடர்ந்தும் பேணுவதாக உறுதியளித்துள்ளார் என "சின்குவா" செய்திச்சேவை தெரிவித்துள்ளது. சீனாவின் புதுவருடத்தை குறிக்கும் முகமாக விடுத்துள்ள செய்தியிலேயே மைத்திரிபால சிறிசேன இதனை தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதியின் கடந்த வருட இலங்கை விஜயத்தின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியுள்ள சிறிசேன, தனது ஆட்சிக் காலத்திலும் உறவுகள் வலுவான நிலையில் தொடரும் என உறுதியளித்துள்ளார். இலங்கைக்கும் சீனாவுக்குமான உறவுகள் பல நெருக்கடிகளை கடந்தும் நீடிப்பவை, பரஸ்பர நன்மையை அடிப்படையாகக் கொண்டவை.

2014 ஆம் ஆண்டை திரும்பிப் பார்க்கும் போது கடந்த செப்டெம்பரில் சீன ஜனாதிபதியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் எமது வலுவான உறவை மேலும் பலப்படுத்தவும் இரு நாடுகளுக்கும் மக்களுக்கும் பயனளிக்க கூடிய விதத்தில் தந்திரோபாய ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் வழிவகுத்துள்ளமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன் என இலங்கை ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வடமாகாண வாகனக் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்ட நிதி போரினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்கு மாற்றம்!

பிறப்பினாலும், போரினாலும் அங்கவீனமுற்றோர்களின் புனர்வாழ்வு தொடர்பாக நாம் சமர்ப்பித்த 2014.10.21 ஆம் திகதிய குறிப்பில் கணக்கியல் சிக்கல் காரணமாக நடவடிக்கைஎடுக்கமுடியாதுபோனமை கவலைக்குரியது என வடக்கு மாகாணசபை அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போரினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான அங்கவீனர்கள் மற்றும் கணவனை இழந்தவர்கள் தொடர்பான புனர்வாழ்வு சம்பந்தமாக காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது எமது மாகாண சபையின் கடமையும் பொறுப்புமாகும்.

இந்த வகையில் 2015 ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் வாகனங்கள் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்ட 51மில்லியன் ரூபாவில் குறைந்தது 40 மில்லியனையாவது மேற்குறிப்பிடப்பட்ட புனர்வாழ்வு நடவடிக்கைக்குப் பயன்படுத்தலாம்.

இதன்படி வாழ்வாதார மூலதனமாக ஆகக்குறைந்தது தலா ஒரு இலட்சம் வீதம் 400 குடும்பங்களுக்கு வாழ்வாதார மூலதன உதவியாக வழங்கலாம்.

ஏற்கனவே உள்ள வாகனங்களிற்கு மேலாக கடந்த வருட இறுதியில் கொள்வனவு செய்யப்பட்ட 13 வாகனங்களும் மாகாணசபை நிர்வாகத்திற்கு வந்தடைய உள்ளன.

வாகனங்களை கரிசணையுடனும் பொறுப்புடனும் பாவித்தால் இப்பொழுதுள்ள வாகனங்கள் தேவைகளுக்கு போதுமானதாகவே காணப்படுகின்றன. மேலும் இன்றைய மத்திய அரசின் கொள்கையும் வாகனக்கொள்வனவுத் தவிர்ப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இனிமேல் வாகனத் தேவைகள் முன்வைக்கப்படின் அது பற்றி முழுமையான தேவைமதிப்பீடு செய்யப்பட்ட பின்னரே மேல் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். வேண்டிய அமைச்சர் வாரியப் பத்திரத்தின் மூலம் இதை முன்னெடுக்கலாம் என்றும் அக்கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் அடக்குமுறைகளை ஜனாதிபதி செயற்படுத்துகிறார்

## முன்னிலை சோசலிச கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்படுத்தி வந்த அடக்குமுறையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் செயற்படுத்தி வருவதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொட குற்றம் சுமத்தியுள்ளார். முப்படையினருக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் வர்த்தமானியில் ஜனாதிபதி கையெழுத்திட்டமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பெப்ரவரி 3 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள இலக்கம் 1900/4 வர்த்தமானி அறிவித்தல் பற்றி விடயங்கள் விவாதிக்கப்பட வேண்டும்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொலிஸாரின் அதிகாரங்கள் இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நாட்டின் பல பிரதேசங்களுக்கு இராணுவம் அழைக்கப்பட்டுள் ளது. இதன் மூலம் முழு நாட்டிலும் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனை தவிர சில மாவட்டங்களின் கரையோர பிரதேசங்களும் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை , திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய நிர்வாக மாவட்டங்களுக்கு அருகில் இருக்கும் தேசிய நீர் நிலைகள் இராணுவம் அழைக்கப்படும் பிரதேசமாக பெயரிடப்பட்டுள்ளன.

இந்த பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருகிறது. சாதாரண சட்டத்திற்கு அமைய பிரதேசங்களின் சிவில் நிர்வாகம், சட்டம் மற்றும் அமைதிகாக்கும் பணிகளுக்கு இராணுவத்தை அழைக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை.

அவசரகால சட்டத்தின் கீழ் பொலிஸாரின் இந்த சட்டம் முப்படையினருக்கு வழங்கப்பட்டது. கைது செய்தல், வாகனங்களை சோதனையிடுதல், வாகனங்களை நிறுத்துதல், வீடுகளை பரிசோதித்தல், அடையாள அட்டை பரிசோதிதது அடையாளத்தை உறுதிப்படுத்தல் போன்ற பொலிஸாரின் அதிகாரங்கள் அவசரகாலச் சட்டத்தின் ஊடாக முப்படையினருக்கு வழங்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. இதன் மூலம் முப்படையினருக்கு இருந்த பொலிஸ் அதிகாரங்கள் இரத்தானது. இதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி வழமையான சட்டத்தின் மூலம் பொது அமைதி குலையும் விசேடமான சந்தர்ப்பங்களில் இராணுவத்தை அழைக்க முயற்சித்தார்.

மகிந்த ராஜபக்ஷ செய்ததையே மைத்திரிபால செய்துள்ளார். தனக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி முப்படையினருக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கியுள்ளார் எனவும் புபுது ஜாகொட மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி. யோ.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதனும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற உடற்கல்வி ஆசிரியர் கா. இரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ் பிரதம செயலாளர் அலுவலக உதவி பிரதம செயலாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## குமார் குணரத்தினவினால் ஜே.வி.பிக்கு பிரச்சினையாம்

முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் பிரேமகுமார் குணரத்ன, மக்கள் விடுதலை முன்னணிக்கு ஒரு பிரச்சினையாக இருப்பதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித்குமார தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ரத்ன தேரரை சந்தித்தவுடன் அரசாங்கம் குமார் சகோதரரை நாட்டை விட்டு வெளியேற்ற முயற்சிக்கிறார்கள் என நான் கூறினேன், ஜே.வி.பி இருப்பது அரசாங்கத்துடன் நீங்கள் இது போன்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்க்க வேண்டும் என ரத்ன தேரர் தெரிவித்தார்.

கிராம மொழியில் கூறினால் சுற்றி விட்டது போல் இருப்பதாக தெரிவித்தார். யாராவது அவர்களுடன் இருக்கும் வரை வீரனாக்குவதும் கட்சியை விட்டு விலகியதும் துரோகியாக்குவதும் ஜே.வி.பிக்கு கை வந்த கலை என தேரர் ஊடகத்தை அழைத்து தெரிவித்தார்.

இதேவேளை குடிவரவு திணைக்களத்தினால் குமார் குணரத்னவை நாட்டை விட்டு வெளியேறுமாறும் கடவுச் சீட்டுக்களை கொண்டு வருமாறும் அறிக்கை ஒன்று விடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-5)

## புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சட்டத்துறைக்குத் தெரிவான புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் எதிர்வரும் 09 ஆம் திகதி காலை 9 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

கல்வியாண்டு 2013 - 2014 இற்குத் தெரிவாகி பதிவுகளை மேற்கொண்ட சட்டத்துறை மாணவர்களை இந்நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.சிவநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் விடுதி வசதி தேவைப்படும் மாணவர்களுக்கு நாளை 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுதிகளில் தங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சங்கானை தாணா ஓடைக் கிராமத்தில் 37 பயனாளிகளுக்கு மலசலகூட வசதி




(யாழ்பாணம்)

சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட ஜே/178 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள தாணா ஓடைக் கிராமத்தில் ஞானம பவுண்டேசன் நிறுவனத்தினரால் 37 பயனாளிகளுக்கு சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியிலான மல சலகூடம் அமைத்து வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சங்கானைப் பிரதேச செயலர் ஆ.சோதிநாதன், சங்கானைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமாரன், கிராம உத்தியோகத்தர் சிவகுமார், இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர் ஜெகதீசன் உட்பட பல உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கு முன்னதாக சங்கானை முருகமூர்த்தி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து இடம்பெற்ற மலசலகூடங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வை உத்தியோக பூர்வமாக அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், சங்கானைப பிரதேச செயலர் ஆ.சோதிநாதன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். அங்கு உரையாற்றிய தவிசாளர் நாகரஞ்சினி, எமது பிரதேசத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பல தேவைப்பாடுகள் உள்ளன.

இப்பிர தேசத்தில் உள்ள பலரும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ள்ளனர். இப் பிரதேசம் விவசாய பிரதேசமாக உள்ள நிலையில் அவற்றை உடனடியாக பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்ப டுகிறது. ஆனால் பிரதேச செயலர், அரச அதிபர் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் ஒத்துழைக்கும் பட்சத்தில் வெகு விரைவில் இவர்களுக்கான உதவித்திட்டங்களை மற்றும் அனுமதிகளை விரைவாக பெறமுடியும். இவ் அடிப்படை வசதிகள் மிக முக்கியமானவை. உரிய முறையில் அடிப்படை வசதி களை வழங்கத் தவறும் பட்சத்தில் பல்வேறு வகையான நோய்களும் தொற்றுக்களும் பரவ வாய்ப்புக்கள் உருவாகும். இவ்வாறான நிலை மைகளைக் கருத்தில் கொண்டு இப்பகுதி மக்களுக்கான உதவித் திட்டத்தினை வழங்குவதற்கு அரச திணைக்களங்கள் முன்வர வேண்டும்.

அத்துடன் இப்பிரதேச மக்களின் வாழ்கைத்தரத்தை உயர்த்துவதற்கு மலசலகூட வசதி களை ஏற்படுத்தித்தந்த ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தினருக்கு இப் பிரதேச மக்கள் சார்பில் நன்றி களை தெரிவித்துக்கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

இதேவேளை அங்கு உரையாற்றிய அரச அதிபர், இப் பிரதேச மக்களின் நன்மை கருதி அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான உதவித்திட்டங்கள் வெகு விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். (இ-3)

## அமைச்சர் இரட்டை வேடமாம்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் காணி அமைச்சர் ஜானக்க பண்டார தென்னக்கோன் இரட்டை விளையாட்டை ஆடியதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தம்புள்ள நகர சபை உறுப்பினர் அனுர பண்டார பியரத்ன தெரிவித்துள்ளார்.

நகர சபையில் நேற்று முன்தினம் நடை பெற்ற கூட்டத்தில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் அமைச்சர் ஜானக்க பண்டார தென்னக்கோன் ஆடிய இரட்டை விளையாட்டை உறுதிப்படுத்தக் கூடிய சாட்சியங்கள் தன்னிடம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்னக்கோன் அன்னப் பறவை சின்னத்திற்கே வாக்களித்தார். இதனை உறுதியாகி கூறுவதாகவும் அனுர பண்டார பியரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் காணி அமைச்சர் ஜானக்க பண்டார தென்னக்கோன் தம்புள்ளயில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போது மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் தனக்கு நேர்ந்த கொடுமைகளை கூறி அழுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சத்சங்கம் நிகழ்வு இன்று


(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் சத்சங்கம் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணி வரை நிலையத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆன்மீக உரைகளை சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ் வழங்கவுள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரகாம் லிங்கனின் தலைமுடி 15 இலட்சம்



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கடந்த 1865ஆம் ஆண்டு, ஜான் வில்கிஸ் பூத் என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் சுடப்பட்ட சிறிது நேரத்தில், அவரது தலையில் இருந்து மயிர்க்கற்றையை டாக்டர் ஜோசப் பர்னஸ் என்பவர் நீக்கினார்.

இந்த மயிர்க்கற்றை மற்றும் ஆபிரகாம் லிங்கனுடன் தொடர்புடைய பல்வேறு பொருட்களை தனியார் நிறுவனம் ஒன்று பாதுகாத்து வருகிறது. மறைந்த லிங்கனின் தனியார் நினைவகமாக கருதப்படும் இந்த நிறுவனம், சமீபத்தில் லிங்கனின் மயிர்க்கற்றையை ஏலம் விட்டது. அத்துடன் அவரை கொலை செய்த ஜான்வில் கிஸ் பூத்துடன் தொர்டர்புடைய பொருட்களும் ஏலம் விடப்பட்டன.

இந்த பொருட்கள் அனைத்தும் சுமார் 5 கோடி ரூபாய்க்கு ஏலம் போயின. குறிப்பாக லிங்கனின் மயிர்க்கற்றை 25 ஆயிரம் டொலருக்கு (சுமார் 15 இலட்சம் ரூபா) ஏலம் எடுக்கப்பட்டதாக அந்த நிறுவனம் தெரிவித்து உள்ளது. எனினும் இவ்வளவு அதிக விலை கொடுத்து மயிர்க்கற்றையை வாங்கியவரின் பெயரை அந்த நிறுவனம் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## உள்நாட்டுப் போர் உக்ரைனில் தீவிரம்

உக்ரைன் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளது. அங்கு அமைதியை ஏற்படுத்த அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி நாடுகள் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

உக்ரைனின் கிழக்குப் பகுதிகளில் அரசுப் படைகளும் கிளர்ச்சிப் படைகளும் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளன. இந்த உள்நாட்டுப் போரில் கடந்த ஏப்ரல் முதல் இதுவரை 5 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக கடைப்பிடிக்கப்பட்ட போர் நிறுத்தத்தை அண்மையில் இருதரப்பும் மீறியதால் அங்கு போர் தீவிரமடைந்துள்ளது.

தினமும் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்து வருகின்றனர். ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக ரஷ்ய பகுதியில் தஞ்சமடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# படகு கவிழ்ந்து பாரிய விபத்து



## 18 பேர் பலி!

ஐவரி கோஸ்ட்டில் அளவுக்கு அதிகமான பாரம் ஏற்றிய படகு கவிழ்ந்ததில் 18 பேர் பலியாகினார்கள். மேலும் 25 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். அங்குள்ள குவெஸ்சாபோ நகர் அருகே உள்ள சஸ்ஸாண்ட்ரா ஆற்றில் கடந்த திங்களன்று இந்த படகு கவிழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்நாட்டின் நீர்வழி போக்குவரத்தில் இந்த ஆறு மிகவும் முக்கியமானதாகும். 40 பயணிகள் மற்றும் காபி மூட்டைகளை ஏற்றியதால் படகின் பாரம் அதிகமானதாக அப்பகுதி காவல்துறை அதிகாரி எல்விஸ் அச்சி கூறியுள்ளார். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரும் குவெமென் மலைப் பகுதியை சேர்ந்த மீன் வியாபாரிகள் என்று அந்நாட்டு தினசரி பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

லைபீரிய எல்லையில் உள்ள இந்நகரத்தில் தான் கடந்த 2010-2011 ஆம் ஆண்டு நடந்த கலவரத்தில் 3ஆயிரம் பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது ஜோர்தான் விமானங்கள் தாக்குதல்


(மொசூல்)

**பணயக்கைதியாக பிடித்து வைத்திருந்த ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த விமானியை கூண்டுக்குள் அடைத்து வைத்து பெற்றோல் ஊற்றி எரித்துப் படுகொலை செய்த ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஜோர்தான் நாட்டு போர் விமானங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு மேற்கொண்ட சரமாரித் தாக்குதலில் 55 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.**

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சிரியாவில் அண்மையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட ஜோர்டான் விமானி உயிரோடு எரித்து கொல்லப்பட்ட சம்பவம் உலக நாடுகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் மீது கடும் கண்டனங்களையும் எதிர்ப்பையும் உருவாக்கியுள்ளது.

இந்நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீதான போர் தொடங்குவதாக நேற்று முன்தினம் ஜோர்தான் மன்னர் அறிக்கை வெளியிட்டார். அதில், விமானி கொலைக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று எச்சரித்திருந்தார்.

அவரது அறிக்கை வெளியான சில மணி நேரத்திற்குள் ஈராக்கின் வடக்குப் பகுதியில் உள்ள மொசூல் நகரத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது ஜோர்தான் விமானத் தாக்குதல் நடத்தியது.



இந்தத் தாக்குதலில் நைனன் வேயின் இளவரசன் என்று அழைக்கப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொமாண்டர் உட்பட 55 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க கூட்டுப் படை தலைமையில் நடைபெற்ற வான்வழி தாக்குதலில் ஜோர்தான் நாடும் பங்கேற்று வருகிறது.

இதையடுத்து கடந்த வாரம் ஜோர்தான் விமானியான முயாத் அல்-கசாஸ்பெ, எப்-16 என்ற ஜெட் விமானத்தை ஓட்டி சென்று தீவிரவாதிகளின் சிரிய தலைமையகம் உள்ள ரக்கா நகரில் தாக்குதல் நடத்தினார். அப்போது எதிர்பாராத விதமாக அந்த விமானம் விபத்துக்குள்ளாக, விபத்திலிருந்து தப்பித்த அவர் தீவிரவாதிகளிடம் பிடிபட்டார்.

விமானியை பிணைக் கைதியாக பிடித்து வைத்த தீவிரவாதிகள், அவரை விடுவிக்க வேண்டுமானால் ஈராக்கிய பெண் தீவிரவாதி சஜிதா அல்-ரிஷாவியை விடுதலை செய்ய வேண்டும் என்று கெடு விதித்தனர்.

எனினும் விமானி அல்-கசாஸ்பெ உயிருடன் இருப்பதற்கான ஆதாரத்தை தரும்படி தீவிரவாதிகளிடம் ஜோர்தான் அரசு கேட்டது.

இந்நிலையில் அவரை பெற்றோல் ஊற்றி உயிரோடு தீ வைத்து எரித்த வீடியோ காட்சியை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் வெளியிட்டனர். இது உலகம் முழுவதும் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தீவிரவாதிகளின் இந்த கொடூர செயலுக்கு பதிலடியாக, அந்நாட்டு சிறையில் இருந்த பெண் தீவிரவாதி சஜிதாவை உடனடியாக தூக்கில் போட்டது ஜோர்தான். அதைத் தொடர்ந்து சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள், பதுங்குமிடங்கள் மற்றும் ஆயுத கிடங்குகள் மீது நேற்று முன்தினம் சரமாரி வான்வழி தாக்குதல்களை நடத்தியது.

முதல் முறையாக ஈராக் நாட்டிலுள்ள தீவிரவாதிகளின் நிலைகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்நாட்டு தொலைக்காட்சியில் இத்தாக்குதல் நடத்தப்படும் வீடியோ காட்சிகளை ஒளிபரப்பிய ஜோர்தான் அரசு, இது திருப்பியடிக்கும் நேரம் என்று கூறியுள்ளது.

12 இற்கும் மேற்பட்ட போர் விமானங்கள் தீவிரவாதிகளின் நிலைகள் மீது சரமாரியாக குண்டு மழை பொழிந்தன. தாக்குதலுக்கு பின் போர் விமானத்தை இயக்கிய விமானிகள், தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட விமானி கசாஸ்பெவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அந்நாட்டு இராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் "இது ஆரம்பம் மட்டும் தான். ஜோர்தானியர்கள் யார் என்பதை நீங்கள் இனிமேல் தான் புரிந்துகொள்வீர்கள்" என்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் இனி தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் வரை தாக்குதல் தொடரும் எனவும் இராணுவம் சூளுரைத்துள்ளது.

இந்நிலையில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட விமானி கசாஸ்பெவின் வீட்டுக்கு சென்ற மன்னர் இரண்டாம் அப்துல்லா, கசாஸ்பெயின் தந்தைக்கு ஆறுதல் கூறியது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 14 தீவிரவாதிகள் சுட்டுப் படுகொலை

சிரியா, ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் பல்வேறு நாடுகளை சேர்ந்த தீவிரவாதிகள் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களில் சீன நாட்டை சேர்ந்த 300 தீவிரவாதிகளும் அடங்குவார்கள். இவர்கள் துருக்கி சென்று அங்கிருந்து ஈராக், சிரியாவுக்கு சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் இணைந்து தாக்குதலில் ஈடபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சிரியாவில் இருந்து தப்பிக்க முயன்ற சீன தீவிரவாதி ஒருவரை, ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கைது செய்து சுட்டுக்கொன்று விட்டதாகவும், இந்த சம்பவம் கடந்த செப்டெம்பர் மாதம் நடந்ததாகவும் குர்து படை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக சீன நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேபோன்று கடந்த டிசெம்பர் மாதம், ஈராக்கில் இருந்து 3 சீன தீவிரவாதிகள் தப்ப முயன்ற போது அவர்கள் தலை துண்டித்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இத்துடன் 6 நாடுகளை சேர்ந்த மேலும் 11 தீவிரவாதிகளும் தலை துண்டித்து கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் மீது தேசத்துரோக குற்றம் சாட்டி இந்த தண்டனையை ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாதிகள் விதித்துள்ளனர். இப்படி அடுத்தடுத்து 14 சக தீவிரவாதிகளையே ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்று குவித்துள்ள தகவல் உலகமெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

1063

## அது... இது, எது?

அஞ்சலிக்கு வயது ஐந்து.

இரவு படுக்கையில் படுத்திருந்த அப்பாவின் மீது ஏறி அமர்ந்தபடி,நான் ஒன்று கேட்பேன் வாங்கித் தருவிங்களா அப்பா? என ஆசையாக கேட்டாள்.

அவள் அப்படி என்ன கேட்பாள் என்பதைத் தெரிந்து கொள்ள அவளுடைய அம்மா, அண்ணனுக்கும் ஆசையாக இருந்தது.

நிச்சயமாக உனக்கு வாங்கித் தருவேன் என்றார் அப்பா.

அதன் பிறகு அவள் சொன்னதுதான் எல்லோரையும் பெரும் சுவாரஸ்யத்துக்கும் குழப்பத்துக்கும் ஆளாக்கிவிட்டது.

அஞ்சலியின் அப்பா, அம்மா, அண்ணா மாக்ஸ் மூவரும் பெரும் ஆராய்ச்சியில் இறங்க வேண்டிய தாகிவிட்டது.

எனக்கு மிகவும் பிடித்த மானதாக இருந்தாலும், அதன் பெயர் தெரியாதே என்றாள் அஞ்சலி.

அப்படியானால் அதை எப்படி வாங்கித்தர முடியும்?

அம்மாவுக்கு எடுத்த எடுப்பிலேயே ஆயாசமாகிவிட்டது.

அஞ்சலிக்கு அதை எப்படியாவது விளக்கிச் சொல்ல வேண்டும் என்று கண்கள் அலை பாய்ந்தன.

பரவாயில்லை குட்டி...

நீ யோசித்து நாளைக்குச் சொல்.

நாளைக்கே வாங்கித் தருகிறேன் என்று நம்பிக்கையூட்டும் விதமாகச் சொன்னார் அப்பா.



அவளுக்கு நம்பிக்கை தேவையாக இருக்கவில்லை.

அந்தப் பொருள் தான் தேவையாக இருந்தது.

விளக்கை அணைத்துவிட்டு கண்ணயர ஆரம்பத்த நேரத்தில் அஞ்சலி அப்பா கண்டு பிடித்து விட்டேன் விளக்கைப் போடுங்கள் என உற்சாகமாகக் குரல் கொடுத்தாள் இவ்வளவு நேரமாக அவள் தூங்காமல் யோசனையிலி ருந்து இருக்கிறாள்.

விளக்கு இல்லாமல் சொல்ல முடியாதா? அப்பா கேட்டார்.

இல்லையப்பா...

விளக்கை போட்டால் தான் அதை உங்களுக்குக் காட்ட முடியும்.

ஓ.. நம் வீட்டில் ஏற்கனவே இருக்கும் பொருள்தானா? என்றார் அப்பா.

விளக்கை போட்டுவிட்டு அவளைப் பார்த்தார்.

அவள் படுத்திருந்த நிலையிலேயே தன் சிறிய ஆள்காட்டி விரலை உயர்த்தி விட்டத்தைக் காட்டினாள்.

அங்கே என்ன இருக்கு? மாக்ஸ் யோசன்னையோடு கேட்டான்.

மேலே இருப்பது உங்களுக்கு தெரிய வில்லையா?

அவள் உறுதியாகச் சொல்வதைப் பார்த்து இன்னும் கூர்ந்து பார்த்தனர்.

அப்பா கட்டிலின் மீது.ஏறி நின்று உற்றுப் பார்த்தார்.

அப்பா நான் சொன்னது மேலே சுழலும் மின்விசிறியைத் தான் என்றாள்.

உனக்கு எதற்கு மின்விசிறி? மாக்ஸால் யூகிக்கவே முடியவில்லை.

அவள் இதே மாதிரியான சிறிய பொம்மை மின்விசிறியைக் கேட்கிறாள் என்றார் அம்மா.

அப்படியா? மகளின்தலையை வருடியபடி அப்பா கேட்டார்.

அவள் இல்லை என்பதாக மறுத்துவிட்டு நான் கேட்பது இந்த மின்விசிறியோ, பொம்மை மின் விசிறியோ இல்லை அது.... இது... போல இருக்கும்.

மின் விசிறிபோல இருக்கும்.

வேறு ஒரு பொருளை மூவரும் கற்பனை செய்து பார்த்தனர்.

எதுவுமே நினைவுக்கு வராத நிலையில் அப்பா அது சுழலக் கூடியதா? என்று கேட்டார்.

சற்றே யோசித்து விட்டு ம்ம்ம்...சுழற்றினால் சுழலும் என்றாள்.

பம்பரம் தானே? உற்சாகத்துடன் குரல் கொடுத்தான் மாக்ஸ்.

இல்லை.

அது பம்பரம்போல இருக்காது.

கடற்கரையில் காற்றடித்தால் சுழலுமே அந்தக் காற்றாடியா? அண்ணனின் கேள்விகள் அவளுக்கு அலுப்பாக இருந்தன.

அதெல்லாம் இல்லவே இல்லை.

தொடரும்....

07 02.2015

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1238 - மங்கோலியர்கள் ரஷ்யாவின் விளாடிமிர் நகரைத் தீயிட்டுக் கொளுத்தினர்.
- 1807 - நெப்போலியனின் பிரெஞ்சுப் படைகள் ரஷ்யா, மற்றும் புருசியாப் படைகளின் மீது போலந் தில் தாக்குதலைத் தொடங்கினர்.
- 1812 - மிசூரி மாநிலத்தில் நியூ மாட்ரிட் என்ற இடத்தில் பெரும் நிலநடுக்கம் தாக்கியது.
- 1904 - மேரிலாந்தில் பால்ட்டிமோர் என்ற இடத்தில் பரவிய தீயினால் 1,500 கட்டடங்கள் 30 மணி நேரத்தில் தீக்கிரையாகின.
- 1914 - சார்லி சாப்ளினின் முதல் திரைப்படம் முனை Auto Races at Venice வெளியானது.
- 1962 - கியூபாவுடனான ஏற்றுமதி, மற்றும் இறக்குமதி தடைகளை ஐக்கிய அமெரிக்கா கொண்டு வந்தது.
- 1971 - சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1974 - ஐக்கிய இராச்சியத்திடமிருந்து கிரனாடா விடுதலை பெற்றது.
- 1977 - சோவியத் ஒன்றியம் சோயுஸ் 24 விண்கலத்தை இரண்டு விண்வெளி வீரர்களுடன் விண்ணுக்கு ஏவியது.
- 1979 - புளூட்டோ நெப்டியூனின் சுற்றுப் பாதைக்குள் நுழைந்தது.
- 1986 - எயிட்டியில் 28 ஆண்டுகள் குடும்ப ஆட்சி நடத்திய ஜனாதிபதி ஜீன்-குளோட் டுவாலியர் கரிபியன் நாட்டிலிருந்து வெளியேறினார்.
- 1990 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தனி ஆதிக்கத்தை கைவிட இணங்கியது.
- 1991 - எயிட்டியின் முதலாவது மாக்களாட்சித் தலை வராக ஜீன்-பேட்ரண்ட் ஆர்ட்டிஸ்டே பதவி யேற்றார்.
- 1992 - ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பதற்கான மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.
- 1999 - உலகத்தமிழிணைய மாநாடு சென்னையில் ஆரம்பமானது.

### பிறப்புகள்

- 1812 - சார்ள்ஸ் டிக்கன்ஸ், ஆங்கில நாவலாசிரி யர் (இ. 1870)
- **1902 - தேவநேயப் பாவாணர், தமிழறிஞர் (இ. 1981)**
- 1905 - ஊல்ஃப் வொன் இயூலர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1983)

### இறப்புகள்

- 1919 - ஹென்றி யூலன், யாழ்ப்பாண ஆயர்.
- 1937 - எலிஹூ ரூட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1845)

### தேவநேயப் பாவாணர்



தேவநேயப் பாவாணர் 1902 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி பிறந்தார். இவர் மிகச் சிறந்த தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார். இவர் 40க்கும் மேலான மொழிகளின் சொல்லியல்புகளைக் கற்று மிக அரிய சிறப்புடன் சொல் லாராய்ச்சிகள் செய்துள்ளார். மறைமலை அடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இயக்கத்திற்கு அடிமரமாய் ஆழ்வேராய் இருந்து சிறப்பாக உழைத்தார். இவருடைய ஒப்பரிய தமிழறிவும் பன்மொழியியல் அறிவும் கருதி, சிறப்பாக **மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்** என்று அழைக்கப்பட்டார். தமிழ் உலக மொழிகளில் மூத்ததும் மிகத்தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது எனவும் திரிரவிடத்திற்குத் தாயாகவும் ஆரியத்திற்கு மூலமாகவும் விளங்கிய மொழி யென வாதிட்டவர். கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் உள்ளிட்டவைகளுக்குத் தன் சொற்கள் பலவற்றை அளித்தது என்று நிறுவியவர் பாவாணர் ஆவார். தமிழின் வேர்ச்சொல் வளத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டி, அதன் வளர்ச்சிக்கான வழியையும் அவரின் நூல்களின் வழி உலகிற்கு எடுத்து இயம்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

....மற்றும் வாழ்த்து தெரிவித்த முக்கிய பிரமுகர்கள் விவரம் வருமாறு:-

தொழில் அமைச்சர் திருநாவுக்கரசு, சிறுசேமிப்பு திட்ட துணைத் தலைவர் நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன், டைரக்டர்கள் கே.பாலசந்தர், பாரதிராஜா, மகேந்திரன், முக்தா சீனிவாசன், எஸ்.பி.முத்துராமன், துரை, பி.மாதவன், ஆர். தியாகராஜன், சி.வி.ராஜேந்திரன், ராமண்ணா, ஆர்.கிருஷ்ணமூர்த்தி, என்.எஸ்.மணியம், தேவதாஸ்.

### ஜெய்சங்கர்

நடிகர்கள் ஜெய்சங்கர், சிவகுமார், பி.எஸ்.வீரப்பா, பிரதாப், சுதாகர், நாகேஷ், தேங்காய் சீனிவாசன், அசோகன், நம்பியார். நடிகைகள் ராதிகா, சுமித்ரா, சுமலதா, நிர்மலா, ராஜசுலோசனா, அஞ்சலி தேவி, பண்டரிபாய்.


### ஏவி.எம்.சரவணன்

பட அதிபர்கள் ஏவி.எம்.சரவணன், குமரன், கோவை செழியன், ஜி.உமாபதி, சி.தண்டபாணி, பஞ்சு அருணாசலம், கலைஞானம், கே.என்.சுப்பு, கே.ஆர்.ஜி, ஹதேவி பிலிம்ஸ் கவுரிசங்கர், கே.என்.குஞ்சப்பன், ஹரிபோத்தன், ஆர்.எஸ்.சோமநாதன், என்.வி.ஆர் முத்து, ராம்ஜி, சாருசித்ரா சீனிவாசன். பின்னணி பாடகர்கள் எஸ்.பி.பாலசுப்பிரமணியம், பி.பி. சீனிவாஸ், வாணி ஜெயராம் மற்றும் பலர் வந்திருந்தனர்.

வந்தவர்களை, நடிகர் ஒய்.ஜி. மகேந்திரன், ரஜினிகாந்தின் செயலாளர் முரளி ஆகியோர் வரவேற்றனர்.

### தந்தையிடம் ஆசி

இதற்கிடையே, மனைவி லதாவுடன் ரஜினி பெங்களூருக்கு சென்று, தன் தந்தையிடம் ஆசி பெற்றார். நீங்கள் சென்னைக்கு வந்து, எங்களுடனேயே தங்கியிருக்க வேண்டும் என்று தந்தையிடம் கேட்டுக்கொண்டார். ஆனால, தந்தையோ எல்லோரும் சொந்தக் காலில் நிற்கவேண்டும என்று கருதுபவர். தன் வாழ்க்கைக்கு, தனக்குக் கிடைக்கும் "பென்சன்" தொகையே போதும் என்று நினைப்பவர். எனவே சென்னைக்கு வரமறுத்து விட்டார். பிறகு ஒரு முறை, கண் ஆபரேஷன் செய்து கொள்ள சென்னைக்கு வந்து, ரஜினி வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தார். அப்போது ஒரு நிருபர் அவரைச் சந்தித்து, உங்கள் மருமகள் லதாவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டார். ரொம்ப நல்லப் பொண்ணு. எனனை அன்பாக கவனித்துக் கொண்டாள் என்று அவர் பதிலளித்தார்.



49

ரஜினியிடம்-லதா தமாஷ்

## திருமணத்துக்குப் பின் ரஜினிகாந்த்

### லதா தொடர்ந்து படித்தார்

திருமணத்தின்போது லதா, சென்னை எத்திராஜ் கல்லூரியில் பி.ஏ இறுதியாண்டு படித்துக் கொணடு இருந்தார். திருமணத்துக்குப் பிறகும் 2 மாதம் தொடர்ந்து கல்லூரிக்குச் சென்று படித்து, பரீட்சை எழுதி, "பி.ஏ" பட்டம் பெற்றார். திரு மணத்துக்குப்பின், ரஜினிகாந்த் வாழ்க்கையில் வரவேற்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. முன்பெல்லாம், இரவு நெடுநேரம் கழித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ரஜினி, திருமணத்துக்குப்பின் மாலை 6 மணிக்கு படப்பிடிப்பை முடித்துக்கொண்டு வீடு திரும்பலானார். இதுபற்றி கேட்டவர்களிடம், முன்பு நான் தனி ஆள். இப்போது எனக்காக ஒருத்தி வீட்டில் தனியாகக் காத்திருக்கிறாளே! அவளுக்காக காலாகாலதத்தில் வீட்டுக்குப் போகவேண்டாமா! என்று பதிலளித்தார்.

### "ஜில்லு"

இனிய சுபாவமும், கருணை உள்ளமும் கொண்டவர், லதா. அவரை ரஜினி செல்லமாக **"ஜில்லு"** என்று அழைப்பது வழக்கம். லதாவின் முயற்சியால் சிகரெட், மது ஆகியவற்றை படிப்படியாக குறைக்கலானார், ரஜினி. பேச்சில் பொறுமையும், செயல்களில் நிதானமும் ஏற்பட்டன. திருமணத்துக்குப்பின் உங்கள் நடவடிக்கைகள் முற்றிலும் மாறிவிட்டனவே என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, ஒருவர் திருமணம செய்து கொள்வதே, மாற்றம் வேணடும் என்பதற்காகத்தானே! அந்த மாற்றங்களைத்தான் இப்போது பார்க்கிறீர்கள்! நேரம் வரும்போது, எல்லாம் தானாகவே நடக்கும் என்று ரஜினி பதில் அளித்தார்.

### லதா பேட்டி கண்டார்

திருமணத்துக்குப்பின் ரஜினியை லதா பேட்டி காண்பது போல ஒரு நிகழ்ச்சிக்கு, ஒரு பத்திரிகை ஏற்பாடு செய்தது. இதற்கு ரஜினி, லதா இருவரும் சம்மதம் தெரிவித்தனர். அப்போது, லதா கேட்ட கேள்விகளும் ரஜினி அளித்த பதில்களும் வருமாறு:-

லதா:- நீங்கள் எனக்குப் பதிலாக ஒரு சினிமா நடிகையை மணந்து கொண்டிருந்தால் உங்கள் வாழ்க்கை எப்படி அமைந்திருக்கும்?

ரஜினி:- சினிமா நடிகையும் ஒரு பெண்தானே!

லதா:- படப்பிடிப்புக்குப் போய் விட்டு வீடு திரும்பும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

ரஜினி:- எனக்கு என்ன தோன்றும் என்று உனக்குத்தான் தெரியுமே! எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமா? (வேண்டாம் என்றார், லதா வெட்கத்தோடு) *(தொடரும்)*

# கருவாச்சி காவியம்



### வைரமுத்து- 71

...ஏலே பொட்டச்சி அப்படித்தான் பொலம்புவா.

ஆத்தாங்கிறதுக்காக உள்ளயே வச்சுப் பொணத்த ஊறுகாயா போட முடியும்? தூக்கிட்டு வாங்கடா.

வெளியயிருந்து பெருசுக வெரசு காட்டவும் நாற்காலியோட பொணத்த உச்சுனாப்புல தூக்கிட்டு ஓடி வந்தாங்க ரெண்டு எளந்தாரிப்பயக.

தரையை விட்டு ஆத்தாளத் தலைக்கு மேல தூக்கினவுடனே யாத்தேன்னு அலறித் தரையில விழுந்து தம் பாயமிழந்து போனா கருவாச்சி.

கொள்ளிக்கொடம் ஒடைக்க ஊர் மந்தை வரைக்கும் வந்தாகணும் அவ.

மூஞ்சியில தண்ணி தெளிச்சு புள்ளத்தாச்சிடி.. பாத்துன்னு பொத்துனாப்புல எழுப்பித் தாங்கிப் புடிச்சுக் கூடவே போறாக பொம்பளைக.

அன்னைக்குச் சனிக்கிழமை. சனிப் பொணம் தனியாப் போகாதாம்.

ஒரு கோழிக்குஞ்சு அடிச்சு பாடையில கட்டித் தொங்க விட்டாக.


தகரம் கொன்டு புடுச்சு பெரிய மூக்கி சாஸ்திரம் கொன்டு புடிச்சுக் கோழிக்குஞ்ச.

பெருங்கொண்ட கூட்டம் பின்னாலேயே போகுது.

முச்சந்தியில நிறுத்துனாக பாடைய.

இடவலமா மூணு சுத்துச் சுத்துனாக; எறக்கி வச்சாக.

கொடம் ஒடைக்கிற பிள்ளையைக் கூப்பிடுங்கப்பா.



தலைய விரிச்சுப் போட்டு அழுதுக்கிட்டே எடது தோள்ல கொடம் சுமந்து இட வலமாப் பொணம் சுத்தி வர்றா கருவாச்சி.

ஒவ்வொரு சுத்து முடிய அருவா மூக்குல தோட்டி ஒரு தொளபோடதன் பங்குக்குப் பெருங் கண்ணீர் வடிக்குது மண்கொடம்.

மூணாவது சுத்து முடிய போடு போடு போட்ருன்னு அஞ்சாறு பேரு கத்த ஆத்தா கால் மாட்ல அவ கொடம் ஒடைக்க -அவ பொழைப்பு மாதிரியே மண் கொடமும் செதறிச் செதறி சில்லு சில்லாக திரும்பிப்பாக்கமா [illegible] வுக்கிட்டே அவ தலையில ஒரு கோடிச் சேலயப் போட்டுக் கோழிய அமுக்குற மாதிரி அமுக்கிக் கூட்டிக் கிட்டே போயிட்டாக கூட வந்த பொம்பளையாளுக.

பாடையத் தூக்கி அதே மாதிரி மூணு சுத்து எதிர்த்திசையில் சுத்தி மந்தையிலிருந்து சுடுகாட்டுப் பாதையில கூடிட்டா எல்லாரும்.

கொட்டுக்காரன் முன்னுக்கன் கொட்டடிச்சுப்போக- மாட்டுச் செவந்தியை [illegible] யும் [illegible] வையும் பூக்காரன் ரெண்டுபக்கம் பிச்சு ஒதறிவர- கடும் பொரியும் அள்ளித் தெளிச்சுக்கிட்டே தோட்டி பின்னுக்கத் தொடர்ந்துவர போகுது பெரியமூக்கி பொணம் கடைசிக்காடு தேடி.

கூட்டத்துல கட்டையன் வாத்துமாயி ரெண்டுபேரும் ஒரு எடத்துலயும் வெலகல ஒண்ணாவே போறாக.

அவன் பேச இவன் தலையாட்ட பின்னால கொண்ணவாயன் கூடவே வாரான்கிற கூருபாடு கூட இல்லாமக் குசுகுசுன்னு பேசுறாக.

ஒனக்கு வாழ்வு வந்திருச்சுடா வாத்துமாயி.

குண்டக்க மண்ணடக்க எதையாவது பண்ணிக் குடியக் கெடுத்திராத.

துரைச்சாமித் தேவர் வகையறாவுக்கே நீ ஒருத்தன் தான் ஆம்பளை வாரிசு.

மொட்ட போட்டுப் பெரியமூக்கிக்கு நீ கொள்ளி மட்டும் வச்சிரு.

மிச்சத்த நாங்க பாத்துக்கிர்றோம்.

கொள்ளி வச்ச ஆளுக்குத் தான் சொத்து சொந்தம்.

அப்பறம் பெரியமூக்கி வீடு கருவாச்சிக்கில்ல; ஒனக்கு.

இன்னிக்கு ஆத்தா ஊருக்கு வடக்க வந்துட்டா.

நாளைக்கு மக தெக்க போக வேண்டியதுதான் மொதலக்கம்பட்டிக்கு.

*(தொடரும்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின் மத சகிப்புத் தன்மை ஒபாமாவின் கருத்தில் மாற்றம் ஏன்?

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இந்தியா வந்திருந்த போது, இந்தியாவில் மத சுதந்திரம் இருக்கிறது என்று கூறியிருந்த கருத்துக்கு நேர்மாறாக நேற்று முன்தினம் பேசியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதாவது, வோஷிங்டனில் நேற்று முன்தினம்பேசிய ஒபாமா, இந்தியாவில் தற்போதைய மத சகிப்புத் தன்மையைப் பார்க்கும் போது மகாத்மா காந்தி நிச்சயம் அதிர்ச்சி அடைவார் என்று கூறியிருந்தார். இதே ஒபாமா, கடந்த வாரம் இந்தியாவுக்கு 3 நாள் சுற்றுப் பயணமாக வந்திருந்த போது, குடியரசு தின விழாவில் உரையாற்றினார். அதில், நம்பத்தகுந்த, அழகான நாடு இந்தியா. இங்குள்ள அனைவரும் தங்களது மத நம்பிக்கைகளை தடையின்றி தொடரவும், அவற்றை மேம்படுத்தவும் இந்திய அரசியலமைப்புச்சட்டம் சுதந்திரம் அளிக்கிறது என்று கூறியிருந்தார்.

இந்தியாவுக்கு வந்த போது மத சுதந்திரம் பற்றி வேறு விதமாக பேசிய ஒபாமா, அமெரிக்கா சென்றதும் அதனை மாற்றிப் பேசியிருப்பது பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

பாரதச் செய்தி




## பன்றிக்காய்ச்சல்

# பலி எண்ணிக்கை 73ஆக அதிகரிப்பு

**பன்றிக்காய்ச்சல் நோயால் ராஜஸ்தானில் மேலும் 5 பேர் பலியாகியுள்ளனர். இதன் மூலம் பலியானோர் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது. ஆஜிமீர், பார்மர், ஜோத்பூர், பான்ஸ்வாரா மற்றும் சிட்டோகார் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் பன்றிக்காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர். ஜனவரி 1 முதல் பெப்ரவரி 5 ஆம் திகதிவரை பன்றிகாய்ச்சல் நோய் தாக்குதலுக்குள்ளான 497 பேரில் 73 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மாநில மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது,**

பன்றிக்காய்ச்சல் குறித்த கணக்கெடுப்பு மற்றும் விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த கிராமம் மற்றும் நகர்புற பகுதிகளில் வீடு வீடாக சென்று பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சுகாதாரத்துறை முதன்மை செயலர் முகேஷ் ஷர்மா தெரிவித்தார்.

பன்றிக்காய்ச்சல் நோய் பரவுவதை தடுக்க மாநில முதலமைச்சர் வசுந்தரா ராஜே கடந்த செவ்வாய்க்கிழமை மருத்துவ அதிகாரிகளுடன் உயர்மட்ட அளவிலான ஆலோசனை நடத்தியகாவும் நோயின் தீவிரவத்தை கட்டுப்படுத்த சிறப்புக் குழு அமைத்து நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயா சொத்துக்குவிப்பு வழக்கு

## தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகனின் மனு தள்ளுபடி

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையில் தங்களை 3ஆம் தரப்பாக சேர்க்கக் கோரிய தி.மு.க பொதுச்செயலாளர் அன்பழகனின் மனுவை கர்நாடக உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டு மனு மீதான விசாரணையில் தங்களை 3ஆம் தரப்பாக சேர்க்கக்கோரி தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் கடந்த ஜனவரி 3ஆம் திகதி கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு மீது கடந்த புதன்கிழமை விசாரணை நடந்தது.

அப்போது தி.மு.க தரப்பில் ஆஜரான சட்டத்தரணி சரவணன், அரசு சட்டத்தரணியின் செயற்பாடுகள் ஆட்சேபத்துக்குரிய வகையில் இருந்ததால் பெங்ளூர் சிறப்பு நீதிமன்றம் எங்களை 3ஆம் தரப்பாக சேர்த்துக் கொண்டது. எனவே, மேல்முறையீட்டிலும் அரசு சட்டத்தரணிக்கு உதவியாகவும், எழுத்து பூர்வமாக இறுதிவாதம் தாக்கல் செய்யவும் அனுமதிக்க வேண்டும் என்றார்.

இதற்கு அரசு சட்டத்தரணி பவானிசிங் கடும் ஆட்சேபம் தெரிவித்தார். ஜெயலலிதா சட்டத்தரணி பி.குமார்,குற்றவியல் நடைமுறை சட்டம் 301(2)ஆம் பிரிவின்படி, அரசு சட்டத்தரணி மட்டுமே வாதிட முடியும்.

தி.மு.க பொதுச்செயலாளர் அன்பழகன் ஜெயலலிதாவுக்கு எதிரான அரசியல் கட்சியை சேர்ந்தவர். அவரது கோரிக்கையில் உள்நோக்கம் இருப்பதால் ஏற்கக்கூடாது என்றார். மனு மீதான தீர்ப்பு நேற்று மன்தினம் வியாழக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

### தீர்ப்பு

இந்நிலையில் நீதிபதி சி.ஆர்.குமாரசாமி நேற்று முன்தினம்வழங்கிய தீர்ப்பில் கூறியிருப்பதாவது,

இவ்வழக்கின் ஆரம்ப நிலையில் இருந்து இன்று வரை அரசியல் தலையீடுகள் தொடர்ச்சியாக இருக்கிறது. முன்னாள் அரசு சட்டத்தரணி ஆச்சார்யா அரசியல் அழுத்தங்களின் காரணமாகவே இராஜினாமா செய்துள்ளார்.

பொதுநலனுக்காக இணையாமல், தனது அரசியல் நலனுக்காக அன்பழகன் இவ்வழக் கில் இணைய முயற்சிக்கிறார். நீதிமன்றத்தில் அரசியல்தலையீடு களை ஒருபோதும் ஏற்க முடியாது.

தி.மு.க தரப்பில் பவானிசிங்கை நீக்க வேண்டும் என வழக்கு தொடுத்திருக்கும் நிலையில், அவருடன்எப்படி இவ்வழக் கில் உதவியாக இருக்க முடியும்? மேலும் தி.மு.க.வை வழக்கில் சேர்ப்பதை அரசு சட்டத்தரணி விரும்பவில்லை. வழக்கு இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில் தி.மு.கவை இணைத்துக்கொள்வது சரியாக இருககாது. எனவே தி.மு.கவின் மனுவை தள்ளுபடி செய்கிறேன் என உத்தரவிட்டுள்ளார்.

சொத்துக்குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டில் தி.மு.க மனு தள்ளு படி ஆனதால் ஜெயலலிதா தரப்பு சடடத்தரணிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நீதிமன்ற வளாகத்தில் கர்நாடக மாநில அ.தி.மு.கவினர் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தேவாலயங்கள் மீதான தாக்குதலை கண்டித்து டில்லியில் கிறிஸ்தவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்



டில்லியில் தேவாலயங்கள் மீதான தாக்குதல் அதிகரித்து வரும் நிலையில், இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி மௌனமாக இருந்து வருவதைக் கண்டித்து கிறிஸ்தவர்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அருட்தந்தைகள், முதியோர்கள், பெண்கள் உள்ளிட்ட ஏராளமானோர் மத்திய டில்லியில் உள்ள சேக்ரட் ஹார்ட் கதீட்ரல் பகுதியில் நேற்றுமுன்தினம் காலையில் கூடினர். பின்னர் அங்கிருந்து உயர் பாதுகாப்பு மிக்க மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் வீட்டை நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

அப்போது, தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், தேவாலயங்களுக்கு அரசு பாதுகாப்பு தர வேண்டும் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து டில்லி பொலிஸ் துணை ஆணையர் முகேஷ் மீனா கூறும்போது, "தேவாலயத்துக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அனுமதி பெறவில்லை.

மேலும் வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட அனுமதிக்க முடியாது என்பதால் போராட்டத்தில் ஈடுபட்ட 200இற்கும் மேற்பட்டவர்களை தடுத்து நிறுத்தி, அவர்களை நாடாளுமன்ற வீதி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

## முகத்தில் செருப்பு மாலையை வீசினாலும் கவலையில்லை!

### காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

அரசியலில் தனக்கு செருப்பு மாலை விழுந்தாலும் கவலையில்லை என தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

தமிழக காங்கிரசின் மாவட்ட தலைவர்கள் ஆலோசனை கூட்டம், சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று முன்தினம் நடநதது.

இதில் பங்கேற்ற இளங்கோவன் பேசியதாவது, என்னை விமர்சித்து, காங்கிரஸில் இருப்பவர்களே போஸ்டர்கள் ஒட்டியிருக்கின்றனர். ஆனால் அது பற்றியெல்லாம் கவலைப்படமாட்டேன். அரசியல் வாழ்க்கை என்பது சாதாரணமல்ல. புகழ் மாலையும் அணிவிப்பர் அல்லது செருப்பு மாலையையும் முகத்தில் வீசுவர்.

எனவே இரண்டையும் ஒரே நோக்கில் பார்க்க பழகிக் கொள்ள வேண்டும். புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும், இரண்டையும் நான் ஒரே மாதிரி தான் எடுத்துக் கொள்வேன் என பேசியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜெனீவா கூட்டத் தொடருக்கு கூட்டமைப்பின் உயர்மட்டக்குழு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மார்ச் மாதம் இடம் பெறவுள்ள ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை மீதான சர்வதேச விசாரணையை தொடர்ந்தும் வலியுறுத்துவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவொன்று விரைவில் ஜெனீவா செல்லவுள்ளதாக கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

மார்ச்சில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கை மீதான அறிக்கையிடல் விசாரணைகளில் சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தி வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம் முறை எத்தகைய



நடவடிக்கைகளை மேற் கொள்ளுமென நேற்று முன்தினம் கேட்ட போதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார. நாட்டில் ஆட்சி மாற்றம ஏற்ப ட்டாலும் சர்வதேச விசாரணை அவசி யமென வலியுறுத்தியி ருக்கும அவர் மார்ச் மாதம் இடம் பெறவுள்ள கூட்டத்தொடருக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற் கொணடு வருவதாக ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தமையும் குறிப்பி டத்தக்கது.

எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் சர்வதேச விசாரணை வேண்டுமென்று நாம் கோரி வந்திருக்கின்றோம்.

இதில் கூட்டமைப்பிற் குள் எந்த மாற்றுக் கருத்துகளும் இல்லை எனவும் தெரிவித்துள்ள மாவை சேனாதிராஜா இதனை தொடர்ந்தும் கோருவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணை களை முன்னர் உறுதியாக முன்னெ டுத்த நாடுகளும் இதற்கு ஆதரவு தெரி வித்திருந்த நாடுகளும் தொடர் ந்தும்மார்ச் மாதம் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரி லும் அதனையே முன்னெடுக்கப்ப போவதாகத் தெரிவித்திருக்கின்றன.

நாட்டில் ஆட்சி மாற்றமொனறு ஏற்பட்டிருக்கின்றது. இந்த ஆட்சி மாற்றத்தினால் மட்டும் எமக்கு எல்லாம் கிடைத்துவிட்டது என்றோ அல்லது இனப்பிரச்சனைக்கு தீர்வு ஏற்படுத்தப்படடுவிட்டது என்றோ நாம் கூறவில்லை அதனாலேயே நாம் தொடர்ந்தும் விசாரணையை வலிறுத்தி வருகின்றோம் என்றார்.

இந்நிலையில் இதற்கான ஏற்பாடுகளையும் தமிழ்த் தேசியக் கூடடமைப்பும்மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வருடங்களைப் போன்று இந்த வருடமும் கூட்டமைப்பு முனைப் புடன் செயற்படுமென்றும் உறுதி படத் தெரிவித்தார். (இ-4)

# சைவசமய எழுத்துத்தேர்வு

உரும்பிராய் கிழக்கு கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்பாள் ஆலய சைவ மன்றத்தினரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் சைவசமய அறிவுப்போட்டிகளில் தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரையான மாணவர்களுக்கான சமய அறிவு எழுத்துத் தேர்வு இன்று சனிக்கிழமை 8 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஏனைய போட்டிகளான பண்ணிசை மற்றும் பேச்சுப்போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் இவற்றுக்கான பரிசளிப்பு வைபவம் மகா சிவராத்திரி தினத்தன்று ஆலயத்தில் இடம்பெறவுள்ளதாகவும் தேவஸ்தான போஷகர் எஸ்.நிர்ணய நாதன் அறிவித்துள்ளார். (இ-3)

# குமார் குணரட்னத்திற்கு அரசியலுரிமை வேண்டும்

முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல்சபை உறுப்பினர் குமார் குணரட்னத்திற்கு அரசியல் உரிமையை வழங்குமாறும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும வலியுறுத்தி அந்த கட்சி நாடு முழுவதும் மக்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது. முதற்கட்டமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, காணாமற் போனவர்கள் மற்றும் கடத்திச் செல்லப்பட்டவர்கள் பற்றிய தகவல்களை வெளியிடுமாறு வலியுறுத்தி இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முன்னிலை சோசலிசக்கட்சியின்பிரசார செயலாளர புபுது ஜாகொட தெரிவித்தார். அடுத்த கட்டமாக களுத்துறை, காலி, அநுராதபுரம், கேகாலை, பதுளை, கண்டி ஆகிய நகரங்க ளில் கையெழுத்து பெறப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 280 | 350 |
| தக்காளி | 200 | 260 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 100 | 80 | 120 |
| கரட் | 160 | 140 | 180 | 200 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 60 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 90 | 100 | 90 | 100 |
| சின்ன வெங்காயம் | 90 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 100 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 140 | 120 | 160 | 160 |
| லீக்ஸ் | 250 | 200 | 240 | 250 |
| பீற்றூட் | 100 | 180 | — | 120 |
| கறிமிளகாய் | — | 250 | 240 | 240 |
| முருங்கைக்காய் | — | 650 | — | — |
| போஞ்சி | — | 150 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 50 | 60 | — |
| கீரை - 1பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 40 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50-60 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 100 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 90 | 120 | 150 | 120 |

## facebook (f) :.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 276

ஹொட் பெயின்




சால்ஸ் நியூமன்




பகி சிங்கம்



எவன் பார்த்த வேலைடா இது...
இந்த அம்மா எப்படா செல்பி எடுத்தாங்க...

மகேந்திரராஜா றொசான்




லோகநாதன் நாதன்




சேயோன் யோன்



தாய் மண்ணில் முத்தமிட்டு தண்ணீர் பருக விவசாயிக்கு மட்டும்தான் வாய்ப்புக் கிடைக்கிறது என்று இதுவரை நினைத்திருந்தேன். இன்று தான் தெரிந்தது இராணுவ வீரனுக்கும் அந்தப் பாக்கியம் கிடைக்கிறது என்று

நீங்கள் பார்த்த :.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெஜ்ரிவாலுடன் மோதும் பா.ஜ.க!

தலைநகர் டெல்லியில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் யுத்த களமாக மாறியிருக்கிறது. 70 எம்.எல்.ஏ.க்களை தேர்வு செய்யும் இந்த தேர்தல் வருகிற பெப்ரவரி 7ஆம் திகதியன்று வாக்குப் பதிவு. ஒரு கோடியே 30 லட்சம் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை 11,763 வாக்குச் சாவடிகளில் செலுத்த இருக்கிறார்கள். வாக்காளர் அடையாள அட்டையும் சரி, புகைப்படங்களுடன் கூடிய வாக்காளர் பட்டியலும் சரி நூற்றுக்கு நூறு சதவீதம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த டெல்லித் தேர்தலில் "கௌரவப் போர" என்பதற்கு அடையாளமாக அந்தந்தக் கட்சித் தலைவர்கள் அணிவகுத்துக் கொண்டிருக்கிறார்கள். பெப்ரவரி 7ஆம் திகதிவாக்குப் பதிவு என்பதால், அதற்கு முந்தைய இந்த நாட்கள் டெல்லி அதன் வழக்கமான குளிரையும் மிஞ்சி அரசியல் தலைவர்களுக்கு அனல் அடிக்கும் நகரமாக மாறியிருக்கிறது.

பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரை டெல்லி தேர்தல் வராமல் இருந்தால் நல்லது என்றே நினைத்தது. மத்தியில் ஆட்சிக்கு வந்த அக்கட்சிக்கு ஆம் ஆத்மிக் கட்சியைச் சேர்ந்த அரவிந்த் கெஜ்ரிவால் சவாலாகத் தெரிந்தார. அதனால் முதலில் வேறு கட்சிகளின் ஆதரவுடன் அரசு அமைத்துவிடலாமா என்ற யோசனையில் சிறிது காலம் டெல்லி சட்டமன்றத்தைக் கலைக்காமல் வைத்திருந்தது.

அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அரவிந்த கெஜ்ரிவாலோ "தேர்தலை சந்திக்க பா.ஜ.க. பயப்படுகிறது" என்ற பிரசாரத்தை முன்னெடுத்துச் சென்றார். இதில் சற்று தயங்கிய பா.ஜ.க. பொறுமை காத்தது.

இதற்கிடையில் உச்சநீதிமன்றம், அரசு அமைப்பதற்கான முயற்சியை டெல்லி லெப்டினென்ட் கவர்னர் எடுக்க வேண்டும் என்று உத்திரவிட, அதற்கான முயற்சி நடைபெற்ற போதும் பா.ஜ.க. மீண்டும் ஆட்சி அமைக்க நினைத்தது. ஆனால் ஆம் ஆத்மி கட்சியிலிருந்து பெரிய அளவில் யாரும் பா.ஜ.க. பக்கம் திரும்பி வரவில்லை.

காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.க்களை பிளவு படுத்தி, அதன் மூலம் ஆட்சி அமைத்தால் தங்கள் பெயர் கெட்டு விடும் என்று பா.ஜ.க.வினர் பதற்றப்பட்டார்கள். அந்த முயற்சியும் கைவிடப்பட்டதால் இறுதியில் தேர்தல் அறிவிப்பு வெளியானது. தேர்தல் பிரச்சாரத்தில் முதலில் களத்திற்கு வந்த பிரதமர் நரேந்திரமோடி "சட்டத்தை மதிக் காதவர்கள் போக வேண்டிய இடம் வேறு" என்று கூறி அரவிந்த் கெஜ்ரிவாலின் போராட்டத்தை கிண்டல் அடித்தார்.

ஆனால், அரவிந்த் கெஜ்ரிவாலோ வீடு வீடாக செய்யும் பிரச்சாரம் பா.ஜ.க.வை திணறடித்துள்ளது. அவர் திடீரென்று நானும் பணியா. எனக்கு வியாபாரம் தெரியும் என்று பிரசாரத்தில் இறங்கினார். இதில் பணியா என்றால் டெல்லி யில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அதிக செல்வாக்கு உள்ள வாக்கு வங்கிக்குச் சொந்தக்காரர்கள். இந்த வாக்குகள் பா.ஜ.க. வின் அடிப்படை சொத்துப் போல் இருந்து வருகிறது.

அரவிந்த் கெஜ்ரிவாலின் இந்தப் பேச்சு பா.ஜ.க.வை மிரட்டி விட்டது. அதனால் மெதுவாக "மோடிக்கும் கெஜ்ரிவாலுக்கும்" என்று இருந்த போட்டி விலகிக் கொண்டது.

"தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும் என்று உறுதியாகத் தெரியாத நிலையில் மோடியை முன்னிறுத்தக் கூடாது" என்று கருதிய பா.ஜ.க. உடனடியாக ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி கிரன் பேடியை அவசர அவசரமாக கட்சியில் சேர்த்தது. அது மட்டுமின்றி, டெல்லி பா.ஜ.க.வின் எதிர்ப்பையும் மீறி அவரை முதலமைச்சர் வேட்பாளராகவும் அறிவித்தது.

அன்று முதல் டெல்லி தேர்தல் களம் கிரன்பேடிக்கும் அரவிந்த் கெஜ்ரிவாலுக்குமிடையில் ஆன போட்டியாக மாறியிருக்கிறது. கிரன் பேடி, அரவிந்த் கெஜ்ரிவால், அன்னா ஹசாரே ஆகிய மூவரும் மத்தியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இருந்த போது ஊழலுக்கு எதிரான போராட்டத்தை பெரிய அளவில் டெல்லியில் நடத்தி தலைநகரை ஸ்தம்பிக்க வைத்தவர்கள்.

மாணவர்களை சாலைக்கு அழைத்து மறியல் நடத்தியவர்கள். சோனியா மற்றும் பிரதமராக இருந்த மன்மோகன்சிங் இல்லத்தைக் கூட மறிக்கச் சென்றவர்கள். அதைத் தொடர்ந்து டெல்லியில் நடந்த நிருபையா கற்பழிப்புச் சம்வத்தை வைத்து டெல்லியை போராட்டக் களமாக மாற்றி, அகில் இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே இந்த கற்பழிப்புச் சம்பவத்தின் கொடூரத்தை உணரச் செய்தவர்கள்.


அதை போல் லோக்பால் அமைப்பு கொண்டு வர வேண்டும் கறுப்புப் பணத்தைக் கொண்டு வர வேண்டும் ஊழலை ஒழிக்க வேண்டும் என்ற மூன்று முக்கிய கோஷங்களை முன் வைத்து டெல்லியைக் கலக்கினார்கள்.

அந்த மூவர் படையில் பிறகு பாபா ராம்தேவ் சேர்ந்தார். அவர் வேறு மாதிரியாக மறியல், போராட்டம் நடத்தி பொலிஸார் தடியடி பிரயோகம் செய்து கலைக்கும் அளவுக்கு பதற்றம் பற்றிக் கொண்ட நேரம் அது. ஆக மொத்தம் ஊழல் எதிர்ப்பு அணியில் அப்போது டெல்லியைக் கலக்கியவர்கள் நால்வர். அவர்களில் இருவர்தான் இப்போது டெல்லிக்கு முதலமைச் சராக களத்தில் நிற்கிறார்கள்.

ஒருவர்கிரண்பேடி. இன்னொருவர் அரவிந்த் கெஜ்ரிவால். கிரன்பேடி முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பிறகு பா.ஜ.க.விற்குள் பெரும் உள்குத்து வேலைகள் துவங்கி விட்டன. அக்கட்சியின் அகில இந்திய தலைவர் அமித் ஷா எத்தனை கூட்டங்கள் போட்டு சமாதானம் செய்தாலும், டெல்லி பா.ஜ.க.வினர் சமாதானம் ஆகவில்லை.

முதலமைச்சர் வேட் பாளரை திடீரென்று இறக்குமதி செய்வதா என்று கேள்வி எழுப்பி, போர்க் கொடி தூக்கி நிற்கிறார்கள். அவர்கள், தங்கள் கசப்புகளை மறந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட மறுத்து வருகிறார்கள். இதனால் வேறு வழியின்றி பா.ஜ.க. அதிரடியாக ஒரு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதாவது தனி மனிதனாக களத்தில் நிற்கும் அரவிந்த் கெஜ்ரிவாலை சமாளிக்க, 200க்கும் மேற்பட்ட பா.ஜ.க. எம்.பி.க்களை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்துகிறது. 250க்கும் மேற்பட்ட பேரணிகளை நடத்தப் போகிறது. நாட்டின் நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தலைமையில் தேர்தல் பிரசாரக் குழு அமைத்துள்ளது.



பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டிய நேரத்தில் அதை ஒரு பக்கம் வைத்து விட்டு இன்னொரு பக்கம் டெல்லித் தேர்தலை பிரதானமாக முன்னிறுத்தி அவர் தலைமையில் வியூகங்கள் போடப்படுகின்றன.

எல்லாவற்றையும் விட அரவிந்த கெஜ்ரிவாலுக்கு தினமும் ஐந்து கேள்விகள் என்று பா.ஜ.க.வின் ஒவ்வொரு தலைவராக பத்திரிகையாளர்களை சந்தித்துக் கேட்கிறார்கள். தமிழகத்தில் இடைத்தேர்தல் நடக்கும் போதுதான் எந்தக் கட்சி ஆளுங் கட்சியாக இருக்கிறதோ அந்தக் கட்சியின் அமைச்சர்களும், சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் இடைத்தேர்தல் நடக்கும் தொகுதியில் முகாமிடுவார்கள்.

இப்போதைக்கு அ.தி.மு.க. எம்.பி.க்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இப்படித்தான் பெப்ரவரி 13ஆம் திகதி நடக்கப் போகும் திருவரங்கம் சட்டமன்றத் தேர்தலுக்கு குவிந்திருக்கிறார்கள். அதே மாதிரி இடைத் தேர்தல் யுக்தியை டெல்லி சட்டமன்றத் தேர்தலில் அறிமுகப்படுத்தியிருக்கிறது பாரதிய ஜனதா கட்சி.

பிரதமர் நரேந்திரமோடி இரண்டாவது கட்டமாக பிரச்சாரத்திற்கு வந்திருக்கிறார். அவரும் இந்த முறை ஆட்சி செய்யாமல் 49 ஓடியவர்களுக்கு வாக்களிக்காதீர்கள் பெற்ரோல், டீசல் விலை குறைவிற்கு எனக்குள்ள அதிர்ஷ்டம் என்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள்.

அப்படி அதிர்ஷ்டம் உள்ளவருக்கு நீங்கள் வாக்களிப்பதுதானே சரியாக இருக்கும் என்று தன்னை முன்னிறுத்தி இரண்டாவது ரவுண்டில் வாக்கு கேட்டு வருகிறார். அதே போல் "டெல்லி மாநில அரசும், மத்தியில் உள்ள அரசும் ஒரே கட்சி அரசாக இருந்தால் மாநிலம் வளர்ச்சி பெறும் என்று அந்தக் காலத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த இந்திரா காந்தி எடுத்து வைத்த பிரச்சாரத்தை மோடியும், பா.ஜ.க.வினரும் எடுத்து வைக்கிறார்கள். ஆனால் அரவிந்த் கெஜ்ரிவாலோ இதற் கெல்லாம் சளைக்கவில்லை. 5 கேள்விகள் என்ன, 50 கேள்விகள், 100 கேள்விகள் கூடச் சொல்லுங் கள் பதில் சொல்கிறேன் என்று ஆணித்தரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார். அமெரிக்க அதிபர் ஒபாமா வந்த போது டெல்லி முழுக்க 15,000க்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமராக்கள் வைக்கப்பட்டன. ஒபாமாவுக்கு வைத்தவர்கள் டெல்லி பெண்களின் பாதுகாப்புக்கு வைத் திருக்கலாம் அல்லவா.

குறைந்த பட்சம் அந்த கமராக்களை அப்புறப்படுத்தாமலாவது இருக்கலாம் அல்லவா என்று கேள்வி எழுப்பியுள்ள அரவிந்த் கெஜ்ரிவால், பெண்களை நான்கு சுவருக்குள் அடைத்து வைத்து பாதுகாப்பு வழங்க நினைக்கிறது பா.ஜ.க. ஆனால், நானோ அவர்களுக்கு பூரண சுதந்திரம் கொடுத்து அவர்களின் பாதுகாப்பில் அக்கறை செலுத்த விரும்புகிறேன் என்று பெண்கள் பாதுகாப்பை முன்னிறுத்தி பிரச்சாரம் செய்கிறார். அது மட்டுமின்றி, டெல்லி மாநில அரசு வேறு கட்சியுடையதாகவும், மத்திய அரசு வேறு கட்சியுடையதாகவும் இருக்க வேண்டும். அது தான் வளர்ச்சிக்கு நல்லது என்று அரவிந்த் கெஜ்ரிவால் குரல் கொடுத்து வருகிறார். பா.ஜ.க. மற்றும் அரவிந்த் கெஜ்ரிவால் பிரசாரத்துக்கு இடையில் ஆங்காங்கே காங்கிரஸ் கட்சியும் தேர்தல் வேலைகள் செய்வது போல் காட்டிக் கொள்கிறது. அக்கட்சியின் தலைவர் சோனியாகாந்தி, ராகுல் காந்தி ஆகியோர் பா.ஜ.க. மற்றும் ஆம் ஆத்மி கட்சி இரண்டையும் தாக்குகிறார்.

ஆனால் காங்கிரஸ் முன்னாள் முதல்வர் ஷீலா தீட்ஷித்தோ, தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் ஆம் ஆத்மி கட்சியை ஆதரிக்கும்" என்று அறிக்கை விடுத்தார். அதை பா.ஜ.க. பயன்படுத்த முயற்சித்தாலும் பெரிய பலன் எதுவும் கிடைக்கவில்லை. காங்கிரஸ் கட்சியின் முதல்வர் வேட்பாளராக இருக்கும் அஜஸ் மாக்கன் தீவிரப் பிரசாரம் மேற்கொள்கிறார். ஆனாலும் டெல்லித் தேர்தல் போட்டி என்பது பா.ஜ.க.வுக்கும், ஆம் ஆத்மிக் கட்சிக்கும் இடையில்தான் நிலவுகிறது.

1967களில் எப்படி தமிழகத்தில் காங்கிரஸ்"க்கு மாற்றாக திராவிட முன்னேற்றக் கழகம் உருவானதோ அதே மாதிரி டெல்லி அரசியலில் காங்கிரஸ்"க்கு மாற் றாக அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மிக் கட்சி உருவாகி வருகிறது. காங்கிரஸ்"க்கு வாக்களிக்க வேண்டும் என்று கருதுபவர்கள் கூட இந்த முறை அரவிந்த் கெஜ்ரி வாலுக்கு வாக்களிப்பார்கள் என்றே தெரிகிறது. ஏனென்றால் பா.ஜ.க.வை தோற்கடிக்கும் பலம் உள்ள கட்சியாக இன்றைக்கு டெல்லியில் அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி தான் இருக்கிறது என்பது டெல்லி வாக்காளர்களுக்குப் புரிந் திருக்கிறது.

இதனால்தான் பா.ஜ.க. தன் வாக்கில் கூட சேதாரம் ஏற்படுமோ என்ற அச்சத்தில் கிரன் பேடியை முதல்வர் வேட்பாளராக அறிவித்து அக்னிப் பரீட்சையில் இறங்கியிருக்கிறது. "All out war" என்று சொல்வார்கள். அது போல் தனனிடம் உள்ள தரைப்படை, விமானப்படை, கப்பற்படை போன்ற முப்படைகளையும் ஒரு போரில் வெற்றி பெற நினைப்பவர்கள் பயன்படுத்து வது போல், பா.ஜ.க. தன்னிட முள்ள அனைத்துப் பலத்தையும் டெல்லியில் இறக்கியிருக்கிறது. இந்த பலத்தின் விளைவாக அரவிந்த கெஜ்ரிவால் தோற்கடிக்கப்படுவாரா அல்லது அதையும் மீறி அவர் வெற்றி பெறுவாரா என்பது தான் இப்போது டெல்லி மட்டுமல்ல, அகில இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளின் கவனமும் ஆக இருக்கிறது.

ஏனென்றால் டெல்லி தேர்தல் முடிவுகள் பிரதமர் நரேந்திர மோடிக்கு அரவிந்த் கெஜ்ரிவாலை தோற்கடிக்கும் சக்தி இருக்கிறதா என்பதை நிரூபிக்கும் தேர்தல் என்றே அனைவரும் கருதுகிறார் கள். அடுத்தடுத்து வெற்றிகளை பா.ஜ.க.வுக்கு குவித்துக் கொடுத் துள்ள மோடி டெல்லித் தேர்தலில் மட்டும் முதல்வர் வேட்பாளராக கிரன் பேடியை அறிவித்து. அருண் ஜேட்லியை தேர்தல் பொறுப்பாளராக அறிவித்து, "அரவிந்த் கெஜ்ரிவால் எள கிரன்பேடி" என்று போட்டியை உருவாக்கியிருப்பது தான் பிரதமர் நரேந்திரமோடி மீதான அந்த சந்தேகத்தை விதைத்துள்ளது. டெல்லியின் 7வது முதலமைச்சராக இருந்த அரவிந்த் கெஜ்ரிவால் எட்டாவது முதல்வராக வருவாரா என்பதுதான் இப்போதைய பரபரப்பு! இந்திய வருவாய்த்துறை அதிகாரியாக தேர்வு பெற்று, அப்பதவியை ராஜினாமா செய்து விட்டு ஊழல் எதிர்ப்பு போராட்டவாதியாக மாறி, 49 நாள் தலைநகர் டெல்லியின் முதலமைச்சராகவும் இருந்து விட்டார் அரவிந்த் கெஜ்ரிவால். இப்போது "சிங்கிள் மேன் ஆர்மி" போல் நின்று பிரதமர் நரேந்திர மோடியின் பட்டாளத்தை எதிர்கொள்கிறார். வாக்குகள் எண்ணிக்கை நடக்கும் பெப்ரவரி 12ஆம் திகதி தலைநகர் டெல்லி, நாட்டில் உள்ள பிற மாநிலங்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் செய்தி சொல்லும் திகதியாக அமையப் போகிறது

-எம் காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத் தலையீடு இருக்காது

## விக்ரமபாகு கருணாரட்ன உறுதி



(கொழும்பு)

**வடக்கு மக்கள் சுதந்திரமான முறையில் தங்களது நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய சூழ்நிலை புதிய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு சிவில் நிர்வாக நடவடிக்கையில் இராணுவத்தினரை ஈடுபடுத்தப் போவதில்லை. அத்தோடு வடக்கில் இராணுவத்தினர் முகாம்களுக்குள் வரையறுக்கப்பட்டுள்ளனர் எனவும் புதிய இடதுசாரி கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் உள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இராணுவத்தினர் முகாம்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளனர். சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தப்பட போவதில்லை.

வடக்கு மக்கள் சுதந்திரமான முறையில் தங்களது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். எனினும் வடக்கிலிருந்து இராணுவ முகாம்களை அகற்றுமாறு எவரும் கோரவில்லை.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் படையினருக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையொப்பமிட்டுள்ளார்.

இது மாதாந்தம் கையொப்பமிடும் வழமையான ஓர் வர்த்தமானி அறிவித்தலாகும்.

நிறைவேற்றுப் பேரவையின் அங்கத்துவர் என்ற ரீதியில் இந்த வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்துமாறு அமைச்சரிடம் கோருவேன்.

ஓய்வூதியத் தொகை ஆயிரம் ரூபாவினால் மட்டுமே அதிகரிக்கப்பட உள்ளது. இது போதுமானதல்ல. இதனை மேலும் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்க உள்ளேன்.

தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்துமாறு அரசாங்கம் செய்துள்ள பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுமா? என்பது சந்தேகமே.

வாழ்க்கைச் செலவு அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டுமென விக்ரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வீதி அபிவிருத்தித் திட்டங்களை புதிய அரசாங்கம் நிறுத்தியுள்ளது

முன்னைய ஆட்சியாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களை புதிய அரசாங்கம் நிறுத்தியுள்ளதாக முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இது ஓர் பாரிய பிரச்சினையாகும். வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது. திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விரயமாகிவிடும்.

அரிசி, தேங்காய், சீனி, பருப்பு, தேயிலை போன்றவற்றையே அத்தியாவசிய பொருட்களாக கருத வேண்டும். அவ்வாறான பொருட்களுக்கு இந்த அரசாங்கம் விலைகளை குறைக்கவில்லை.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. எனினும் போலியாக குற்றச்சாட்டுக்களை சுமத்தி ஊடகக் கண்காட்சிகளை நடத்த வேண்டாம்.

அது இந்த நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கத்தை உண்டு பண்ணும் என முன்னாள் பிரதமர் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (இ-5)

# நிவாரணங்களுக்குப் போதுமான நிதி இடைக்கால பட்ஜெட்டில் இல்லையாம்

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

முன்னைய வரவு செலவுத் திட்டத்தில் சிறிய மாற்றங்கள் செய்தே இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிவாரணங்களுக்காக போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதை நாம் எதிர்க்கவில்லை என்று குறிப்பிட்ட அவர், இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்திற்கு எதிர்க்கட்சி ஆதரவு வழங்கும் எனவும் தெரிவித்தார்.

இடைக்கால வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர், மக்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் நிவாரணம் கிடைப்பதை நாம் எதிர்க்கவில்லை. அதனை வரவேற்கிறோம். ஆனால் எதிர்க் கட்சியின் அனுமதியின்றி இந்த வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. எமது ஆதரவின் மூலமே இந்த நிவாரணங்கள் மக்களை சென்றடையும். எந்த திட்டத்திற்கு நாம் ஆதரவு வழங்கினாலும் விமர்சன ரீதியான ஆதரவையே வழங்குவோம்.

இதிலுள்ள விடயங்கள் எவ்வளவு தூரம் யதார்த்தமானது என்ற பிரச்சினை காணப்படுகிறது. நிவாரணம் வழங்குவதற்கு ஒதுக்கிய பணம் போதுமானதா? என்ற சிக்கல்கள் காணப்படுகின்றன. வருடாந்தம் எமது நாட்டில் 3 இலட்சத்து 60 ஆயிரம் முதல் 4 இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. கர்ப்பிணி தாய்மார்களுக்கு வருடாந்தம் 20 ஆயிரம் ரூபா வழங்க 8 கோடி ரூபா தேவை. ஆனால் ஒரு கோடி ரூபாவே இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கசினோ சூதாட்டத்தை முற்றாக நிறுத்துவதாக கூறினாலும் கசினோவுக்கு விசேட வரி இடப்பட்டுள்ளது. இதனூடாக கசினோவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கசினோ சூதாட்டம் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை வெளியிட வேண்டும். மதுபான உற்பத்திக்கு பாரிய வரி அறவிட முடிவு செய்யப்பட்டதனூடாக சிறிய மதுசார உற்பத்திகளை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பாரிய உற்பத்தியாளர்களின் ஏகபோக உரிமைக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. மாளிகை வரி தொடர்பில் தெளிவான முறைமை முன்வைக்கப்படவில்லை.

நெல் கொள்வனவிற்கான உத்தரவாத விலை 50 ரூபாவாக உயர்த்தப்பட்டாலும் இதற்கான முறைமை எதுவும் தயாரிக்கப்பட்டுள்ளதா? கோதுமை விலை குறைக்கப்பட்டதால் உள்நாட்டு விவசாயம் பாதிக்கப்படும். கடந்த காலத்தில் அரிசி பாவனை அதிகரித்திருந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## இதய வாசல்

ஒரு ஏழைப் பெரியவர் குடிசையில் வாழ்ந்து வந்தார். ஒருநாள் இரவு நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. அந்தப் பெரியவரும் மனைவியும் அந்தக் குடிசைக்குள்ளே தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம் பார்த்து யாரோ திடீரென்று கதவைத் தட்டுவது மாதிரி சத்தம் கேட்டது. அந்தப் பெரியவர் முழித்துக் கொண்டு மனைவியை எழுப்பினார். வெளியே யாரோ வழிப்போக்கர். நமக்குத் தெரியாத நண்பர் வந்திருக்கிறார் போல இருக்கிறது.கதவைத்திற என்றார்.

அதற்கு அந்த அம்மா....

உள்ளே இடமே இல்லையே. எங்கள் இரண்டு பேருக்குமே இருக்க இடம்போதாதே... அப்படி இருக்கும் போது இன்னும் ஒருவர் எப்படி உள்ளே இருக்க முடியும்? என்றார்.

அதற்கு அவர் சொன்னார்: இது ஏழையின் குடிசை. இதில் எத்தனை பேர் வந்தாலும் இடம் உண்டு என்றார்.

நான் யதார்த்தமாக பேசுகிறேன். நீங்கள் தத்துவமாக பேசுகிறீர்களே என்றார் அந்த அம்மா. அதற்கு அவர் மறுபடியும் சொன்னார், மனதில் இடமிருந்தால் இந்தக் குடிசையே அரண்மனை மாதிரி நம்மால் உணர முடியும். உள்ளம் குறுகியிருந்தால் ஒரு பெரிய அரண்மனை கூட சிறியதாகத்தான் தெரியும்.

இதுவரைக்கும் இந்தக் குடிசையில் நாம் இரண்டுபேர் படுத்திருந்தோம். இந்த இடத்தில் நிச்சயமாக மூன்று பேர் படுக்கமுடியாது. ஆனால் குறைந்தது மூன்று பேர் உட்காரலாம். அதனால் நாம் இருவரும் உட்கார்ந்தால் இன்னும் ஒருவருக்கு இங்கே இடம் கிடைக்கும் என்றார்.

அந்த அம்மா கதவைத் திறக்க உடம்பு முழுவதும் நனைந்துபோய் ஒருவர் நின்றார். கதவைத் திறந்ததும் உள்ளே வந்தார். மூன்று பேரும் உட்கார்ந்தபடி பேச ஆரம்பித்தார்கள்.

சிறிது நேரம் கழித்து இன்னும் இரண்டு பேர் வந்து கதவைத் தட்டினார்கள்.உடனே அந்தப் பெரியவர் வேறு யாரோ வந்திருக்கிறார்கள் போல இருக்கிறதே? கதவைத் திறவுங்கள் என்றார்.

சற்று முன் உள்ளே வந்த ஆள் கதவைப் திறப்பதா? இங்கே இடமே இல்லையே? என்றான்.

கொஞ்ச நேரத்திற்கு முன்னர் இவன் வெளியில் நின்றான். இந்தப் பெரியவரின் மனதால் தான் நமக்கு உள்ளே இடம் கிடைத்தது என்பதை மறந்து விட்டான். கதவைத் திறக்க வேண்டாம் என்றான்.

அதற்கு அந்தப்பெரியவர் அன்பு தான் உங்களுக்கு இங்கே இடம் கொடுத்தது. அந்த அன்பு இன்னமும் இருக்கிறது. அது உங்களுடன் முடிந்து போகவில்லை. தயவு செய்து கதவைத் திறந்து விடுங்கள்.

நாம் இப்போது கொஞ்சம் விலகித்தானே உட்கார்ந்திருக்கிறோம்.இனி கொஞ்சம் நெருங்கி உட்காரலாம். எல்லாம் சரியாகிவிடும் என்றார் அந்தப் பெரியவர்.

கதவைத் திறந்தார்கள். அந்த இரண்டு பேரும் உள்ளே வந்தார்கள். ஒரு வழியாக சமாளித்து உட்கார்ந்தார்கள். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்றார் திருவள்ளுவர். அது இது தான்.

வாழ்க்கையின் அமைதியான நேரம் எது தெரியுமா?

எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் அன்பு செலுத்தும் நேரம் இருக்கிறது பாருங்கள். இதைவிட அமைதியான நேரம் வேறு எதுவுமில்லை என்கிறார் ஓஷோ.

இது இப்படி இருக்க, நம் ஆள் ஒருவன்...

எங்கள் வீட்டுக்கு அடிக்கடி விருந்தினர் வருவது உண்டு. எவ்வளவு விருந்தினர்கள் வந்தாலும் கதவைத் திறந்து விட்டுவிட்டு மரியாதையாக நான் வெளியில் போய் விடுவேன் என்றான்.


ஏன் அப்படி செய்கிறாய்... என்று கேட்டேன்.

நான் வீட்டுக்குள் இருந்தால் அவர்களுக்கெல்லாம் சாப்பாடு போட வேண்டியிருக்குமே. அதனால் தான், நான் வெளியே போய் விடுவேன் என்றான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சர்வதேச திரைப்பட நகரம் குவியும் திரைப்பட தயாரிப்பாளர்கள்



முன்னாள் ஜனாதிபதிமஹிந்தாவின் பேர் சொல்லும் ஒரே நல்ல விஷயமாக அறியப்பட்டு வந்தது 'மஹிந்த ராஜபக்ஷே நேஷனல் டெலி சினிமா பார்க்' என்ற திரைப்பட நகரம். இலங்கையின் தென்கோடியிலிருக்கும் இந்தத் திரைப்பட நகரம் நம் ஹைதராபாத், மும்பை ஃபிலிம் சிட்டிகளைவிட வசதிக ளும் குறைந்த கட்டணமும் இப்போது இலங்கையை நோக்கி உலகின் கவனத்தைத் திருப் பும் அளவுக்குப் பலரை ஈர்த்துள்ளது.



சிங்கள சினிமாவை வளர்த் தெடுக்க அந்த நகரத்தை நிர்மாணித்திருந்தது மகிந்த ராஜபக்ஷே அரசு.

கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் கட்டமைப்புக்கென ஒதுக்கி செதுக்கி கடைசியில் அந்தத் திரைப்பட நகரத்துக்குத் தன் பெயரையும் வைத்தார்.

'மஹிந்த ராஜபக்ஷே தேசியத் தொலைக் காட்சி மற்றும் சினிமா பூங்கா' என்று பெயர். 2006இல் அந்தத் திரைப்பட நகரம் கட்டமைக் கப்பட்டாலும் கடந்த ஆண்டு தான் நூற்றுக்கும் மேலான அரங்குகள், தங்கும் விடுதிகள், இண்டோர், அவுட் டோர் தியேட்டர் வசதிகளோடு திறந்து வைக்கப்பட்டது.

இங்கே எடுக்கப்பட்ட முதல் வெளிநாட்டுப்படம் என்ற பெருமை யைப் பெற்றிருக்கிறது இந்தி சினிமா இயக்குநர் அனுராக் காஷ் யப் இயக்கிய 'பாம்பே வெல்வெட்' படம். 50, 60களில் மும்பை நக ரம் எப்படி இருந்ததோ, அதே போன்ற செட்களை உருவாக்கி மாதக்கணக்கில் தங்கி இருந்து படத்தை எடுத்திருக்கிறார் அனுராக் காஷ்யப்.

"மும்பையில் இந்தப் படத்தை எடுத்திருந்தால் நிறைய செலவாகி இருக்கும். படத்துக்கான அரங்கு மற்றும் வாடகைக்கான செலவில் நான்கில் ஒரு பங்கு தான் அங்கே ஆனது" என்று சொல்லி இருக்கிறார் இயக்குநர்.

இலங்கை அரசின் தகவல் மற்றும் ஊடகத் துறையின் கட்டுப் பாட்டில் இயங்கிவரும் இந்தத் திரைப்பட நகரமானது இலங்கை யின் தென் கிழக்குப் பிராந்திய மாவட்டமான ஹம்பன்தோட்டா மாவட்டத்தில் ரன்மினிதென்னா என்ற இடத்தில் அமைந்திருக் கிறது.

இங்கிருந்து சில கிலோ மீட்டர் -களிலேயே கடலும், சமவெளி நிலமும், மலைகளுமான வெவ் வேறு நில அமைப்புகள் வந்து விடுவதால், எல்லாவிதமான லொகேஷன்களை ஒரே இடத்திலிருந்து முடித்துவிடுகிறார்கள். அண்மையில் பாம்பே வெல்வெட்டின் பாடல் காட்சிகள் இல்லாத திரைப்படம் ராஜபக்ஷேவுக்கு போட்டுக்காட்டப்படுவதாக இருந்தது.

அவர் தேர்தல் பிஸியில் ஜனவரியில் பார்ப்பதாக உத்தரவாதம் கொடுத்திருந்தார். அடுத்த மாதமே தேர்தலில் தோற்றுப் போவார் என்று எதிர்பார்க்க வில்லையோ என்னவோ, இப் போது அவர் ஆசை ஆசையாய் தன் பெயர் வைத்த திரைப்பட நகரத்தின் பெயரை புது ஜனாதி பதி மைத்ரிபால சிறிசேனா மாற்றியதில் வருத்தத்தில் இருக்கிறார்.

ஆம். அது வெறும் ரன்மினி தென்னா சர்வதேசத் திரைப்பட நகரம் என பெயர் மாற்றம் செய்ய ப்பட்டு இருக்கிறது.

அதோடு அனுராக் காஷ்யப் காதில் யார் கிசு கிசுத்தார்களோ, படத்தை யாருக்கும் போட்டுக் காட்டாமலே திரும்பி இருக் கிறார்.

ஓவரா ஆட்டம் போட்டா சும்மாவா!

-ஜூனியர் விகடன்-

# காதலி வேணுமா? இதைப் படியுங்க பாஸ்



**த**னியாக இருக்கிறீர்களா? உங்களுக்கு என தோழி இல்லையா? கவலை வேண் டாம் என்கிறது ஒரு வெப்சைட். ஆச் சர்யத்துடன் உள்ளே நுழைந்தால், உருகி உருகிக் காதலிக்க காதலி தருகிறோம் என்கிறார்கள்.

மாத்யூ ஹோமேன், அமெரிக்காவில் வழக்கறிஞர். ஏழு வருடங்களுக்கு முன் விவாகரத்து ஆனது. அதன் பின் தனித்து விடப்பட்டதைப் போல உணர்ந்த மாத்யூவுக்கு தன் பெர்சனல் விஷயங் களைப் பகிர்ந்து கொள்வதற்கு தோழியிருந்தால் எப்படியிருக்கும் என்று தோன்றியது.

விவாகரத்து தந்த கசப்பினால் வெர்ச்சுவல் காதலியாக இருந்தால் தேவலை என்று தோன்றியது. அப் போது உதித்த ஐடியாவே இந்த 'இணைய தோழி'. உடனடியாக இன்விசிபிள் கேர்ள ஃப்ரெண்ட், இன்விசிபிள் பாய் ஃப்ரெண்ட் என்கிற இரண்டு வெப்சைட்டையும் பதிவு செய் திருக்கிறார்.

பின்னர் வேலை நெருக்கடியில் இந்த விஷயத்தை மறந்து விட்டாராம். 2013இல் அமெரிக்காவின் செயிண்ட் லூயிஸ் நகரத்தில் புதிய சிந்தனைகளுக்கான போட்டியில் இவருடைய இணைய தளம் ஐடியா முக்கியமான் ஒன்றாக அறிவிக்கப்பட் டது. தொழில் நுட்ப ரீதியாகவும் நிதியுதவி செய்யவும் ஆட்கள் கிடைத்தனர்.

"ஆண் தோழர் வேண்டுமானாலும் பெண் தோழி வேண்டுமானாலும் அதற்கான இணைய தளத்தில் பதிவு செய்ய வேண் டும். அவர்கள் கேட்கும் முதல் தகவல்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்ட பின் மாதம் ஒன்றுக்கு 25 டாலர் கட்டணம் செலுத்த வேண்டும். உங்கள் வெர்ச்சுவல் காதலிக்கென தனி மொபைல் எண் இருக்கும்.

அதிலிருந்து மாதம் 100 எஸ். எம்.எஸ்களும் வாய்ஸ் மெசேஜ்களும் கைகளால் எழுதப்பட்ட காதல் கடிதங்களும் ஸ்கேன் செய்யப்பட்டு மொபைலுக்கு வரும்" என்கிறார் மாத்யூ.

"உண்மையில் நீங்கள் அனுப்பும் மெசேஜ்களுக்கு ரிப்ளை செய்யப்போவது உயிரும் சதையுமாய் இருக்கும் பெண் தான். இதற்கென முன்னணி பி.பி.ஓ நிறுவனத்தில் ஒப்பந்தம் செய்து சிறப்புப் பணியாளர்கள்

தெரிய வாய்ப்பேயில்லை.

உங்கள் மனக் காயத்துக்கு ஆறுதல் சொல்வார்கள். ஆசைக



தேர்வு செய்து பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளதாம்.

ஆனால் அவர்கள் யாரென்று உங்களுக்கும் நீங்கள் யாரென்று அவர்களுக்கும்

ளையும் கவலைகளையும் வெளிப் படுத்திக்கொள்ள ஒரு நபர்.

இதற்குக் கட்டணமாக நீங்கள் செலுத்துவது, உண் மையில் காதலியோ கேர்ள் ஃப்ரண்டோ இருந்தால் ஆகும் செலவில்பத்தில் ஒரு பங்குதான்" என்று சிரிக்கும் மாத்யூ இப்பவும் சிங்கிள் தானாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தன் மரபை மீறியமை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல

## பரஞ்சோதி கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழரசுக்கட்சியானது 60களின் இறுதியின் பின்னர் அரசுடன் சேராமல் சுதந்திர தின கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளாமல் பேணி வந்த மரபு எமது பிரச்சினைகளுக்கான சிறு பரிகாரமும் இந்த அரசினால் செய்யப்படாத நிலையில் மீறப்படுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் உப தலைவருமான அ.பரஞ்சோதி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் 67ஆவது சுதந்திரதினம் கொண்டாடப்பட்டு முடிந்துள்ளது. சுதந்திரம் என்பது உண்மையில் எல்லோருக்கும் ஒரு அளப்பரிய ஆனந்தத்தைக் கொடுக்கும் நிகழ்வாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் இலங்கை குடியரசாகப் பரிணமித்த 1972ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழர்கள் அதைத் தம்மி டையே சுதந்திர உணர்வாகக் கொண்டு மதிப்ளிப்பதில்லை என்பது வரலாறாகும்.

குடியரசான ஆரம்பத்தில் சுதந்திர தினத்தை தமிழர்கள் துக்க தினமாக அனுசரித்து கறுப்புக்கொடியேற்றி வந்தனர். காலப்போக்கில் கறுப்புக் கொடி கட்டுவதை விடுத்து அதைப்புறக்கணித்து வந்தமை யாவரும் அறிவர். அதனால் எமது தமிழரசுக் கட்சியோ, தமிழர்விடுதலைக் கூட்டணியோ, தமிழ்தேசியக்கூட்டமைப்போ சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள மறுத்துவந்தமையை நாம் அறிவோம். இப்படியான சூழ்நிலையில் இந்தவருட சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டமை தமிழ் தேசிய உணர்வுள்ள எவரையும் ஆத்திரம் கொள்ள வைத்திருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல.

கட்சி அரசியலைப் பொறுத்த வரை யாராக இருந்தாலும் ஒரு கூட்டுப் பொறுப்புக்கு உள்ளாக வேண்டியவர்களே. யாப்பு அனுமதித்தாலன்றி அதன் பதவியில் இருக்கும் வரை தனிப்பட்ட அரசியல் முடிவுகளை யாரும் எடுக்க முடியாது.

ஆனாலும் இதுவரை கடைப் பிடிக்கப்பட்ட மரபுக்கு மாறாகச் செயற்படும்போது கட்டாயமாக ஒரு கூட்டுத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டிருக்கவேண்டும். இங்கே தமிழ் தேசியக் கூட்டமைப்பிலோ அல்லது தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவிலோ அல்லது இரண்டினதும் உயர்சபையிலோ இவர்களின் பங்குபற்றுதல் சம்பந்தமாக எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று உறுதியாகத் தெரிகின்றது. ஆகவே இது சம்பந்தமாக விவாதிக்க தலைமைகள் ஏற்ற ஒழுங்குகள் செய்யவேண்டுமென வேண்டுகின்றேன்.

முன்னரும் மேதினம் ஒன்றில் ஏற்றப்பட்ட சிங்கக்கொடிவிவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால அது திட்டமிடப்படாமல் உடனடியாக நடைபெற்ற விவகாரம் ஆதலால் சமாதானமடையக் கூடியதாயிருந்தது. தற்போதைய சுதந்திர தினக் கொண்டாட்டமானது திட்டமிட்டு மேற் கொளளப்பட்டுள்ளது. ஆகவே முற்கூட்டியே இதை விவாதித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம்.

தற்போது இதற்கு இராஜதந்திரச் சாயம் பூசப்படுகிறது. உண்மையில் தமிழர் மத்தியில் சம்பந்தரைவிட சிறந்த ஒரு தந்திரி தற்போது இல்லை என்பதை யாவரும் அறிவர். ஆனாலும் இராஜதந்திரத்தை பொறுத்த நேரத்தில் பொருத்தமான வகையில செய்வதே நன்மை பயக்கும். இந்த அரசைக் கொண்டு வந்ததில் சம்பந்தரின் இராஜதந்திரம் மிகத்திறமையாக வெளிப்பட்டதை நாம் அறிவோம.

அப்படியிருந்தும் இதுவரை தமிழா விடயத்தில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதகாரம் எந்த வகையிலும் பிரயோகிக்கப்படவில்லை என்பது வருத்தத்துக்கு உரியது. காணி அபகரிப்பு விடயமாயினும் அரசியல் கைதிகள் விடயமாயினும் ஜனாதிபதி நினைத்திருந்தால் இதுவரை சிறுபங்கை யாவது ஆற்றியிருக்கலாம்.

தற்போது இராணுவத்தை வெளியேறுமாறு நாம் கோரிவருகினறோம். ஆனால் அவர்களை இங்கே நிலை நிறுத்தும் நடவடிக்கையாக அவர்களுக்கும் பொலிஸ் அதிகாரம் வழங்கி அவர்களது சிவிலியன்களுடனான தொடர்பையும் உறவையும் வலுப்படுத்த இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆகவே இராஜதந்திரம், நல்லெண்ண நடவடிக்கை என்று கூறிக்கொண்டு எமது மரபை மீறி சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பங்கு கொண்டமையை யிட்டு மிகவும் மனம் வருந்துகின்றேன. நான் நினைக்கின்றேன் இது அமைச்சர் பதவியை எடுத்துக் கொண்டு அரசில் சேர்ந்தமைககு ஒப்பாகும் விடயமாகும்.

ஏனெனில் தமிழரசுக் கட்சியானது 60களின் இறுதியின் பின்னர் அரசுடன் சேராமலும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளாமலும் பேணி வந்த மரபு எமது பிரசசினைகளுககான சிறு பரிகாரமும் இந்த அரசினால் செய்யப்படாத நிலையில் மறப்படுவது எந்த வகையிலும் ஏற்றுக கொள்ளத்தக்கதல்ல.

சர்வதேச ரீதியில் கூட்டமைப்பின் தீர்க்கமான நடவடிக்கைகளினால் கடந்த அரசுக்கெதிரான நடவடிக்கைகள் கூர்மையடைந்தாலும் சாவதேச அரங்கில் அதைக் கொண்டு சென்ற பெருமை விடுதலைப் புலிகளையே சாரும்.

அப்படி இருக்கும் போது அவர்களில் பலரும் அதனால ஏற்பட்ட காரணங்களினால் பல பொதுமக்களும் இன்று சிறைகளிலும் அகதிகளாகவும் இருக்கும் போது எமது தலைவர்கள் வலிந்து தமது நல்லெண்ணத்தைக் காட்ட விளைந்துள்ளனர்.

இதற்கான பரிகாரங்களை இன்னும் சில நாட்களில் இந்த அரசு செயத் தவறுமானால் கூட்டமைப்பானது அரசியல் கட்சி என்ற ரீதியில் எதிர்வரும் தேர்தல்களில் பாரிய சவாலைச் சந்திக்கும் என அஞ்சுகின்றேன்.

ஆகவே தலைமைகள் தமது நோக்கத்துக்கான அறுவடையை விரைந்து மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# காணாமற் போனோரை மீட்டுத்தரக்கோரி யாழில் திங்களன்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு, கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கடந்த காலத்தில் அராஜக அரசாங்கங்கள் காணாமற் போகச்செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான உறவுகளை மீட்டுத்தரக்கோரியும் சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும் தற்பொழுது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் உருவாகியிருக்கும் நல்லாட்சிக்கான அரசாங்கத்தை நோக்கி எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்த வடக்கு,கிழக்கு மாகாண காணாமல் போனோருக்கான அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.**

கடந்தகாலத்தில் பெரும் போர்களின் போதும் குறிப்பாக முள்ளிவாய்க்காலில் முடிந்த வகை தொகையற்ற மானுடக்கொலைகள் நடைபெற்ற போரின்போதும் அதன் பின்பும் காணாமற் போகச்செய்யப்பட்ட தமிழ் இளைஞர்,யுவதிகளை இழந்து தேடி அலைந்து அவர்களின் பெற்றோர்களும் மனைவி மற்றும் உறவுகளும் எதுவித பயனுமற்று கண்ணீருடன் ஏக்கத்துடன் இன்றும் வாழும் நிலையில் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றமும் அந்த ஆட்சியாளர்களின் நூறு நாட்கள் வேலைத்திட்டமும் தமிழ் மக்களின் வாழ்வில் நிம்மதியையும் சுபீட்சத்தையும் கொண்டு வருமென ஒட்டுமொத்த தமிழினம் எதிர்பார்க்கும் நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை மற்றும் நகர பிரதேசசபை உறுப்பினர்கள் மகளிர் அணியினர், இளைஞர் அணியினர் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மாணவர்கள்,புத்திஜீவிகள் ஆசிரியர் சங்கங்கள்,தொழிறசங்கங்கள், வர்த்தக பெருமக்கள்,சமூகத்தின் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், பொதுசன அபிமானமுள்ள சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்,பொதுமக்களென திரண்டு காணாமற் போன உறவுகளை மீட்டுத்தரக் கோரியும் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுவிக்க கோரியும் திரண்டு குரல் கொடுக்கவேண்டுமென வடக்கு,கிழக்கு மாகாண காணாமற் போனவர்களின் உறவுகளின் அமைப்பு மிக நேசமுடன் அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை 9 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக இந்த கவனயீர்ப்பு நடைபெற்று அமைதியாக பேரணியாக யாழ். வைத்திய சாலை வீதியூடாக சென்று யாழ்ப்பாணம் கச்சேரியில் ஜனாதிபதிக்கான மகஜர் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்படுமென வடக்கு,கிழக்கு மாகாண காணாமற போனவர்களின் உறவுகளின் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (இ)


# பிரிவுத்துயர் பகிர்வு



### ஜேம்ஸ் அலெக்ஸ் வில்விரெட் ஜெயசீலன்

யாழ்.பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜேம்ஸ் அலெக்ஸ் வில்விரெட் ஜெயசீலன் கடந்த 4ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 தொடக்கம் பி.ப 12.30 மணி வரை Friedhof,Werne,59368 Sudring,Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.




### கணபதிப்பிள்ளை நாகலிங்கம்

யாழ்.பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நாக லிங்கம் 04.02.2015 புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் அச்சுவேலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சூரியகுமார் சண்முகரட்ணம்

கொழும்பு வெள்ளவத்தையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவடமாகவும் கொண்ட சூரியகுமார் சண்முகரட்ணம் கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை மு.ப 10 மணிதொடக்கம் 11.30 மணிவரை St Marylebone Crematorium,East End Road L-ondon,N2 0RZ, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.




### அல்பிரட் தம்பிப்பிள்ளை அரசரட்ணம்

புன்னாலைக்கட்டுவான் வடக்கை பிறப்பிடமாகவும், திருகோமலையை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் தம்பிப்பிள்ளை அரசரட்ணம் காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 8 மணியளவில் ஜயரத்ன மலர்ச்சாலையில் ஆராதனை நடைபெற்று பின்னர் திருவுடல் பொராளை கனத்த மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி வேல் பூமணி

கொழும்புவெள்ளவத்தையைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பூமணி வேல் கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பிற்பகல் 1.30 தொடக்கம் 2.00 மணி வரை St John's Norway Cemetery,256 Kingston Road,Toronto,ON M4L 1S7,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப் படும்.



### திருமதி கணாதிப்பிள்ளை அன்னமுத்து

யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இறக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளைஅன்னமுத்து கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை பி.ப 5 மணியளவில் நெடுந்தீவு கிழக்கு கட்டு இராமன்சல்லி மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி அன்னமுத்து கணபதிப்பிள்ளை ஜேம்ஸ்

நெடுந்தீவு கிழக்கு,15ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,இல.24,இறக்கா வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை ஜேம்ஸ் அன்னமுத்து கடந்த 4ஆம் திகதியன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைக்காக இன்று முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் நெடுந்தீவு கிழக்கு,கட்டுராமன் சல்லி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-34

## விவசாய பீட வெள்ளி விழா ஆரம்பம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வெள்ளிவிழாவினை கொண்டாடுவதற்கு விவசாயபீடம் ஆரம்பித்திருக்கின்றது. கடந்த 3ஆம் திகதி இதனை சம்பிரதாயபூர்வமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதி, விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் முன்னைநாள் விவசாய பொருளியல் தலைவரும் பேராசிரியருமான நித்தியானந்தன் மற்றும் பழைய மாணவர்கள் பலருடனும் தற்போதய மாணவர்களுடன் எளிமையான முறையில் மரம் நடுதலுடன் ஆரம்பமானது. பேராசிரியர் நித்தியானந்தன் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை அனைவரையும் மகிழ்வுற வைத்தது. மூத்தவர்கள் ஆசியுடன் வெள்ளிவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகியது சிறப்புக்குரியதாகும். விவசாய பீடத்தின் கனகின்றன. இரண்டரை தசாப்பதமாக அல்லறப்பட்டு அங்கு மிங்குமாக ஓடி கிளிநொச்சியில் தனக்கென ஓரிடத்தில் விவசாய பீடம் மீண்டும் செயற்படத் தொடங்கியிருப்பது சிறப்புக்குரியதும் பாராட்டத்தக்கதுமாகும். இது மக்களின் எதிர்பார்ப்பு. மக்களின் அபிலாஷைகளை நிறை வேற்றுவது பல்கலைக்கழகத்தில் விவசாயபீடம் சார்ந்து அனைவரு க்கும் உள்ள கடப்பாடாகும். இப்பீடம் தனிமனிதனின் உழைப்பு அல்ல. பலர் சேர்ந்து உருவாக்கிய நிறுவனமிது. இதற்கான வாய்ப்புக்களையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண் டும்.

விவசாய பீடமும் பொறியியல் பீடமும் எமது பிரதேசத்தில் நிச்சயம் மக்களுக்கு தேவையான தொழில் சார்ந்து பார்த்தால் விவசாயம்; கால்நடை மற்றும் மீன்பிடி இவற்றுடன் சுற்றுலாத்துறை என்பனவற்றின் அபிவிருத்தியை மையப்படுத்தி பார்க்கலாம். இவ்வளங்கள் சார்ந்த தொழிற்றுறைக்கு முக்கியத்துவம் கொடுத்து மேன்மையுற வைக்க வேண்டியது விவசாய பீடத்துடனிணைந்த அனைவரினதும் பொறுப்பாகும். அரசவேலை வாய்ப்பு என்பது இனிவருங்காலத்தில் அதிகவில் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் அரிதாகவே இருக்கும. மேலதிகமாக தனியார் நிறுவன வேலைவாய்ப்புக்களை நம்பியே இனி தொழிற்றுறை நகர இடமுண்டு. இந்நிலையில் இருக்கின்ற வளங்களை பயன்படுத்தி தேவையான தொழிற்றுறைகளை விருத்திசெய்ய வேண்டியிருக்கின்றது. க.பொ.த மாற்றியும் புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தவும் வேண்டியிருக்கின்றது. தொழிற்றுறைக்களுக்கான பயிற்சிகள் தொடர்ச்சியாக கொடுக்கப்பட்டாலன்றி அவர்களை தொழிற்றுறைக்குள் முழுமையான வினைத்திறனான தொழிலாளர்களாக உள்வாங்கமுடியாது. இந்த நிலையில் மாற்றத்தை எதிர்பார்த்திருக்கும் அனைவருக்குமான வழிவகைகள் உருவாக்கப்பட வேண்டும்.

விவசாய பீடத்தின் செயற்பாடுகளை இனிவருங்காலத்தில் விரிவாக்குவதற்கான வழிவகைகளை நாம் விரைந்து கண்டாக வேண்டும். மக்களுக்கான சேவைசெய்யும் காலத்தில் நாம் பயணித்திருக்கையில் விவசாயப் பெருமக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கும் எம்மாலான தீர்வினை கண்டாக வேண்டும். ஆராய்ச்சியின் மூலமாகவும் கற்றலினை மேம்படுத்தியும் ஞான பீடம் என்பன இணைந்த கற்றை நெறியினையும் இதற்காக முயற்சிக்கலாம். எதிர்காலத்திற்கு தேவையான கற்கை நெறிகளை மையப்படுத்தியதாக எமது கற்கைகளை மீளப்புதுப்பிக்க வேண்டியதனை இதில் வலியுறுத்தி தொடர்ந்து செய்ய வேண்டியவற்றை மக்களிடமும் பட்டதாரிகளிடமும் பெற்று மாற்றியமைக்கலாம். பழைய மாணவர்களின் கருத்துக்களுக்கு இங்கே முக்கியத்

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XIX**







வுகள் பல. தொடர்ச்சியான இடர்களை சந்தித்து தாங்கி உயர்ந்தெழுந்திருக்கின்றதனை பார்க்கும்போது அனைவரும் மெச்சுவே செய்கின்றனர். ஒரு பல்கலைக் கழகத்துக்கிணையான பல்கலைக்கழக கட்டடத்தில் மீளப்புதுப்பிக்கப்பட்டு மீண்டும் செயற்பட ஆரம்பித்திருக்கின்றது.

கிளிநொச்சியில் விவசாய பீடமும் பொறியியல் பீடமும் ஆரம்பமாக வேண்டும் என நினைத்தவர்களின் கனவு பலித்திருக்கின்றது. மக்களின் விருப்பத்திற்கிணைவாக இப்பீடங்கள் கிளிநொச்சியில் அமையப்பெற்றிருக்நுட்ப அறிவையும் மற்றும் அறிவாற்றலையும் விருத்தியடைய வைக்கும். விவசாய பீடத்தில் கல்விகற்று பட்டதாரிகளாகயுள்ள வர்களும் தற்போது பெரிய பதவிகளிலுள்ளவர்களும் ஒன்றிணையும் இடமாக இது அமைந்துள்ளதெனலாம் விவ சாய பீடத்தின் உழைப்பு விவசாய பெருமக்களின் தேவை களை அறி ந்து அவர்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த தொழிற்றுறையை விருத்தி செய்ய இன்னும் பல முயற்சியிலீடுபட தூண்டுதலாக அமையும.

தற்போதய கல்விமுறையில் மாற்றம் கொண்டு வரவேண்டியது அவசியமாகும். தொழிற்றுறை சாதாரண தரம் பயின்ற மாணவர்கள், க.பொ.த உயர்தரம் கற்ற மாணவர்கள், பல்கலை க்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளாக வெளியேறியவர்கள் என பலருடைய வேலை வாய்ப்பை உறுதிப்படுத்தும் செயற்றிட்டத்தினை நாம் வரையறை செய்ய வேண்டியுள்ளது. தனியார் தொழிற்றுறைகளுக்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தினாலன்றி இனிவருங்காலத்தில் வேலை வாய்ப்பு என்பது கேள்விக்குறியே. இதனை மையப்படுத்தி விவசாய பீடத்தின் கற்றலை தொழில்வாய்ப்புக்கான வினைத்திறனானதாக எதிர்கால எதிர்பார்ப்பினை நாம் ஈடுகட்ட முடியும். வியக்கத்தகு செயற்பாடுகளில் மாணவர்களையும் ஈடுபடுத்த அவர்களின் மென்திறனை விருத்தி செய்ய முடியும். அனுபவக்கற்றல் இங்கே முழுமையாக உள்வாங்கப்பட வேண்டும். மாணவர்கள் பலதரப்பட்ட அனுபவங்களை உள்வாங்கும் போது அவர்களால் சிறப்பாக தொழிலை செய்யமுடியும்.

விவசாய பீடம் பொறியியல் பீடத்துடனுமிணைந்து இணைந்த கற்கையினை ஆரம்பிப்பதற்கு வழியுண்டு. இருபீடங்களுடனும் முகாமைத்துவபீடம் மற்றும் விஞ் துவம் கொடுத்தல் வேண்டும். விவசாயபீடத்தின் பட்டதாரிகள் விவசாய பீடத்தின் சொத்துக்களாகும். இப்பீடத்தின் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. இதனை நாம் முழுமையாக உள்வாங்க வேண் டும். வாருங்கள் உங்கள் கருத் துக்களை வெளிப்படையாகவே முன்வையுங்கள். நாம் எதிர் பார்த்திருக்கும் பீடத்தை அனை வரும் சேர்ந்து இயக்கலாம். மக்களின் எதிர்பார்ப்புக்களை உள் வாங்கி முன்னுயர வேண்டும். இது பீடத்தின் வாழ்க்கையோடு ஒன்றிய ஒரு ஜீவனின் வேண்டுகோள்!

## தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு போட்டிப் பரீட்சை

சுகாதார அமைச்சின் திணைக்கள தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம்III, தொழில்நுட்ப உத்தியோகத்தர்(மின்) தரம் III, தொழில்நுட்ப புகைப்படப் பிடிப்பாளர் தரம் III, இயந்திர பரிபாலகர் தரம்III, மின் உயர்த்தி தொழில், தொழில்நுட்பவியலாளர் தரம்III ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு18வயதுக்குகுறையாத 30 வயதுக்கு மேற் படாத விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் பெப்ரவரி 23 ஆம் திகதி க்கு முன்னர் பணிப்பாளர், நிர்வாகம் -7 "சுவசிறிபாய" சுகாதார அமைச்சு, இல.385 வணக்கத்திற்குரிய பத்தே கம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு-10 என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இப்போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கல்வித்தகைமை மற்றும்தொழில்சார்தகைமைகளைநேற்று வெளியான வர்த்தமானிப் பத்திரிகை யிலோ அல்லது வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ)

## தடைதாண்டல் பரீட்சை

அரசமுகாமை உதவியாளர்சேவையின் வகுப்பு III இன் அலு வலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை இலங்கை பரீட்சை திணைக்களம், த.பெ.இல. 1503. கொழும்பு, என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## தேசிய ஔடத சட்ட மூலத்திற்கு அமைச்சரவையில் அங்கீகாரம்

### அமைச்சர் ராஜித தகவல்

(கொழும்பு)

தேசிய ஔடத சட்ட மூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த சட்ட மூலத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மருந்துகளின் விலைகளை குறைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து சட்டமூலம் அடுத்த சில தினங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.


பொது வேட்பாளர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் தேசிய மருந்துக் கொள்கை பெப்ரவரி 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன

(பனிக்கன்குளம்)

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தில் காணாமற்போன உறவுகளின் விபரங்களை உண்மைத்தன்மையான ஆவணத்துடன் பதிவுசெய்யுமாறு முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர் திருமதி மேரிக மலா குணசீலன் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று. ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் நேற்று முன்தினம் பதிவுகள் ஆரம்பமாகி இன்றுவரைநடைபெறவுள்ளது.





இதில் நேற்று முன்தினம் வடமாகாண சபை உறுப்பினரின் வீட்டில் நடைபெற்ற பதிவுகளில் புதுக்குடியிருப்பு செயலக பிரிவிற்குட்பட்ட அனைத்து காணாமற் போனோரின் உறவுகளும் அத்தோடு மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், கரையாமுள்ளிவாய்க்கால், வெள்ளாமுள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 106 பேரும் பதிவுகளை மேற்கொண்டனர். நேற்றையதினம் கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற பதிவுகளில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வாழும் காணாமற் போனவர்களின் பதிவுகளும் இடம் பெற்றுள்ளது.

இப்பதிவுகள் அனைத்தும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை குழு உறுப்பினர்களிடம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகபிரிவிற்குட்பட்ட கிராமங்களில் வாழும் காணாமற் போனவர்களின் உறவுகள் அனைவரும் சிவநகர் பொதுநோக்குமண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ளவுள்ளனர். (அ-2-281)




# மாடுகளுடன் மோதியது லொறி; 3 மாடுகள் தலைநசுங்கிப் பலி!

(குருமன்காடு)

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த லொறியொன்று மாடுகளுடன் மோதி தடம்புரண்டதில் மூன்று மாடுகள் தலைநசுங்கி உயிரிழந்தன.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் புளியங்குளத்திற்கும் கனகராயன் குளத்திற்கும் இடைப்பட்ட புதூர் சந்தி பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதா...து.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி செத்தல் மிளகாய் மூடைகளை ஏற்றிக் கொண்டு பயணித்துக்கொண்டிருந்த லொறி குறித்த வீதியை அண்மித்த வேளை அங்கு வீதிக்கு குறுக்காகப் படுத்திருந்த மாடுகளுடன் மோதி தடம்புரண்டது.



இதில் மூன்று மாடுகள் பரிதாபகரமாக தலை நசுங்கி இறந்ததுடன் பாரஊர்தி தலை கீழாகப் புரண்டு விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து பாரதூரமாக இருப்பினும் தெய்வாதீனமாக மனித உயிரிழப்புக்களோ காயமோ எவருக்கும் ஏற்படவில்லை எனினும் பார ஊர்தி கடுமையாக சேதமடைந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-250)

# பிரதேச சபை தேர்தலிலிருந்து ஒதுங்கியது ஐ.ம.சு.முன்னணி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த மேற்படி பிரதேச சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடவிருந்த ஐ.ம.சு. முன்னணியின் 10 வேட்பாளர்களும் தாம் தேர்தலில் போட்டியிடாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அக்கட்சியின் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கான பிரதான வேட்பாளர் வீரசிங்கம் கலைச்செல்வன் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர்நா.வேதநாயகனிடம் 10 உறுப்பினர்கள் கையொப்பமிட்டமகஜர் ஒன்றை நேற்றைய தினம் காலை 9 மணிக்கு கையளித்துள்ளார்.

அம்மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தாங்கள் கடந்த கால ஆட்சியிலிருந்த ஐம.சு.முன்னணியுடன் இணைந்து கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தேர்தலில் போட்டியிட்டு மக்களுக்கு சேவை செய்ய முனைந்ததாகவும் ஆயினும் அக்காலப் பகுதியில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதால் சேவையாற்ற முடியாமல் போய் விட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது த.தே.கூட்டமைப்பு மற்றும் ஆட்சி புரியும் அரசாங்கம் ஆகியவற்றிற்கு இடையில் புரிந்துணர்வு செயற்பாடுகள் காணப்படுவதால் இதன்மூலம்தமிழ்மக்களுக்கு கிடைக்கவுள்ள நன்மைகளை குழப்பாது மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளுக்காக நடைபெறவுள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபை தேர்தலில் போட்டியிடாது விலகியிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2-15)

# கமக்கார அமைப்புக்களின் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் இயங்கும் கமக்கார அமைப்புக்களின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதற்கமைய உருத்திரபுரம் கமக்கார அமைப்புக்களான டி-8 இற்கு எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கும் டி-10 இற்கு அன்றைய தினம் பி.ப 2 மணிக்கும் நடைபெறும்.

குஞ்சுப்பரந்தனிலுள்ள கமக்கார அமைப்பினருக்கு மு.ப 10 மணிக்கும் பெரிய பரந்தனிலுள்ள கமக்கார அமைப்பினருக்கு அன்றைய தினம் பி.ப 2 மணிக்கும் நீவில் கமக்கார அமைப்பினருக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி மு.ப 10 மணிக்கும் உருத்திரபுரக்குளம் கமக்கார அமை ப்பினருக்கு அன்றைய தினம் பி.ப 2 மணிக்கும் சிவநகர் கமக்கார அமைப்பினருக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கும் சித்தி விநாயகர் கமக்கார அமைப்பினருக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கும் ஊற்றுப்புலம் கமக்கார அமைப்பினருக்கு அன்றைய தினம் பி.ப 2 மணிக்கும் நடைபெறும்.

புதுமுறிப்பு கமக்கார அமைப்பினருக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கும் ஜெயந்தி நகர் கமக்கார அமைப்பினருக்கு அன்றைய தினம் பி.ப 2 மணிக்கும் நடைபெறும்.

எனவே மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் தங்கள் பகுதி விவசாயிகளுக்கு பொதுக்கூட்டத்திற்கு அறிவிப்பதுடன் அமைப்புக்களுடைய கணக்கு விபரங்களை சீர் செய்து கணக்காய்விற்கு உட்படுத்தி நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அதனை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் உருத்திரபுரம் கமநல சேவை நிலைய பெரும்பாக அலுவலர் அறிவித்துள்ளார். (அ-2-254)

## தமிழ் அரசியல் கைதிகளின்

# பிள்ளைகளின் கல்விக்கு கைகொடுக்கும் திட்டம்

(முல்லைத்தீவு)

மாற்றத்தை நோக்கிய பயணம், தமிழ் மக்களின் வாழ்க்கையின் முனனேற்றத்திறகாக எனும் தொனிப பொருளில் கல்வியை தொடரமுடியாத மாணவர்களின் கல்விக்கு கைகொடுக்கும் செயற்றிட்டம் அனைத்து மாவட்டங்களிலும் தமிழர் முன்னேற்ற கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் கடந்த மாதம் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான விஜயத்தின் போது, வெலிக்கடை மற்றும் மகசின் சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள், பிள்ளைகள் போன்றோரை சந்தித்து அவர்களின் பிள்ளைகளுக்கு இந்த வருடம் முழுவதற்குமான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. மேலும பல உதவிகள் அடுத்த கட்டமாக அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இச் செயற்றிட்டம் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இணைப்பாளர்கள் மூலமாக குறித்த கைதிகளின் குடும்பங்களுக்கு கொண்டு போய் சேர்க்கப்படுகின்றது .

அத்தோடு அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நேரடியாகவும் வந்து அப்பியாசக் கொப்பிகளை பெற்றுச் செல்கின்றனர் .

இத் திட்டமானது குறிப்பிட்ட வரையறைக்குள் நின்று செயற்படாமல் அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது .

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கைதிகளின் பிள்ளைகளுக்கு அடுத்த வாரத்தில் குறித்த செயற்றிட்டம் தொடர்ச்சியாக நடைமுறை படுத்தப்படவுள்ளது. (அ-2-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர் அழிவுக்குள்ளான விவசாயிகள்

# இழப்பீடு பெற விண்ணப்பிக்குக

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2014-2015 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டு பயிர்விதைப்பு செய்யப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட மழைவெள்ளம் காரணமாக, பயிர் அழிவிற்கு உட்பட்டவர்கள் உரமானிய காப்பறுதி திட்டத்தில் இணைந்திருந்தால் இழப்பீட்டை பெறுவதற்கு விண்ணபிக்குமாறு கமத்தொழில் மற்றும் கமநலகாப்பு சபையின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் பிரதிப்பணிப்பாளர் பி.பூரணச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

2014-2015 ஆம் அண்டு காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டபோது மழை வெள்ளம் காரணமாக பயிர்கள் அழிவடைந்து இருந்தால், உரமானிய பசளைக் காப்புறுதி திட்டத்தில் இணைந்துள்ளவர்கள் தங்கள் பகுதியிலுள்ள கமநல சேவை நிலையங்களில் வழங்கப்படும் இழப்பீட்டு விண்ணப்பபடிவங்களை பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலும் இழப்பீட்டிற்குரிய கொடுப்பனவை கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையூடாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2-15)




## முல்லைத்தீவில் கவனயீர்ப்புப்போர்

காணாமற் போனவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவும் இணைந்து கலந்து கொள்ளும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட கச்சேரிக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

இதில் அரசியல் கைதிகளின் விடுதலை கோரியும் காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் உறவுகளின் நிலைகுறித்து கண்டறியப்பட வேண்டியும் அவர்களது உறவுகளினால் இப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-2-250)

## மணவாளக்கோல விழா

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான மணவாளக் கோல விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு 1008 சங்காபிஷேகத்துடன் விசேட பூசை நடைபெறவுள்ளது. மாலை 5 மணிக்கு சுவாமிக்கு விசேட பூசை நடைபெற்று முருகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். (அ-2)

## முல்லை.மாவட்ட செயலக கட்டட திறப்பு விழா

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் (CRA நிதி அனுசரணையுடன்) 220 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட செயலகத்தின் கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் யோசப் மைக்கல் பெரேரா கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபையின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பனர்கள் உட்பட பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2-15)




வடக்கு மாகாணத்தின் 500 பாடசாலைகளில் மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், கல்விப் பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள் ஆகியோர் இணைந்து பங்குபற்றல் முகாமைத்துவ அணுகுமுறை செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அதற்கான வளவாளர்களைத் தயாரப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட நடவடிக்கை முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலயத்தில் அண்மையில் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகப்பணிப்பாளர் பா.தனபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரமத விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பணிப்பாளர் ஏ.இராஜேந்திரன் கலந்து கொண்டு பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழை வழங்கி வைப்பதையும் பங்கேற்றவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## கிளி.கல்வி வலயத்திற்கு 137 ஆசிரியர்கள்

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு 137 ஆசிரியர்கள் பிறமாவட்டங்களிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேல் தெரிவித்துள்ளார். இவ் ஆசிரியர்களில் 30 பேர் நேற்றையதினம் பணிகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

அத்துடன், வருகை தரவுள்ள ஆசிரியர்களின் பாட ரீதியான விபரங்களைப் பெற்று, கிளிநொச்சி மேற்கு வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம், ஜெயபுரம் மகாவித்தியாலயம், கிராஞ்சி அ.த.க. பாடசாலை போன்ற ஆசிரிய நெருக்கடி நிலவுகின்ற பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## விபத்தில் இருவர் காயம்

வவுனியா, குருமன்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதியதில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்னளர். இவ் விபத்து நேற்று காலை இடம்பெற்றது. இதில் தபால் ஊழியரான கே.சுரேஸ்குமார் (வயது-34), மோட்டார் சைக்கிள் சாரதியான எஸ்.பசான் (வயது-19) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு பகுதியில் தபால் விநியோகத்திற்காக துவிச்சக்கர வண்டியில் சென்ற தபால் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரை அதே வீதி வழியாக வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் தபால் விநியோகிக்க சென்றவரும் மோட்டார் சைக்கிள் சாரதியும காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2-250)

## கலைக்கூறு-II பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளை சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண சபையின் கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் நடத்தவுள்ள கலைக்கூறு-II பயிற்சிக்கு குருளைச் சாரணர் தலைவர்களிடமும் மற்றும் சாரணர் பிரிவு தலைவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பயிற்சி நெறிக்கு பின்வரும் தகைமையுடைய சாரணர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கமைய வடமாகாணசபை 2013 ஆம் ஆண்டு நடத்திய கலைக்கூறு I-இல் பங்கேற்றவர்களும், 2002 ஆம் ஆண்டிற்கு பின்னர் கலைக்கூறு-II இல் பயிற்சியைப் பெற்று சாரணர்/குருளைச் சாரணர் பிரிவை நடத்திக் கொண்டிருப்பவர்கள் அல்லது நடத்த இருப்பவர்கள் உட்பட 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் கலைக்கூறு-I பயிற்சியை பெற்று சாரணர் குழுவை நடத்தி கொண்டிருப்பவர்கள் ஆகியோர் விண்ணப்பிக்க முடியும்.

முதலாவது பயிற்சி எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதியும் இரண்டாவது வதிப்பிடப் பயிற்சி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24,25,26 ஆம் திகதிகளில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சாரணர்கள், கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளரிடமும் துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட சாரணர்கள் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமும் விண்ணபப்படிவங்களை பெற்று பூரணப்படுத்தி அவர்களது சிபார்சுடன் மா.புவனேந்திரன் இல, 7/83, பலாலி வீதி திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற 021 222 7228 அல்லது 077 069 0923 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (அ-2-15)

# மக்களால் தெரிவு செய்யப்பட்ட என்னையே அச்சுறுத்துகின்றனர்

## ரவிகரன் விசனம்

வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனது வீட்டில் இராணுவத் தளபாடங்கள் இருப்பதாகக் கூறி கடற்படையினர் அவரது வீட்டினுள் சோதனையிட முற்பட்ட வேளை அதனை அவர் தடுத்து நிறுத்தியுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவில் றெட்பானா பாரதி வித்தியாலய மாணவர்களில் தாய், தந்தையரை இழந்தவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி விட்டு ரவிகரன் கள்ளப்பாட்டிலுள்ள தனது வீட்டிற்கு திரும்பிய நிலையிலேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அங்கு அவரது வீட்டு வாசலில் இருவர் நின்றுள்ளனர்.

இதன்போது ரவிகரனினால் எதிர்வரும் காலங்களில் மாணவர்களுக்கு வழங்கவென ஒதுக்கப்பட்ட கற்றல் உபகரணங்களையும் மாணவர்களுக்கு வழங்கிய மிகுதி பொருட்களையும் வாகனத்திலிருந்து எடுத்து வீட்டினுள் வைத்து விட்டு வெளியே வருகையிலேயே அவர்கள் உங்கள் வீட்டில் இராணுவத் தளபாடம் இருக்கின்றது எனக் கூறி உள் நுழைய முற்பட்டதாகவும் அதனை தான் தடுத்து நிறுத்தி தன்னை அடையாளப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர்கள் அது எமக்கு நன்றாகத் தெரியும் என்று தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அவர் வீட்டினுள் கொண்டு சென்று வைத்த பொருட்களை எடுத்து வந்து அவர்களுக்கு காண்பித்ததுடன் வீட்டை சோதனையிட வேண்டுமெனில், பொலிஸ் அனுமதியுடன் வர வேண்டும் என கூறியுள்ளார்.

இதனையடுத்து அவர்கள் அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டனர்.

ரவிகரனிடம் இது குறித்து தொடர்பு கொண்டு கேட்டபோது, வடக்கில் இராணுவ அடக்குமுறை அதிகரித்துள்ளதை இச் சம்பவம் காட்டுகிறது. பாடசாலை உபகரணங்களை இராணுவ தளபாடங்கள் என அடையாளப்படுத்தி சோதனை செய்தது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட என்னிடமே இவ்வாறான அத்துமீறல் சர்வ சாதாரணமாக மேற்கொள்ளப்படுகிற நிலையில் சாதாரண மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள்.

இதுபோன்ற அத்து மீறல்களுக்கெல்லாம் நாம் அஞ்சப்போவதில்லை. அடிபணியப்போவதுமில்லை. எத்தனை தடைகள் வரினும் தொடர்ந்தும் எம் மக்களுக்கான உரிமைக்குரல் வலிமையாக ஒலிக்கும் என்றார்.

அத்துடன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு ஒன்றை அன்றையதினம் பதிவு செய்ததாக அவர் கூறினார். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்தை இறைத்து பருந்துக்கு இரையாக்காதே.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புலம்பெயர் உறவுகளுடன் நல்லுறவைப் பேணுவது அவசியம்

நாட்டின் 67–வது சுதந்திரதின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சுதந்திரதின நிகழ்வில் இரா.சம்பந்தரும் சுமந்திரனும் கலந்து கொண்டமை மிகப் பெரிய தவறு எனத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் கருத்துரைத்துள்ளார்.

இந்நிலையில் சுதந்திரதின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கலந்து கொண்டமை கூட்டமைப்பிற்குள்ளும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இத்தகைய கருத்து முரண்பாடுகள், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர்; கட்சியின் மத்திய குழுவுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுப்பதில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. 67–வது சுதந்திரதின நிகழ்வில் சம்பந்தர் கலந்து கொண்டதில் நியாயங்கள் உண்டு என்று கூறுவதிலும் தவறில்லை.

ஆனாலும் கட்சியின் முக்கிய தலைவர்களுடன் கலந்துரையாடி, ஒரு தீர்மானத்தை எடுத்த பின்பு அதை நடைமுறைப்படுத்தும் போது தேவையற்ற விமர்சனங்கள் எழுவதைத் தடுக்க – தவிர்க்க முடியும்.

ஆனால், அப்படியாகத் தீர்மானம் எடுக்கும் நடைமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இல்லை என்பதை பல சந்தர்ப்பங்களில் உணர முடிந்துள்ளது. எதுவானாலும் இப்போதிருக்கின்ற நிலைமையில் தமிழ்த் தலைமைகள் எடுக்கின்ற தீர்மானங்கள் எழுந்தமானவையாக இருக்குமாயின் அதன் விளைவு பாரதூரமானதாகிவிடும் என்பதுடன் தமிழ் மக்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் பரிமாறத் தொடங்கிவிடும்.

ஆகையால், தமிழ்த் தலைமைகள் மிக நிதானமாகச் செயற்பட வேண்டியுள்ளது. அந்த நிதானம் என்பது தனி மனித தீர்மானங்களால் ஏற்படமாட்டாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு குறித்து சிங்கள அரசியல் தலைமைகள் விமர்சனம் செய்யலாம். முஸ்லிம் தரப்புக்கள் கூட வாதம் புரியலாம். ஆனால் தமிழ் மக்களிடையே விமர்சனங்கள் எழக்கூடாது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பில் புலம்பெயர் தமிழர்கள் வெறுப்பு அடைந்துள்ளனர். குறிப்பாக இலங்கையின் 67–வது சுதந்திரதின நிகழ்வில் இரா.சம்பந்தர் பங்குபற்றியமைக்கு புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளனர். இது தமிழினத்திற்குச் சாதகமானதல்ல.

இன விடுதலைப் போராட்டத்தில் புலம்பெயர் தமிழ் உறவுகளின் வகிபாகம் சாதாரணமானதல்ல. வன்னியில் யுத்தம் நடந்த போது சர்வதேசத்தில் இருக்கக் கூடிய எங்கள் உறவுகள் நடத்திய போராட்டங்கள்; கையளித்த மகஜர்கள்; மகிந்த மீது சர்வதேசத்திற்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

மகிந்த ராஜபக்ச அரசு மீது போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற சர்வதேசத் தீர்மானத்தின் பின்புலமாக இருந்தவர்கள் புலம் பெயர் தமிழர்கள் என்ற உண்மையை எவரும் மறந்தவிடலாகாது.

நிலைமை இதுவாகவிருக்கையில், புலம்பெயர் உறவுகளின் விருப்பங்களை அல்லது அவர்களின் கருத்தியலை நாம் செவிமடுக்காமல் விடுவது மகாதவறு.

அதேநேரம் இலங்கையில் இனத்துவ ஒற்றுமை அவசியம் என்பது உண்மையாயினும் அந்த ஒற்றுமை என்பது தமிழர்களின் விட்டுக்கொடுப்பால் மட்டும் ஏற்பட்டு விடக்கூடாது.

தமிழர்கள் விட்டுக்கொடுத்ததால் இனஒற்றுமை என்ற நிலைமை தோன்றுமாயின் தமிழ் இனத்தின் ஒற்றுமை குலையும்.

ஆம், ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை கூட்டமைப்பு ஆதரித்ததற்கும்; 67–வது சுதந்திரதின நிகழ்வில் சம்பந்தர் கலந்த கொண்டதற்கும் இடையில் வேறுபட்ட புலக்கட்சி ஏற்பட்டுள்ளது. அதன் விளைவு, மகிந்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய புலம்பெயர் தமிழர்கள் இப்போது சம்பந்தருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் நிலைமையை தோற்றுவித்து விட்டது.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானங்கள் மிகவும் நுட்பமாக அமைதல் அவசியம்.

# இராணுவத்தினருக்கும் சம்பள அதிகரிப்பு!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினருக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

பலாலியில் உள்ள இராணுவ மைதானதில் படையினர் மத்தியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்களை நினைவுகூர்ந்து தொடர்ந்து உரையாற்றிய அவர்,

எதிர்வரும் காலங்களில் இராணுவ வீரர்கள் தமது துறைசார்ந்த கற்கை நெறியினை மேற்கொள்ளவும் உயர் கல்வியினை தொடரவும் இராணுவப் பயிற்சி நெறிகளை மேற்கொள்ளவும் வழியமைக்கப்படவுள்ளது.

புதிய அரசின் இடைக்கால பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களின் விலைக்குறைப்பில் இராணுவ வீரர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

புதிய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள சம்பள அதிகரிப்பில் இராணுவ வீரர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

30 வருட கால யுத்தத்தினை முடிவுக்கு கொண்ட வந்த படையினருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை மக்களின் மீள்குடியேற்றம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் எதுவும் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ–4)

## காணாமல் போன லொறி களுத்துறையில் கண்டுபிடிப்பு

### தென்மராட்சி கிழக்கு கூ.சங்கத்துக்கு சொந்தமானது

2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யுத்தசூழ்நிலை காரணமாகக் காணாமற்போனதாகக் கூறப்பட்ட தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்துக்குச் சொந்தமான லொறி ஒன்று களுத்துறைப் பகுதி வாகன விற்பனை நிலையம் ஒன்றில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

களுத்துறைப் பகுதியில் உள்ள மோட்டார் வாகனங்கள் விற்கும் நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட லொறி நிற்பதாகத் கிடைத்த தகவலையடுத்து இந்து, பௌத்த கலாசாரப் பேரவையின் பொதுச்செயலாளரும் சட்டத்தரணியுமான இராமச்சந்திரனின் உதவியுடன் சங்கத்தின் தலைவர், உப தலைவர், பொதுமுகாமையாளர், வர்த்தக முகாமையாளர் அடங்கிய குழுவினர் களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்தனர்.

இதனையடுத்து களுத்துறை பொலிஸ் நிலைய அதிகாரி உள்ளிட்ட குழுவினர் அங்கு சென்று லொறியை மீட்டனர். அத்துடன் அந்த விற்பனை நிலையத்தின் உரிமையாளரான பெண் ஒருவரையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணின் கணவர் ஏற்கனவே திருட்டு வாகனம் விற்பனை செய்தமை தொடர்பாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அரசியலுக்குள் விமுக்தி?

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் மகன் விமுக்தி குமாரதுங்க எதிர்வரும் 8–ம் திகதி தனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமுக்தி கம்பஹா மாவட்டத்தில் தனது அரசியலை ஆரம்பிக்க உள்ளார். கம்பஹா மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வைபவம் 8–ம் திகதி நடைபெறவுள்ளதுடன் அதில் விமுக்தி குமாரதுங்க கலந்து கொள்ளலாம என கூறப்படுகிறது.

இந்த வைபவத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒழுங்கு செய்துள்ளதுடன் அதில்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்கிறார்.

நிட்டம்புவ விளையாட்டு மைதானத்தில நடைபெறவுள்ள இந்த வைபவத்திற்கு முன்னர் பண்டாரநாயக்க சமாதியில் மலரஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

இதன் பின்னர் வைபவத்தில் கலந்து கொள்ளும் அதிதிகள் ஊர்வலமாக மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

விமுக்தி குமாரதுங்கவை எதிர்காலத்தில ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைதுவத்திற்கு கொண்டு வரும் எண்ணம் முன்னாள் ஜனாதிபதிக்கு இருப்பதாக கூறப்படுகிறது. (எ–11)

## கஞ்சாவுடன் இளைஞன் கைது

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை கடுமையான எச்சரிக்கையுடன் 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

17 வயது இளைஞர் ஒருவன் நெல்லியடி நகரப்பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்த போது நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 25 கஞ்சாப் பொட்டலமும் மீட்கப்பட்டது .

இந்நிலையில் குறித்த இளைஞனை நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்றைய தினம் ஆஜர்படுத்தினர். அவரை கடுமையான எச்சரிக்கையுடன் 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். (எ–60)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்த சங்காபிஷேக நிகழ்வு நடைபெறும். (எ–11)

## இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிறு நண்பகல் 12 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள டி.சி.எம் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் 2015இல் தமது சேவைக்காலத்தை பூர்த்தி செய்து யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் அனைவரையும் ஒன்றுகூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ–11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



பெற்றோருக்கான செய்தி

மிகச் சுலபமான இரகசியம் என்னவெனில் 6 வயது வரை அவனை ஓர் ராஜா போல் நடத்துங்கள். இதைத் தான் பஞ்சதந்திரங்கள் கூறுகின்றன. இதை நாங்கள் சோதித் துப் பார்த்தும் விட்டோம். (ஜீவாஸ்ரமத்தில்) 6–14 வயது வரை ஒரு ராஜகுமாரனைப்போலும் 14 வயதுக்கு மேல் ஒரு நண்பனைப்போலும் ஒரு குழந்தையை நடத்த வேண்டும். அவன் உங்களை விட சிறியதாக இருப்பதால் அவனை உங்களை விட கீழ்த்தரமாக நினைத்து நடத்தக்கூடாது. ராஜா என்பதன் பொருள் நீங்கள் அவன் ஆட்டுவிக்கும்படியெல்லாம் ஆடவேண்டும். இதை உங்களால் செய்ய முடியுமா? எந்தவிதமான மனோதத்துவமும் இங்குதேவையில்லை. இதுதான் மனோதத்துவம். ஒரு ராஜாவிடம் எவ்வாறு நாம் நடந்து கொள்வோமோ அதேபோல் நடந்து கொள்ளவேண்டும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பரந்த மனம் வேண்டும்



❖ எல்லையற்ற ஆற்றலும், தூய்மையும் உனக்குள்ளேயே நிறைந்து இருக்கிறது.

❖ ஒவ்வொரு மனிதனும் தனக்கென தனி இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

❖ தன்னை நெறிப்படுத்தி வாழ்பவனே, உலகத்தையும் சரியான பாதையில் செலுத்தும் தகுதி படைத்தவனாகிறான்.

❖ பரந்த இந்த உலகம் போல எப்போதும் உன் மனதையும் விரிவுபடுத்திக் கொள்.

❖ மனிதன் எப்போதும் தாழ்ந்த உண்மையில் இருந்தே, மேலான உண்மைக்கு பயணம் செய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணம் ஒரு பார்வை . . .






ஐந்தாவது உலக கோப்பை போட்டித் தொடரை அவுஸ்திரேலியா, நியூசிலாந்து இணைந்து நடத்தின. பென்சன் ஹெட்ஜஸ் உலக கோபபையாக நடந்த இந்த தொடரில் பல புதுமைகள் அரங்கேறின. முதல் முறையாக வண்ண சீருடை, கறுப்பு சைட் ஸ்கிரீன், 2 வெள்ளை பந்து, மின்னொளி வெளிச்சத்தில் பகல்-இரவு ஆட்டம், முதல் 15 ஓவர்களுக்கு உள் வட்டத்துக்கு வெளியே 2 களத்தடுப்பாளர்கள் மட்டும், அதன் பிறகு உள் வட்டத்துக்குள் குறைந்தபட்சம் 4 களத்தடுப்பாளர்கள் என்று களத்தடுப்பு கட்டுப்பாடுகள், விக்கெட்டுகளில் மைக்ரோ போன்ஞ என்று அதிரடி மாற்றங்கள். மழையால் பாதிக்கப்படும் போட்டிகளில் இலக்கை நிர்ணயிப்பதற்காக அறிமுகமான புதிய வதி முறை கடுமையாக விமர்ச்சிக்கப்பட்டது. நிற வெறி சர்ச்சை காரணமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்க அணிக்கு முதல் முறையாக உலக கோப்பையில் விளையாட அழைப்பு விடுக்கப்படடது.

அறிமுக தொடரிலேயே அந்த அணி அரை இறுதி வரை முன்னேறி அசத்தியது.களத்தடுப்பு கட்டுப்பாடுகளை பயன்படுத்தி அதிக ஓட்டங்கள குவிக்கும் முனைப்பில், அதிரடி ஆட்டக்காரரை 'பிஞ்ச் ஹிடடர்' ஆக முன்னதாகவே களமிறக்கும் வியூகத்தை பல அணிகள் முயற்சித்தன. மொத்தம் 9 அணிகள். ஒவ்வொரு அணியும் மற்ற 8 அணிகளுடன்ரவுண்ட் ராபின் லீக் சுற்றில் மோதின. அசாருதீன் தலைமையில் களமிறங்கிய இந்திய அணியில் சச்சின், காம்ப்ளி, அஜய் ஜடேஜா இடம்பெற்றனர். சச்சின் அப்போது 4 ஆவது, 5 ஆவது வீரராகக் களமிறங்கியதால் பெரிதாக கைகொடுக்க முடியவில்லை.

முதல் லீக் ஆட்டத்தில் இங்கிலாந்திடம் 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் போராடி தோற்ற இந்திய அணிக்கு இந்த தொடரில் அதிர்ஷ்டமில்லை என்று தான் சொல்ல வேண்டும். அடுத்து இலங்கையுடன் நடந்த ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது. அவுஸ்திரேலியாவுடன் மோதிய ஆட்டத்தில் நன்றாக விளையாடிய கட்டன் அசாருதீன் (93), மஞ்ரேக்கர் (47 ஓட்டங்கள்) இருவரும் ஓட்டங்கள் அவுட் ஆனார்கள். கடைசி 2 பந்தில் மனோஜ் பிரபாகரும், வெங்கடபதி ராஜூவும் ஓட்டங்கள் அவுட் ஆக ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வென்றது அவுஸ்திரேலியா.

மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, தென்னாபிரிக்க அணிகளிடமும் தோற்றதால் அரை இறுதி வாய்ப்பு பறிபோனது. பாகிஸ்தானுடன் சிட்னியில் மோதிய ஆட்டத்தில் 43 ஓட்டங்கள வித்தியாசத்தில் வென்றது மட்டுமே இந்திய ரசிகர்களுக்கு ஆறுதலாக அமைந்தது. நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 49 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 216 ஓட்டங்கள் குவித்தது. சச்சின் அதிக பட்சமாக ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ் தான 48.1 ஓவரில் 173 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆனது.

சிம்பாவே அணிக்கு எதிராக நடந்த லீக் ஆட்டத்தில் கிடைத்த 2 ஆவது வெற்றி இந்தியாவுக்கு எந்த வகையிலும் உதவவில்லை. மொத்தம் 8 ஆட்டத்தில் 5 தோல்வி கண்டு ஏமாற்றத்துடன் வெளியேறியது. ஆக்லாந்தில் நடந்த முதலாவது அரை இறுதியில் பாகிஸ்தான் 4 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. சிட்னி மைதானத்தில் நடந்த 2 ஆவது அரை இறுதி ஆட்டம் சர்ச்சைக்குரியதாக அமைந்தது. மழையால் பாதிக்கப்பட்ட அந்த போட்டியில், இங்கிலாந்துக்கு எதிராக 43 ஓவரில் 252 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடி தென்னாபிரிக்காவுக்கு கடைசி 13 பந்தில் 22 ஓட்டங்கள தேவைப்பட்டது.






அந்த சமயம் பார்த்து மழை கொட்டியதால் ஆட்டம் 12 நிமிடம் தடைப்பட்டு மீண்டும் தொடங்கியபோது, ஒரு பந்தில் 21 ஓட்டங்கள் எடுக்க வேண் டும் என்று நடுவர்கள் அறிவிக்க, தென்னாபிரிக்க வீரர்கள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். கேலிக்கூத்தான விதியால் அந்த அணியின் இறுதி வாய்ப்பு பறிபோனது. மெல்பேர்னில் நடந்த இறுதிப் போட்டியில், பாகிஸ்தான் 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 249 ஓட்டங்கள் குவித்தது. கட்டன் இம்ரான் கான் 72, மியான் தத் 58, இன்சமாம் 42, அக்ரம் 33 ஓட்டங்கள்விளாசினர். இங்கிலாந்து 49.2 ஓவ ரில் 227 ஓட்டங்கள மட்டுமே எடுத்து ஓல் அவுட் ஆக, பாகிஸதான் அணி உலக கோப் பையை முத்தமிட்டது. ஆட்ட நாயகனாக பாகிதானின் வாசிம அக்ரம், தொடர் நாயகனாக நியூலாந்து கட்டன்மார்டின்குரோவ் தேர்வு செய்யப்பட்டனர்.

- மார்டின் குரோவ 9 போட்டியில் 456 ஓட்டங்கள் குவித்து (அதிகம் 100* சராசரி 114) முதலிடம் பிடித்தார.
- விக்கெட் வேட்டையில் பாகிஸதானின் வாசிம் அக்ரம் 10 போட்டியில் 18 விக்கெட்டு கைப்பற்றி முதலிடம் பிடித்தார்.
- பாகிஸ்தானின் ரமீஸ் ராஜா கிறிஸ் ட்சர்ச்சில் நியூசிலாந்துக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 119 ஓட்டங்கள் விளா சியது தனி நபர் அதிக பட்ச ஓட்ட எண்ணிக்கையாக அமைந்தது
- மொத்தம் 8 சதங்கள் அடிக்கப்பட்டன. ஆஸி. வீரர் டேவிட் பூன் 2 முறை 100 ஓட்டங்கள் எடுத்தார்.
- சிம்பாவேக்கு எதிராக இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 313 ஓட்டங்கள் குவித்தது அதிகபட்ச ஸ்கோராகும

## சர்வதேச ஒலிம்பிக் செயலமர்வில் யாழ்.பல்கலை.மாணவன் தெரிவு



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவன் எம்.அன்ரனிஸ் சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தினால் கிறீஸில் ஒலிப்பிக் சதுக்கத்தில் 23 மே தொடக்கம் 6 ஜுன் 2015 வரை இடம்பெறும் 55 ஆவது செயலமர்வில் கலந்து கொள்வதற்காக இலங்கை ஒலிம்பிக் சங்கத்தினால் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் இலங்கை ஒலிம்பிக் சங்கத்தினால் பண்டாரவளையில் நடத்தப்பட்ட செயலமர்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் பங்கு பற்றி சிறப்பான பெறு பேற்றை வெளி ப்படுத்தியதன் மூலம் இச்சர்வதேச செயல மர்விற்குத் தெரிவு செய்யப்ப ட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகபூப்பந்தாட்ட அணியின் தலைவரும் கரம் அணியின் அங்கத்தவரும் 2014 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சகலதுறை விளையாட்டு வீரருக்குரிய சிறப்பு விருதை பெற்றுக் கொண்டவராவார்.

## இலங்கை பல்கலைக்கழக ஆலோசனை சபைத்தலைவராக கண்ணதாசன் தெரிவு



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு ஆலோசனை சபைத் தலைவர் S. கண்ணதாசன் கடந்த 29. 01.2015 அன்று இடம்பெற்ற இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டு சங்கத்தின் (Sri lanka Universities Sports Association-SLUSA) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சங்கத்தின் நடப்பு வருடத்திற்கான (2015/2016) தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப் பட்டுள்ளார். இலங்கையிலுள்ள 14 அரச பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இச்சங்கத்தினது வருடாந்தப் பொதுக்கூட்டமானது வயம்ப பல்கலைக்கழகத்தில் மேற்படி திகதியில் நடைபெற்றது.

S.கண்ணதாசன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளராவார். இச்சங்கத்திற்குத் தலைவராக முதன்முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அடுத்தவரும் (2016) நடை பெறவுள்ள 12ஆவது இலங் கைப் பல்கலைக்க ழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடத்தவுள்ள நிலையில் இந்நிய மனம் இடம் பெற்றுள்ளமை சிறப்பாக அமைந்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந். பந்துவீச்சாளர்களுக்கு உதவி - பிரெட் லீ



இந்திய பந்துவீச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்க தயாராக இருப்பதாக அவுஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ கூறியுள்ளார்.

இந்திய அணியில் துடுப்பாட்ட வரிசை வலுவாக இருந்தாலும், பந்துவீச்சை பொறுத்தவரை இந்திய வீரர்கள் முக்கியமான நேரங்களில் சோபிக்க தவறிவிடுகின்றனர். இதன் காரணமாக வெற்றி வாய்ப்பும் நழுவி விடுகிறது.

இந்நிலையில் உலகக்கிண்ணப் போட்டியின் போது இந்திய பந்து வீச்சாளர்களுக்கு உதவி செய்ய தயாராக இருப்பதாக அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் பிரெட் லீ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், இந்திய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு பந்து வீச்சு நுட்பங்களை கற்றுக் கொடுக்க நான் தயாராகவே இருக்கிறேன்.

அதே நேரத்தில் இப்பணியை என்னால் முழு நேரமாக ஏற்க முடியாது. ஏனெனில் உலகம் முழுவதும் உள்ள வேகப்பந்து வீச்சாளருக்கு உதவ வேண்டும் என்பதே எனது நோக்கம் என்று கூறியுள்ளார். (க)

## இலங்கை மீதான...

கோரிக்கை விடுக்கக்கூடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட்டாரங்களை மேற்கோள்காட்டி இவ்வூடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் அமர்வில் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போதைய அரசியல் நிலைமைகளைக கருத்தில் கொண்டு அடுத்த மாதம் இடம் பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக குழுவின் அமர்வில் இலங்கை மீதான தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதை ஒத்திவைக்கும்படி ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம் அமெரிக்கா கோரிக்கை விடுக்கக்கூடும்.

தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இதனை சூசகமாக சுட்டிக்காட்டியதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டமை குறித்து மகிழ்ச்சியடையும் அமெரிக்கா, புதிய அரசாங்கத்துடனான உறவுகளை மேம்படுத்துவதற்கு பிரகாசமான எதிர்காலம் இருப்பதாக நம்புகிறது.

எனவே, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக குழுவில் இலங்கை மீது கடுமையான தீர்மானத்தைக் கொண்டு வந்து முறுகல் நிலையை ஏற்படுத்த அமெரிக்கா விரும்பவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் கடுமையான தீர்மானத்தை கொண்டு வருவது தேசியவாத சக்திகளை தூண்டிவிடும் எனவும், அது நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றி பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தக்கூடும் எனவும் நிஷா தேசாய் பிஸ்வால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எச்சரித்ததாகவும் தெரியவருகின்றது.

புதிய அரசாங்கம் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு முன்பாக 100 நாள் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஏராளமான விடயங்களை நிறைவேற்ற வேண்டிய நிலையிலுள்ளது.

இந்நிலையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீது கடுமையான தீர்மானத்தைக் கொண்டு வருவது, 100 நாள் வேலைத்திட்டத்தில் இருந்து அரசாங்கத்தின் கவனத்தை திசை திருப்பிவிடும் எனவும் நிஷா தேசாய் பிஸ்வால் கூறியுள்ளார்.

அதேவேளை, தமிழ் மக்களின் பிரச்சினைகளை மூடிமறைப்பதற்கு தாம் அனுமதிக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் நிஷா தேசாய் பிஸ்வாலிடம் உறுதியாக தெரிவித்துள்ளனர்.

கொழும்புக்கும் வாஷிங்டனுக்கும் இடையில் நெருக்கம் அதிகரித்து, ஏனைய விடயங்கள் முன்னுரிமை பெறும் நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பின்தள்ளப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் செப்ரெம்பர் மாத அமர்விலும்கூட இலங்கை மீதான தீர்மானம் முன்வைக்கப்படுமா என்பதை இப்போது உறுதியாக கூற முடியாது என்று கூட்டமைப்பின் செயற்பாட்டாளர் ஒருவர் கவலை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கம் தனது நலன்களிலேயே கவனம் செலுத்துகிறது. புதுடில்லியும், வாஷிங்டனும் தமது நலன்களிலேயே கவனம் செலுத்துகின்ற நிலையில், தமிழ் மக்களைத் தவிர, தமிழர்களின் நலனில் எவருமே கரிசனை கொள்ளவில்லை. இதனை நாம் யாரிடம் சொல்வது? என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் என இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

## உலக வங்கி...

அமெரிக்காவுக்கு மேற்கொள்ளவுள்ள சுற்றுப் பயணத்தின் போது தாம் இந்த கோரிக்கையை விடுக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த கால ஆட்சியின் போது உலக வங்கி இலங்கைக்கு வழங்கிய நிவாரணம் மற்றும் கடன் தொகையை நீர் போல விரயம் செய்துள்ளனரா அல்லது குறித்த பணத் தொகையை கையாடல் செய்துவிட்டார்களா என்பது குறித்ததே அவர் விசாரணை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கவுள்ளார்.

மேலும் இலங்கையில் கடந்த காலங்களில் நடைபெற்ற களவு, மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பை கோரவுள்ளதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## மேர்வின் சில்வா...

அபிவிருத்தி திட்டத்தின்போது பெருந் தொகை பணத்தை துஸ்பிரயோகம் செய்தார் என்ற அடிப்படையிலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மேர்வின் சில்வா, 15மில்லியன் ரூபாய்களை பெற்றுக்கொண்டதாக சிசிர தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதனை தவிர கிரிபத்கொட சுகத வெலந்த சன்கமய என்ற திட்டத்துக்கும் 2 இலட்சம் ரூபாயை முன்னாள் அமைச்சர் பெற்றுக் கொண்டதாக முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (எ-11)

## இராஜதந்திரிகள் 36...

ளாகவும், அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்ட 36 பேரையே நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சு பணித்துள்ளது.

இவ்வாறு திருப்பி அழைக்கப்பட்டோரில் படைத்துறை ஊடக மத்திய நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்லவும் அடங்கியுள்ளார். இவர் தற்போது அவுஸ்திரேலியாவில் பணியாற்றி வருகிறார்.

அதேவேளை, அரசியல் செல்வாக்கில் தூதுவர்களாக நியமிக்கப்பட்ட 29 பேரை நாடு திரும்புமாறு புதிய அரசாங்கம் ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வடக்கில் இராணுவக்...

மணியளவில் விஜயம் மேற்கொண்ட பாதுகாப்பு இராஜாங்கச் அமைச்சர் பலாலி விமான நிலையத்திற்கு அருகாமையிலுள்ள இராணுவ வெற்றி நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் பலாலியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ மைதானத்தில் படையினர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருட கால யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவ வீரர்களிற்கு நன்றியினை தெரிவிக்கின்றேன். 30 வருடகால போரின் போது தமது அங்கங்களினை இழந்த ஊனமுற்ற படையினரினை நான் முதலில் சந்தித்தேன்.

இவ்வாறு அங்கங்களினை இழந்த படையினருக்கும் அவர்களதுஉறவினர்களிற்கும் நாம் தொடர்ந்தும் உதவி செய்வோம்.

நாட்டில் நிரந்தரமான சமாதானம் நிலவவேண்டும் என்பதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் எதிர்பார்ப்பாகும்.

கடந்த 30 வருட கால போரின் போது ஏற்பட்ட தமிழ் மக்களின் இழப்புக்களிற்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதும் அவ்சியமானதாகும்.

வடக்கிலுள்ள பொதுமக்களின் காணிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது. மேலும் இராணுவத்தினர் வடக்கில் எக்காரணம் கொண்டும் குறைக்கப்படமாட்டார்கள்.

கடந்த காலங்களில் இராணுவம் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக தவறான பிரசாரம் செய்யப்பட்டிருந்தன. தமது சுயநல எண்ணங்களிற்காக பாதுகாப்பு படையினர் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயற்படக்கூடாது.

யுத்தத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்களினை இவ்விடத்தில் நினைவு கூருவதோடு எதிர்வரும் காலங்களில் இராணுவத்தினருக்கு பல திட்டங்கள் வழங்கவுள்ளோம் என்றார் அவர். (எ-4)


## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Demolition of the Old Medical Ward– 2 Story Building & Construction of Guard Wall at Ward No 22 | 500.00 | 20,000.00 | 91 | Materials 1.2<br>Demolition 1.6<br>Construction of Guard Wall 0.4 | C8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 09.02.2015 until at 4.00 pm on 18.02.2015. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 19.02.2015, late bides will be rejected. Bids will be open at 10.15 hrs at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

Director (Chairman)
07.02.2015

Regional Procurement Committee
Teaching Hospital, Jaffna

(C-034)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**CCTV CAMERA INSTALLATION COURSE**
யாழில் முதல்முறையாக!
அதிக வருமானம் பெறக்கூடிய
cctv கமரா பொருத்துதல்
பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது
பதிவு மற்றும் விபரங்களுக்கு
GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna
T.P. 0779086737 (9451)

Feb 14, 15ஆம் திகதிகள் நடைபெறவுள்ள
SLAS (LIM) போட்டிப் பரீட்சை கருத்தரங்கு
காலம்:-2015.02.12 வியாழன்
2015.02.13 வெள்ளி
நேரம்:-மு.ப 8.30-பி.ப 3.30
விரிவுரை:-P.உமாசங்கர் & P.கமலதாசன் உட்பட. கணக்காளர் சேவை, நிர்வாக அலுவலர் தமிழ் விரிவுரையாளர்கள்.
விடயம்:-4 பாடங்களின் புதிய வினாத்தாள் புள்ளியிடல் திட்டம். சிங்கள மொழி, தமிழ் வினாக்கள், எதிர்பார்க்கை வினாத்தாள்.
கட்டணம்:-2000ரூபா
இடம்:-ஐடியல் அக்கடமி
கொமர்ஷியல் வங்கி முன்பாக
வெள்ளவத்தை, கொழும்பு. (9448)
தொடர்புக்கு:- 0718130390, 0775265344, 0112363060

**ஆங்கில வகுப்பு**
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் (O/L), (A/L) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- M.Rajan -0772286054 (9440)

வட மாகாணத்தில் ஆங்கில மொழிக் கற்கை நெறிகளுக்குப் புகழ்வாய்ந்த ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் புதிய பிரிவுகள் ஆரம்பம்
**DIPLOMA IN ENGLISH**
Batch I: 07.02.2015 at 3.00 P.M
(இந்தப்பிரிவானது சனி, ஞாயிறு தினங்களில் மாலை 3.00 - 5.00)
Batch II: 10.02.2015 at 4.30 P.M
(இந்தப்பிரிவானது கிழமை நாட்களில் மாலை நேரங்களில் திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் மாலை 4.15- 6.00 வரை)
ஆறு மாதங்கள் நடைபெறும் இந்த ஆங்கிலப் பாடநெறியில் இணைவதன் மூலம் ஆங்கில மொழியில் மிகச் சிறந்த புலமையைப் பெற்றிடுங்கள்.
**SPOKEN SINHALA**
Batch I: 07.02.2015 at 10.00 A.M
Batch II: 08.02.2015 at 03.00 P.M
(சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறும் மூன்று மாத கால பாடநெறியாகும்)
**E-CITY COLLEGE OF ENGLISH**
இல-372D, முதலாவது மாடி, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212217106 / 0773400418 / 0774924166 / 0770610271 (சி-031)


# அமைச்சர்...

தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் உருவ பொம்மையொன்று ஆர்ப்பாட்டக்காரர்களினால் எரிக்கப்பட்டபோது, அங்கிருந்த பொலிஸார் தீ பரவாமல் அதனை அணைத்தனர்.

அவ்வேளையில், பொலிஸாருக்கும் ஆர்பாட்டக்காரர்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டபோது பொலிஸாரால் அந்த உருவ பொம்மை வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கிழக்கு மகாண சபையின் ஆட்சி மாற்றத்தின் போது, முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு உறுப்பினரான ஏ.எம்.ஜெமீல் புதிய முதலமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என்று சாய்ந்தமருது பிரதேசத்திலிருந்து கோரிக்கை வந்திருந்தது.

ஆனால், முதலமைச்சர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஹாபிஸ் நசீர் அஹமட்டையே முஸ்லிம் காங்கிரஸின் தலைமை பரிந்துரை செய்தது.

இந்த நியமனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள ஏ.எம்.ஜெமீல், அதற்கு ஆதரவை தெரிவிக்கும் உறுதிப் பத்திரத்தில் கையொப்பமிட மறுத்துவிட்டதாக தெரியவருகின்றது.

தனக்கு அந்த பதவி வழங்கப்படா விட்டாலும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியுடைய ஒருவருக்கு வழங்க வேண்டும் என்று அவரால் கட்சித் தலைவரிடம் வலியுறுத்தப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதனிடையே, ஏ.எம்.ஜெமீலை கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்ய கட்சித் தலைமை முடிவு செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் நேற்று நண்பகல் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்று கட்சியின் சாய்ந்தமருது பிரதேச மத்திய குழு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (எ-11)

# கிழக்கு முதலமைச்சர்...

ளைச் சேர்ந்த ஹாபிஸ் நசீர் அஹமட் நேற்று மாலை ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் இந்த பதவிப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் 2012-ம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

குறித்த உடன்பாட்டின்படி அடுத்த இரண்டு ஆண்டு பதவிக் காலத்திற்கு ஹாபிஸ் நசீர் அஹமட் முதலமைச்சராக பதவி வகிப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# துறைமுக...

ர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவை ஆராய்ந்த பின்னரே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இத் துறைமுகத் திட்டம் நிறுத்தப்படுமிடத்து சீன அரசாங்கம் மிகப்பெரிய நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கும்.

இருப்பினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டு உறவுகளை சிறந்த முறையில் பேணுவது தொடர்பில் உறுதியளித்ததை தொடர்ந்து

இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஜனாதிபதி எதிர்வரும் மார்ச மாதம் சீனாவிற்கான விஜயத்தினை மேற்கொள்ளும் போது இத்திட்டம் தொடர்பில் சீன அரசுடன் கலந்துரையாடவுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# இலங்கையின்...

மாக இலங்கை வந்துள்ள சீனாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் லியு ஜியன் சோ நேற்று செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான பொருளாதார ஒத்துழைப்புக்களை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம்.

கடந்த காலத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு சென்ற விடயம் குறித்து இந்தியா கவலை வெளியிட்டிருந்தது.

வேறு எந்த நாடுகளுடனும் பகைத்துக் கொள்வதற்காக சீனா இலங்கையைப் பயன்படுத்தவில்லை. இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மார்ச் மாதம் சீனாவுக்கு வரவுள்ளார். இதே போன்று இந்திய பிரதமரது வருகையையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கொழும்புதுறைமுக நகர அபிவிருத்திக்கு புதிய அரசு ஒப்புதல் அளித்துள்ளதை நாம் வரவேற்கிறோம். அதேபோல ஏனைய திட்டங்களையும் முன்னெடுக்க அந்த அரசுடன் நாம் கலந்துரையாடி வருகிறோம் என்றார். (எ-11)

# சீனாவுக்கிடையில்...

சீனாவின் சேங்க்து விமானத்தில் இருந்து புறப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி இரவு 9.50மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க உள்ளது.

இதனையடுத்து 10ஆம் திகதி முதல் வாரம் தோறும் எயார் சைனா விமான சேவை நிறுவனம் இலங்கைக்கான 4 விமான சேவைகளை நடத்த உள்ளது.

எயார் சைனா விமான சேவையா மக்கள் சீன அரசின் தேசிய விமான சேவையாகும்.

எயார் சைனா விமானம் இலங்கைக்கா சேவை ஆரம்பிப்பதை முன்னிட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைபவம் ஒன்று நடைபெறவுள்ளதுடன் அதில் சீன பிரதிநிதிகளும், 'இலங்கையின் துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுனரணதுங்கவும் கலந்து கொள்ள உள்ளனர். (எ-1)


**ஆறாம் ஆண்டு நினைவலைகள்**
**அருளானந்தம் அருள்றூபன்**
தோற்றம் 1967 - 12 - 09

மறைவு 2009 - 02 - 07
ஆண்டு ஆறு ஆன போதும் ஆறவில்லை எம்மனது
தூண்டு சுடரொளியாய் எமைக்காத்து வாழ்ந்தவரே
ஆண்டவன் தாள் சேர்ந்திட்ட அன்புருவமானவரே
நீண்ட வழி நோக்கி நித்தமும் ஏங்குகிறோம்.
யோகபுரம், மல்லாவி. அப்பா, அம்மா, சகோதரர், சகோதரிகள்.

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்**

மண்ணில் 09.02.1948 விண்ணில் 08.01.2015
**அமரர் தங்கராசா ஜெயராசா**
(உரிமையாளர், ஜெயராசா படமாளிகை, பிரதான வீதி, பருத்தித்துறை)
திங்களொன்று ஓடிச் சென்றதுவே எம்
அன்புத் தெய்வம் எம்மை விட்டகன்று
இணையில்லா நல்வாழ்வை எமக்களித்து நீங்கள்
இறையடி சேர்ந்தீரே !
கண்களில் கண்ணீர் வழிந்தோட சென்ற
திசைதனைப் பார்த்து ஏங்கி நிற்கின்றோம்
மீண்டும் எப்போது எமை நாடி வருவீர் என்று ...

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த யாவருக்கும் எங்கள் குடும்பம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (07.02.2015) இன்று சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கடற்கரையிலும் வீட்டுக் கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (சி-022)
ஒடக்கரை, பருத்தித்துறை.
தகவல் : குடும்பத்தினர்
தொ.பே.இல : 077 979 1046
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)

**கனடா EXPRESS ENTRY VISA முதல் கட்டமாக 779பேர் தெரிவு!**
2015ம் ஆண்டு 3 இலட்சம் வரையானோருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கும் கனேடிய அரசாங்கத்தின் அதிரடி அறிவிப்பின் பிரகாரம், பொருளாதார குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் 779 பேர் கடந்த ஜனவரி 31ம் திகதி நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.
ஒரு வருடத்துக்குக் குறையாத தொழில் அனுபவத்துடன் துறைசார் பட்டமொன்றையும் கொண்டிருக்கும் எவரும் கனடா Express Entry Visaவுக்கு விண்ணப்பிக்கலாம்
Express Entry Visa என்றால் என்ன?
விண்ணப்பிப்பதற்கான தகுதி என்ன?
என்னென்ன தொழில்வாய்ப்புக்கள் உண்டு?
விண்ணப்ப படிமுறைகள் எவை?
அனைத்து விபரங்களை அறிந்துகொள்ள பாருங்கள்
www.sikaram.lk
info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி விண்ணப்பிப்பதற்கான தகுதியை அறிந்துகொள்ளுங்கள் (சி-033)
கனேடிய குடிவரவுத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற முகவரின் அனுமதியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தச் சேவையை வழங்கும் ஒரே நிறுவனம்!
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd., 275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 [illegible]


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org